எங்கெங்கு காணினும் சக்தியடா

சக்தி

பெண்கள் மேம்பாட்டு பன்மொழி மின்னிதழ்

மலர்-2 இதழ்- 01 | நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி | செப்டம்பர் 2025

செப்டெம்பர் 5 -
ஆசிரியர் தினநாள்

கட்டுரை

ஒத்துழையாமை இயக்கத்தில் பெண்கள்
- எஸ். சாந்தினி பீ
சரமை
- இரா. சைலஜா சக்தி
தாலி குறித்த கல்வெட்டு
- மா.மாரிராஜன்
ஆதிசக்தி வரலாறும் வழிபாடும்
- செ. ராஜேஸ்வரி

கதை

மறுபடியும் அவள்
- இரம்யா நடராஜன்
விதை நெல்
- வெ.மைதிலி

கவிதை

எந்நாளும் மாறாத தாய்மை நெஞ்சம்
- பாவலர் கருமலைத் தமிழாழன்
குருதித் தெளிப்பு
- வித்யா மனோகர்
அகிலத்தை வென்றிடு அக்னிச்சிறகே
- இளங்கவி. தீபிகா சுகுமாரி
அம்மா
- கேள்விக்காரன்
பெண்ணுக்கு நீதி
- கவிஞர் பாரதிதாசன்
காதல் வன்முறை !
- கனியமுது அமுத மொழி
A dead rose in Tami (மரணித்த மலர்)
- செ. ராஜேஸ்வரி

தொடர்கதை

Aranyeni
- *Vijeni*
தைரியலட்சுமி
- வை.மு.கோதைநாயகி

நேர்காணல்

பூரணி தஞ்சாவூர் ரமேஷ்
- மேனகா நரேஷ்

மேலும் பல...

எங்கெங்கு காணினும் சக்தியடா!
சக்தி
பெண்ணிதழ்

மலர் -2 இதழ் - 01 செப்டம்பர் 2025

நிறுவனர் &
தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் செ.ராஜேஸ்வரி

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி [USA]

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா
சுப்ரமணியன்[சிட்னி]

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் [NJ]

Shakthi

Printed and Published by :
E.Satish Rajkumar [Advocate]

3/422, Thiruvalluvar Street,
Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu – 625 018.
Ph : +91 7871123226,
+91 7010997630

கட்டுரைகள் அனுப்ப..
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில்
இடம்பெற்றுள்ளகருத்துகள்
அனைத்தும் கட்டுரையாளர்களின்
கருத்துகளே ஆகும். அவற்றுக்கும்
இதழாசிரியருக்கும் எந்தத்
தொடர்பும் இல்லை

உள்ளடக்கம்

கவிதைகள்

1. எந்நாளும் மாறாத தாய்மை நெஞ்சம் 2
   - பாவலர் கருமலைத் தமிழாழன்
2. குருதித் தெளிப்பு 7
   - வித்யா மனோகர்
3. என் கருப்பழகி 13
   - இ. சக்தி சுரேஷ்
4. அம்மா 23
   - கேள்விக்ககாரன்
5. அரியது எது? 25
   - ஔவையார்
6. பெண்ணுக்கு நீதி 26
   - கவிஞர் பாரதிதாசன்
7. கவிதை 27
   - முனைவர் த.ஜான்சி பால்ராஜ்
8. காதல் வன்முறை ! 34
   - கனியமுது அமுத மொழி
9. சக்தி பெண்ணிதழ் 34
   - சுஜாத்தா
10. A dead rose in Tami (மரணித்த மலர்) 37
    - முனைவர் செ. ராஜேஸ்வரி
11. இப்போதெல்லாம் நண்பர்களுக்கும் சேர்த்தே காதலிக்கிறார்கள் 42
    - விஜி
12. பெண்களின் புறம்பான பாடு!. 59
    - ம.ஆச்சின்
13. A poem by Avvai 59
14. அகிலத்தை வென்றிடு அக்னிச்சிறகே 65
    - இளங்கவி. தீபிகா சுகுமாரி

கதைகள்

15. காவல் தெய்வம் 8
    - முனைவர் அ. சுகந்தி அன்னத்தாய்
16. மறுபடியும் அவள் 16
    - இரம்யா நடராஜன்
17. விதை நெல் 39
    - முனைவர் வெ.மைதிலி

நூலாய்வு

18. ஓசையற்ற ஒலி 28
    - வித்யா மனோகர்

நேர்காணல்

19. பூரணி தஞ்சாவூர் ரமேஷ் 66
    - மேனகா நரேஷ்

கட்டுரைகள்

20. ஒத்துழையாமை இயக்கத்தில் பெண்கள். 3
    - முனைவர் எஸ். சாந்தினி பீ
21. சரமை 14
    - இரா. சைலஜா சக்தி
22. மலேசியச் சிறுகதைகளில் தமிழர் உணவு முறை 19
    - முனைவர் ஜ. ஜான்சிராணி
23. அதிகாரிச்சி 22
    - மா.மாரிராஜன்
24. ஜானகி அம்மாவும் கரும்பும் 24
25. Janaki amma 33
26. தாலி குறித்த கல்வெட்டு.... 35
    - மா. மாரிராஜன்
27. ஆதிசக்தி வரலாறும் வழிபாடும் 47
    - முனைவர் செ. ராஜேஸ்வரி
28. தமிழணங்கு விருது வழங்கும் விழா 80

தொடர்கதை

29. தைரிய லக்ஷ்மி 60
    - வை.மு.கோதைநாயகி அம்மாள்
30. ARANYANI 70
    - VIJENI

எந்நாளும் மாறாத தாய்மை நெஞ்சம்

கீரையோ கீரையென்று கூவி வந்த
கிழவியினை அழைத்திட்டாள் அம்மா வாங்க
கீரைகட்டு விலையென்ன என்று கேட்கக்
கிழவியவள் கட்டுநான்கு ரூபாய் என்றாள்
கீரைகட்டின் விலையதிகம் என்று கூறிக்
கிழவியிடம் அம்மாதான் பேரம் பேசிக்
கீரைகட்டை இரண்டுரூபாய் என்று கேட்கக்
கிழவியவள் கட்டுபடி ஆகா தென்றாள் !

இருவருமே மாறிமாறி விலையைக் கூறி
இறுதியிலே மூன்றுக்குப் படிந்து போக
இருகட்டு கீரையினை அம்மா வாங்கி
இரண்டுக்கும் ஆறுரூபாய் எடுத்துத் தந்தாள்
ஒருகையில் பணத்தாளை வாங்கிக் கொண்டு
ஒருசுற்றுக் கூடையினைச் சுற்றித் தம்மின்
இருகண்ணில் பணத்தாளை ஒற்றிக் கொண்டு
இடுப்பிருந்த சுருக்குபையில் வைத்தெ முந்தாள் !

எழுவதற்கு முடியாமல் மயங்கி வீழ
எதிருந்த அம்மாவோ பதறிப் போனாள்
விழுந்தவளைத் தூக்கிஓரம் அமர வைத்து
வீட்டிற்குள் சென்றுநீரை எடுத்து வந்த
முழுதாக முகம்தெளித்துப் பரிவாய்க் கேட்டு
மூன்றுதோசை கொடுத்தவளின் பசியைத் தீர்த்தாள்
எழுந்தயிந்த இரக்கம்தான் பேரம் மீறி
எந்நாளும் மாறாத தாய்மை நெஞ்சம் !

– பாவலர் கருமலைத் தமிழாழன்

ஒத்துழையாமை இயக்கத்தில் பெண்கள்

முனைவர் எஸ். சாந்தினி பீ

‘பெண் பலகீனமானவள் என்பது உண்மையல்ல. இது ஆணின் பொய். அவள் நம்மைவிட அதிகமாக வருங்காலத்தை அனுமானிக்கவில்லையா? அதிகமான தியாகங்களை செய்பவள் இல்லையா?. மனோபலம் அதிகமாக பெற்றவளல்லவா? அற வழிதான் நம்முடையது எனில் நம்மைக்காட்டிலும் பன்மடங்கு அதிக பங்கேற்பு அவளுடையதே’’ – மகாத்மா காந்தி



காந்தியின் வரவு இந்திய விடுதலை இயக்கத்தில் மாபெரும் திருப்புமுனையாக அமைந்தது. இவ்வியக்கத்தை அறவழியில் உயிற்சேதம் இல்லை எனும் அளவிற்கு அகிம்சா வழிக்கு மடை மாற்றினார். அதுவரையிலும் செல்வச்சீமான்கள் மட்டுமே பங்கெடுத்த அரசியலில் பொதுமக்களை புதுவரவாக்கினார். அதில் பெண்களும் அடங்குவர். பொதுமக்களின் பிரச்சனைகளை களைந்து தொண்டு புரிவதே அரசியல் எனும் புது அடையாளத்தைக் கொண்டுவந்தார்.

Malati Choudhury

முதல் உலகப் போர் முடிந்த *(1914-1918)* இக்கட்டத்தில் இந்தியர்களுக்கு தந்த வாக்குறுதியை இங்கிலாந்து அரசு நிறைவேற்றவில்லை. முழுமையான ஆட்சிப் பொறுப்பு *(ஸ்வராஜ்)* கிட்டவில்லை. மக்கள் மனநிலை பெரும் கொந்தளிப்பிற்கு ஆட்பட்டிருந்தது. சூரியன் மறையா பெரும் நிலப் பரப்பை தன் ஆளுகைக்குட் படுத்தியிருந்த இங்கிலாந்து அரசிடம் ஆயுதம் கொண்டு வெற்றிபெற இயலாது என்பதை நன்கு அறிந்திருந்தவர் காந்தி மகான். இதன் விழைவாக சில திட்டங்களை அறிவித்தார். சட்ட மறுப்பு மற்றும் அகிம்சையையும் தன் புரட்சி ஆயுதங்களாக மக்கள் கைகளில் தந்தார்.

1920- செப்டம்பர் மாதம், கொல்கொத்தாவில் கூடிய காங்கிரசு மாநாட்டில் ஏனைய தலைவர்கள் இதற்கு ஒப்புதல் தந்தனர். இங்கிலாந்து நாட்டு துணிமணி உட்பட ஏனைய பொருட்களையும் ஒதுக்க வேண்டும் என்பதே காந்தி அறிவித்த ஒத்துழையாமை இயக்கத்தின் முதல் அடியாகும். அந்நிய நாட்டு ஆடைகளுக்கு பதிலாக மரியாதை எனும் பொருள் கொண்ட "காதி" இயக்கத்தை முன் வைத்தார். ஆங்கிலப் படைகளிலிருந்து விலகுதல், அரசு பதவிகளையும் பட்டங்களையும் துறத்தல். அரசின் ஆணைகளுக்கு கீழ்படியாமை, போன்ற பல்வேறு அம்சங்களை கொண்ட இவ்வியக்கத்தை மக்கள் பெருவாரியாக வரவேற்றனர்.

முதல் முறையாக விடுதலை இயக்கத்தில் பெண்கள் வீட்டை விட்டு தெருக்களில் அடிவைத்தனர். 1920-22 இரண்டாண்டுகளில் பெண்கள் ஆற்றிய பணி சொல்லில் அடங்காது. வங்காளத்தில் பெண்கள் தங்களுக்கென தனி அமைப்பினை உருவாக்கினார்கள் (Mahila Karma Samaj) இவ்வமைப்பிற்கு பல கிளைகளும் முளைத்தன. அவர்கள் தமக்குள் சிறு குழுக்களாகப் பிரிந்தனர். ஒவ்வொறு குழுவிற்கும் 25 முதல் 30 வரையிலான வீடுகள் என்று பொறுப்பு ஒதுக்கப் பட்டது. இவர்களின் பணி வீடு வீடாகச் சென்று விடுதலை இயக்கத்தின் அவசியத்தை புரிய வைத்தல், காந்தியின் திட்டங்களை தெளிவு படுத்துதல், அவர்களை ஏற்றுக்கொள்ள வைத்து போராட்டத்திற்கு வரவழைத்தல். தேஷ்பந்த் தாஸ் அவர்களின் மனைவி பசந்தி தேவி, சகோதரி ஊர்மிளா தாஸ் இருவரும் கல்கத்தாவின் தெருக்களில் அன்னிய ஆடையை வாங்காதீர் என பிரச்சாரம் செய்தனர்.

இன்றளவிலும் கூட கூட்டம் சேர்ப்பது எளிய பணியல்ல என்பதை கூட்டம், போராட்டம் ஆகியவற்றை நடத்தி பழகியவர்கள் மிகத் தெளிவாக உணருவர். ஒரு தருணத்தில் திருமதி இந்திர பிரபா மஜூம்தார், ராதூ பீபி இவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி கூட்டத்திற்கு வந்த பல பெண்கள் தங்கள் தங்க நகைகளை நாட்டிற்காக நன்கொடையாக கொடுத்தனர். " ஆண்கள் சிறையில் அடைப்பட்டதால் போராட்டம் தடைபடாது. நாம் பெண்கள் தெருக்களில் இறங்கி போராடுவோம்' என்று பசந்தி தேவி பெண்களை வழிநடத்தினார்.

பிரின்ஸ் ஆப் வெயில்ஸ் மும்பாயிற்கு வந்திருந்தார். பம்பாய் மக்கள் சார்பாக மரியாதை நிமித்தம் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. பெண்கள் அதை புறக்கணித்து நேரே ஆலயத்தில் கடவுளிடம் விடுதலைக்காக பிரார்த்தனைச் செய்ய சென்று விட்டனர்.

அன்னிய நாட்டு ஆடை புறக்கணிப்பு போராட்டத்தில் பெண்கள் அயலக ஆடை விற்கும் கடைகளுக்கு நேரில் சென்று ஆடை விற்பவர் வாங்க வருபவர் இருவரிடமும்

பொறுமையாக வேண்டிக் கேட்டுக் கொண்டனர். இலகாபாத்தில் ஆண்கள் பெண்களின் துணைக்கு வந்து நிற்க முன்வந்தனர் ஆனால் பெண்கள் மறுத்து விட்டனர். அங்கே பெண்கள் வேறு ஒரு வழியை வகுத்துக் கொண்டனர். கடைகளுக்கு முன் சற்று தொலைவில் வரிசையாக அமைதியாக நின்றார்கள். ஆடை வாங்க எவரேனும் வந்தால் அவர்கள் முன்னிலையில் சென்று வணங்குவார்கள். அவ்வளவே தான். வந்தவர் நாணி துணி வாங்காமல் திரும்பிவிடுவர். இன்னும் சில இடங்களில் கதை வேறாக இருந்தது.

dward, Prince of Wales in 1919

ஆடை விற்பவருக்கும் வாங்குவோருக்கும் இடையில் வந்து நின்று வாங்க வேண்டாம் என்று வலியுறுத்துவர். வந்தவர் வாங்காமல் சென்றுவிடுவர். இதனால் கோபமடைந்த கடைக்காரர் ஒருவர் இடையில் வந்த அந்தப் பெண்ணைப் பார்த்து' உன் கையில் அணிந்திருக்கும் கண்ணாடி வளையல்கள் மட்டும் இந்தியாவிலா தயாரானது? அதுவும் அன்னிய நாட்டிலிருந்து தானே வந்தது..." என்று கேட்ட அடுத்த நொடி, துணி அளக்க கடையில் வைத்திருந்த அளவு கோலை எடுத்து தன் வலையல்களை உடைதுக் கொண்டாள். ஒரு பெண் தன் கணவனை இழந்தால் மட்டுமே நடத்தப் படுவது அந்த சடங்கு. அந்த செயலை சிறிதும் தாமதிக்காமல் அரங்கேற்றியதை கண்டு அனைவரும் திகைத்து நின்றார்கள். விடுதலை வேட்கையே வலியது என அவள் கடந்து போனாளே .. அவளின் மனோவலிமை வணக்கத்திற்குறியது. இன்னும் சில இடங்களில் பெண்கள் கடைக்குள் புகுந்து, காட்சிப் படுத்தப்பட்ட ஆடைகளை அள்ளி பெட்டிகளுக்குள் அடைத்து சீல் வைத்தனர். இத்தகைய பல்வேறு வகையான செயல்களால் இனிவிற்பனை செய்ய இயலாது என்று உணர்ந்த வணிகர்கள் தங்கள் உரிமத்தை ரத்து செய்ய விற்பனைக் கடைகள் கனிசமான எண்ணிக்கையில் குறைந்து போயின. பெண்களின் எண்ணிக்கையையும் போராட்டத்தையும் அதை தொடர்ந்த வெற்றியையும் கண்ட இங்கிலாந்து அரசு இதை சற்றும் எதிபாராததால் விக்கித்து போனதுடன் எப்படி கையாளுவதுவெனத் தெரியாமல் கொதித்துப் போனது.

ஒடிசாவில் காந்தி பெண்களிடம் அமைப்புகளை ஏற்படுத்தும் முறை அவர்களின் பங்கு ஏற்படுத்தப் போகும் மாற்றங்கள், ஒத்துழையாமை இயக்கத்தின் அவசியம், வன்முறை இன்றி போராடுதல் குறித்தெல்லாம் உரையாடினார். ஒடிசா பெண்களும் மற்றவர்களுக்கு சளைத்தவரில்லை. இரமா தேவி, சரளா தேவி, அன்னபூர்ன மகாராணா, குந்தலா குமாரி,

மாலதி சவுத்ரி, ப்ரொபதி கிரி, ஜம்புபதி தேவி, கோகிலா தேவி போன்ற பெண்கள் முதன்மை எடுத்து மற்றவர்களை இயக்கினார்கள்.

சரளா தேவி

குஜராத்தில் கஸ்தூரிபா காந்தி பொதுக் கூட்டத்தில் பேசுகையில் ‘ பெண்களே இராட்டையை கையில் எடுங்கள். இந்தியத் தாயின் பாத்திரத்தை ’காதி’யால் நிரப்பி நமது விடுதலையைப் பெருவோம். எனது இரு மகன்கள் சிறையில் இருப்பது உண்மை, ஆனால் இந்தியத் தாயின் இரண்டாயிரம் மகன்கள் சிறை வாசத்தில் இருப்பதற்காக வருந்துகிறேன். முடிந்தால் சகோதரர்களை மீட்போம், இல்லையெனில் அவர்களை சிறையில் சந்திப்போம்’ என்றார். இத்தகைய உண்ர்ச்சி ததும்பும் பேச்சுக்கள் பெண்ககளின் ஈடுபாட்டை அதிகரித்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பெண்களையும் சிறைப் படுத்தியது ஆதிக்க இங்கிலாந்து அரசு. பார்வதி தேவி மீரட்டில் நடத்திய உரையில் கடுங்கோபத்திற்கு உட்பட்ட அரசு ‘‘வன்மப் பேச்சு’’ பேசியதாக குற்றம் சாட்டி இரண்டாண்டுகள் சிறைப் படுத்தியது. இது அன்றைய காலத்தில் பெண்ணுக்கு அளிக்கப் அட்ட அதிக பட்ச தண்டனையாம். மேடையேற அரசு தடைவிதித்ததை முன்னிட்டு பெண்கள் தெருக்களில் ஊர்வலம் போனார்கள்.

சம காலத்தில் தமிழகத்தில் மூவலூர் இராமாமிதம் அம்மையார் ஒரு புதுமையை புகுத்தினார். வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசாமல் கரும்பலகையில் தன் கருத்துக்களை எழுதி பிரசாரம் செய்தார். பேசத்தானே தடை, எழுத்திற்கில்லையே... என அரசை ஏளனம் செய்தாரோ? மதியின் கூர்மையால் ஒரு பேரரசையே சாய்த்துவிட்டாரே என்ற வியப்பில் நம் நெற்றிப் புருவங்கள் வானை முட்டி வரத்தான் செய்கிறது.

அரச குலத்தைச் சார்ந்த அபாதி பானோ பேகம், பாய் அமான் என்று அறியப்பட்ட ஒரு முக்கிய போராளி. தனது பர்தா (முகத் திரை) துறந்து பொது கூட்டங்களில் அனல் பறக்க பேசியவர். இந்த நூற்றாண்டில் தேர்வு எழுதும் வாப்பை இழந்தலும் பர்தாவை இழக்கமறுத்தாள் ஒரு பெண் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் அட்சி செய்த குடும்பத்தைச் சார்ந்த ஒரு பெண் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் நாட்டின் விடுதலைக்காக பர்தாவை தூக்கி எறிந்து பொது கூட்டங்களில் பேச ஒரு தனி துணிச்சல் தேவை. இப்படி ஒப்பிட்டுப் பார்த்தால் தவிற அப் பெண்ணின் தியாகம் எளிதில்

புரியாது. 'நாம் முன்னர் செய்த தவறினால் தான் வணிகம் செய்ய வந்தவன் இன்று நம்மை அடிமைக் குழியில் தள்ளியுள்ளான். மீண்டும் தவறிழைத்து மூதாட்டி இந்தியத் தாயை விலங்கிட்டு வைக்காதீர்கள். வெளியே வந்து தாயை விடுதலைச் செய்யுங்கள். உங்கள் குழந்தைகளுக்கேனும் சுய ஆட்சியை விட்டுச் செல்லுங்கள்' என்று முழங்கியவர்.

இராவல்பிண்டி, குர்ஜன்வாலா, கசூர், சிம்லா இன்னும் பல இடங்களுக்குச் சென்று பொதுகூட்டங்களில் பேசினார். முக்கியமாக இவரது வருகையால் இசுலாமியப் பெண்களும் களம் இறங்கினர். வன்மப் பேச்சு வரிசையில் அவரையும் சிறை செய்ய நினைத்து பின்னர் பின் வாங்கியது இங்கிலாந்து பேரரசு. அவர் பின்னனியில் இருந்த பெருங் கூட்டம் களமிறங்குமோவென அரசு அஞ்சியது. 1922-ல் காந்தி சிறைக்கு செல்லும் முன் ' பாய் அமான் உங்கள் பணி தொடருங்கள், நமது விடுதலை விரைந்து வரும் என்ற சிறப்புத் தகவலை அனுப்பி வைத்தார். இப்பெண்மணியும் பம்பாய், பீகார் போன்ற பகுதிகளில் உரயாற்றி கனிசமான பெருந்தொகையை போராட்டத்திற்காகப் பெற்றுத் தந்தார்.

அன்னியப் பொருட்களை ஒதுக்கிய அதே காலத்தில் கதர் உற்பத்தியில் பெண்கள் ஈடுபட்டனர். அதைத் அடுத்த இதழில் தொடருவோம்.

காவல் தெய்வம்

முனைவர் அ. சுகந்தி அன்னத்தாய்
உதவிப்பேராசிரியர், ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி

விழா மேடை வண்ண விளக்குகளால் ஜொலித்தது. அரங்கில் ஆங்காங்கே, சிறுவர் முதல் பெரியவர் வரை அமர்ந்திருந்தனர். அவர்களின் முகங்களில் ஆவலும், பெருமையும் ஒருங்கே தெரிந்தன. மெல்லிய பேச்சுக்குரல்களும், சிரிப்பொலிகளும் ஒருவித உற்சாகத்தை ஏற்படுத்தின. நகரத்தின் மைய பகுதியில் அமைந்துள்ள ஒரு பெரிய அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு, இருபத்தைந்து வருடங்களுக்குப் பிறகு தொடர்பில் கிடைத்த, தன் பத்தாம் வகுப்புத் தமிழாசிரியர் திருமதி. அன்னபூரணியின் அழைப்பின் பேரில் வந்திருந்தாள் மதி. ஆசிரியர் வருவதற்கு முன்னதாகவே அரங்கிற்கு வந்துவிட்டதால், ஆசிரியரைப் போனில் தொடர்பு கொண்டு தான் வந்துவிட்ட விபரத்தைக் கூறினாள் மதி.

மறுமுனையில், அன்னபூரணி அம்மாவின் குரல் சற்று சோர்வாக ஒலித்தது. "மதி, மன்னிக்க வேண்டும். இன்று மாலைநேரத்தில் திடீரென பெய்த மழையால், சாலைகளில் வாகனங்கள் ஊர்ந்து செல்கின்றன. இங்கிருந்து இன்னும் ஒரு அரைமணி நேரம் ஆகும் போல, நான் வந்து சேர," என்று மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்தார்.

"பரவாயில்லை அம்மா, நீங்கள் நிதானமாக வாருங்கள். நான் இங்கே காத்திருக்கிறேன்," என்று மதி ஆறுதல்படுத்தினாள். அன்னபூரணி அம்மா வருவது தாமதமாவதை அறிந்த மதிக்கு, ஒருபுறம் ஆசிரியருக்காக வருத்தமாக இருந்தாலும், மற்றொருபுறம் அவசரம் இல்லாமல் அரங்கின் சூழலை ரசிக்க ஒரு வாய்ப்பாக அமைந்தது. இத்தனை பெரிய அரங்கில், தன் அன்பிற்குரிய ஆசிரியையின் இரு நூல்கள் வெளியிடப்பட உள்ளதை நினைத்து அவளுக்குப் பெருமையாக இருந்தது.

அன்னபூரணி அம்மாவின் இலக்கியப் பயணம், அவரது கற்பித்தல் திறன், சமூகத்திற்கான அவரது பங்களிப்புகள் எல்லாவற்றையும் அறிந்ததிலிருந்து, மதியின் மனம் பெருமையால் நிறைந்திருந்தது.

அன்னபூரணி அம்மா, வெறும் தமிழாசிரியை மட்டுமல்ல, தற்போது ஒரு கல்லூரிப் பேராசிரியர். சமூகக் கட்டுகளுடன் மரபு மாறாமல், தென்பாண்டி சீமையின் வட்டார வழக்குகளைத் தன் படைப்புகளில் உரிதாக்கிக் கொண்டவர். தன் அப்பத்தாவின் பெயரைத் தாங்கி, 'முனைவர் அன்னபூரணி'யாகத் தமிழ்ப்பணி ஆற்றி வரும் அவர், தங்கள் இலந்தை

மண்ணின் விருட்சம் என்று மதி உள்ளுக்குள் நினைத்து, 'நீவிர் ஆற்றி வரும் இலக்கியப்பணி தமிழ்மண்ணுக்கு உரித்தாகட்டும் அம்மா!' என்று மனமுருகி வாழ்த்தி கொண்டாள்.

அவளின் ஆசிரியையும், தாயைப் போன்றவருமான திருமதி அன்னபூரணி, ஒவ்வொரு நாளும் வகுப்புக்கு வரும்போது, "தமிழை நேசியுங்கள்! அது உங்களின் அடையாளத்தை நிலைநிறுத்தும்!" என்று கூறுவார். அவர் சொல்லும் ஒவ்வொரு கதைக்கும், ஒவ்வொரு பாடலுக்கும் மதி கண் கலங்குவதுண்டு. மதியின் குடும்பச் சூழலை அறிந்த அவர், அவளுக்குப் பாடப் புத்தகங்களைத் தாண்டி பல கதைகளையும், தன்னம்பிக்கை வரிகளையும் போதித்தார். மதிக்கு ஒரு தாய் ஸ்தானத்தில் இருந்து அன்பையும், அறிவையும் போதித்தவர் அன்னபூரணி அம்மா. மற்ற மாணவர்களை விட மதி மீது அவருக்குத் தனி அக்கறை இருந்தது. அவளின் கட்டுரைப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் அனைத்திலும் மதி முதல் பரிசு பெற வேண்டும் என்று ஊக்குவிப்பார். மதிக்கு ஏதாவது சந்தேகம் என்றால், மற்றவர்கள் மத்தியில் கூச்சப்படாமல் அன்னபூரணி அம்மாவிடம் நேராகச் சென்று கேட்டு தெளிவு பெறுவாள். அவரும் மதிக்குத் தனி கவனம் செலுத்தி, அவளின் திறமைகளை வெளிக்கொண்டு வந்தார்.

கால ஓட்டத்தில் ஆசிரியர், மேற்படிப்பிற்காய் பணியிலிருந்து விடுபட்டு, பேராசிரியர் நிலைக்கு உயர்ந்து, மணம் முடிந்து, நகரத்திற்கு குடிபெயர அவருடனான மதியின் தொடர்பு அற்றுப் போனது. சமீபத்தில் அன்னபூரணி அம்மாவின் ஒரு நூலை முகநூல் பதிவில் கண்டு, ஆர்வத்துடன் பின் தொடர, அவரின் தொடர்பு மீண்டும் துளிர்த்தது. அதனைத் தொடர்ந்தே இவ்விழாவிற்கான அழைப்பு.

தற்போது மதி, அரசு நிறுவனத்தில் உயரதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தாலும், இந்த விழா அவளுக்கு ஒரு புதிய உணர்வைத் தந்தது. அவள் கண்முன் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அன்று வெளியிடப்பட உள்ள நூல்கள் தென்பட்டன. அந்நூல்களில், ஒரு புத்தகத்தின் தலைப்பு அவளின் கண்களை ஈர்த்தது. 'சரின்னு சொல்லுங்க அப்பா'. அந்தத் தலைப்பைப் பார்த்ததும் அவளின் இதயத்தில் ஒரு துடிப்பு ஏற்பட்டது. அப்பாவுடன் அவள் வாழ்ந்த நாட்கள், அவர் இல்லாத தனிமை, அம்மா பட்ட கஷ்டங்கள், அவளின் படிப்புப் பயணத்தில் அவள் சந்தித்த சவால்கள் என அத்தனையும் அவள் கண்முன் படமென விரிந்தன. வழிந்தக் கண்ணீரைத் துடைத்தவாறு, விழா முடிந்தவுடன், அந்தப் புத்தகத்தை வாங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இருக்கையில் சென்று அமர்ந்தாள்.

சற்று நேரத்தில், மக்கள் கூட்டம் அதிகரித்தது. அவர்களுக்கிடையே மெதுவாக அரங்கிற்குள் நுழைந்தார் அன்னபூரணி அம்மா. இருபத்தைந்து வருடத்திற்குப் பின் அவரை நேரில் பார்த்த ஆனந்தத்தில், எழுந்து அவர் கைகளை ஆசையுடன் பிடிக்க, மகிழ்வுடன் அவரும் மதியைத் தழுவிக்கொண்டார். நலம் விசாரித்தவாறு மதிக்கு அருகில் இருந்த இருக்கையில் அன்னபூரணி அமர்ந்தார். நூல் வெளியீட்டு விழா கோலாகலமாக ஆரம்பமானது.

இலக்கியத்தடம் அமைப்பின் நிறுவனர் செழியன் வரவேற்பு நல்க, அதன் பொறுப்பாசிரியர் ராமன் தங்கள் அமைப்பின் நோக்கத்தையும் செயல்பாட்டையும் குறித்து

விரிவாகப் பேசினார். மேலும், "இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த சிறார் இலக்கியப் படைப்புகளே இன்று வெளியிடப்படுகின்றன. பெரும்பான்மையான நூல்களை சிறார்களே எழுதியிருக்கிறார்கள்" என்று உரையில் அவர் குறிப்பிட்டபோது, மதிக்கு ஆச்சரியமாக இருந்தது. இன்றைய சிறார்களுக்கு இத்தகைய வாய்ப்புகள் விரிந்து கிடப்பதை அறிந்து, தன் வியப்பை ஆசிரியருடன் பகிர்ந்து கொண்டு, விழா ஏற்பாட்டளர்களை மனதாரப் பாராட்டினாள்.

அன்னபூரணி எழுதிய நூல்கள் ஆரம்பித்து ஏழு சிறுவர்கள் எழுதிய நூல்கள் என ஒவ்வொரு நூலாக வெளியிடப்பட்டன. அப்போது, ஒரு எதிர்பாராத தருணம் நிகழ்ந்தது. "அடுத்ததாக, இந்த நூலின் முதல் பிரதியைப் பெறப்போகும் விருந்தினர், திருமதி. மதி!" - அறிவிப்பாளர் குரல் ஒலித்ததும் மதி அதிர்ந்து போனாள். அன்னபூரணி வர தாமதமானபோது, நிகழ்ச்சி பொறுப்பாளர் ராமன், "தாங்கள் யார்? யாருடைய அழைப்பின் பேரில் வந்திருக்கிறீர்கள்" எனக் கேட்டு, முன்னதாகவே மதியின் பெயரைக் குறித்து சென்றிருந்தார். மேடைக்குச் சென்றபோது, சிறப்பு விருந்தினர் அவளின் கையில் ஒரு புத்தகத்தை வழங்கினார். அவள் அதைப் பார்த்தாள் - அது 'சரின்னு சொல்லுங்க அப்பா' என்ற அதே புத்தகம்! அவளின் கண்களில் நீர் அரும்பியது. அந்தப் புத்தகத்தின் முதல் பிரதியை அவள் பெறுவது, அப்பா அவள் அருகிலேயே நின்று அவளைப் பாராட்டுவது போன்ற ஒரு உணர்வை அளித்தது. இது வெறும் புத்தகம் அல்ல, அவளின் அப்பாவின் ஆசியும், அம்மாவின் தியாகமும், அவளின் ஆசிரியரின் வழிகாட்டுதலும் ஒருங்கே இணைந்த ஒரு காவியம். நூலை கையில் ஏந்தியபடி, வந்தமர்ந்த மதி தன் கடந்த கால நினைவுகளில் மூழ்கிப் போனாள்.

மதியின் அப்பா மதுரையில் ஒரு மில்லில் வாரக்கூலி. அப்பாவும் அம்மாவும் அங்கு இருக்க, மதிமட்டும், தன் குழந்தைப் பருவம் முழுவதையும் கிராமத்தில் தாத்தா பாட்டி வீட்டிலேயே கழிந்திருந்தாள். மதிக்கு விபரம் தெரிந்து ஆறாம் வகுப்பிற்குப் பிறகுதான் அப்பா அம்மாவுடன் வளரும் சந்தர்ப்பம் வாய்த்தது. அவளின் அப்பா, மதி மீது உயிரையே வைத்திருந்தார். "தாயி, நீ நல்லா படிச்சு பெரிய ஆளா வரணும். அதற்காக உன்னை அதிகம் வருத்திக்காத. நான் படுற கஷ்டம் உனக்கு வரக்கூடாதுதான். அதே நேரத்தில் அதிக நேரம் கண் விழித்து, உடம்பைக் கெடுத்துக்காத" என்று அக்கறையுடன் அவர் அடிக்கடி சொல்வார். இயல்பிலேயே மதி நன்றாகப் படிக்கும் திறன் வாய்ந்தவள். அவரது கனவென்பது மதி நன்கு படித்து, ஒரு நல்ல வாழ்க்கை வாழ வேண்டும் என்பதுதான். உழைப்பால் கரடுமுரடான அவர் கைகள், மதியின் தலையைத் தடவிக்கொடுக்கும்போது கிடைக்கும் நிம்மதி, வேறு எதிலும் மதிக்குக் கிடைக்காது. அந்தக் கைகளின் ஸ்பரிசம் ஒரு பாதுகாப்பு வளையம்போல் அவளைச் சூழ்ந்திருந்தது.

அவளின் அப்பா, தன் 'பேரரசுகளின் பெண் பிள்ளைகள்' என்று குறிப்பிடும்போது, மதிக்கு எப்பொழுதும் ஒரு தனிப்பாசம் காட்டுவார். மற்றவர்களின் முன்னிலையில், "இவ என் பொண்ணு, எல்லாமே இவளுக்குத் தெரியும்" என்று பெருமையாகச் சொல்வார். "ஏலே தாயி" என்றழைத்த அப்பாவின் வார்த்தை, அவர் மதி மீது கொண்டிருந்த அளவற்ற அன்பையும், உரிமையையும் வெளிப்படுத்தும் அதிகபட்சமான வார்த்தையாகும். அந்த அழைப்பில் ஒரு தந்தையின் பரிவும், மகளின் மீதான அளவற்ற பாசமும் கலந்திருக்கும்.

அப்பா அவளுடன் பேசிய அதிகபட்ச வார்த்தை அதுதான், ஆனால் அதன் பின்னால் இருந்த அன்பு, கடல் போல ஆழமானது.

ஒருமுறை அப்பாவுடன் அம்மாவுக்கு சிறு மனவருத்தம் ஏற்பட்டு, அப்பாவை அம்மா கோபித்துக்கொள்ள, "ஏம்மா, எப்பவும் அப்பாவிடம் சண்டை போடுற" என்று மதி கேட்டபோது, "என்ன, நான் சண்ட போடுறனா, உங்க அப்பா பண்றதெல்லாம் உனக்குத் தப்பா தெரியாதே" என்று கூறி மதியிடம் பேசுவதைத் தவிர்த்தார்.

வழக்கமாக மதியைக் கடைக்கு அழைத்துச் சென்று அவளுக்கு மிகவும் பிடித்த அப்பம் வாங்கி வரும் அப்பா, அதிலிருந்து, கடைக்கு அழைத்துச் சென்று, வாங்கி கொடுத்து, சாப்பிடச் சொல்லி "அம்மாவிடம் சொல்லாத, பின் அதற்கும் உன்னை ஏசுவா.." என்று கூறி அழைத்துவருவார்.

அப்பா மறைந்து கிட்டத்தட்ட இருபத்தைந்து வருடங்கள் ஆகின்றன. எதிர்பாராமல் ஏற்பட்ட அப்பாவின் மறைவு மதியின் வாழ்வில் எல்லாவற்றையும் புரட்டிப் போட்டது. ஒருமுறை சொந்த ஊருக்குச் சென்றிருந்த அவர், கிணற்று நீரில் மின்சாரம் பாய்ந்திருப்பது தெரியாமல் இறங்கி, மின்சாரம் தாக்கி இறந்து போனார். போஸ்மார்டம், போலீஸ் கேஸ் போன்றவற்றிற்குப் பயந்து, உறவினர்கள் உடனே அவரை எரியூட்ட, மதியும் அவள் அம்மாவும் தகவல் தெரிந்து வருவதற்குள் எல்லாம் முடிந்திருந்தது. கடைசியாக அப்பாவின் கனிவான முகத்தைப் பார்க்கக் கூட அவளுக்குக் கொடுத்து வைக்கவில்லை.

அதற்குப் பிறகு மதியின் வாழ்க்கை சூறாவளிக்குள் சிக்கிக்கொண்டது. அன்றாட தேவைகளுக்காக வீட்டிலேயே அப்பளம் போட்டு அருகாமையில் உள்ள வீடுகளுக்கும் கடைகளுக்கும் கொடுக்க ஆரம்பித்தார் மதியின் தாய். மாலை நேரங்களிலும், வார விடுமுறை நாட்களிலும் அம்மாவுடன் அப்பள வியாபாரத்திற்கு மதி உதவத்தொடங்க, அவள் படிப்பில் பின்னடைவு ஏற்பட்டது. பெயர் பலகையில் முதல் இடத்தில் இருந்த அவளது பெயர் நாலாவது இடத்திற்கு இறங்கியது. இதனை தோழியின் அம்மா மூலமாக அறிந்த மதியின் அம்மா, தன்னால் தன் மகள் படிப்புப் பாதிப்பு அடைவதை அறிந்து வருந்தினார். அதன்பின் கிராமத்தில் இருக்கும் தன் தாய் வீட்டிற்கு மதியுடன் திரும்பினார் மதியின் தாயார். மீண்டும் தாத்தாவிடமே வந்து சேர்ந்த மதி தன் தந்தையின் கனவை நிறைவேற்ற வேண்டும் என்ற மனஉறுதியுடன் படிக்கத் தொடங்கினாள்.

செவல்காட்டுப் பூமியிலே தன் கணவனை இழந்த துயரிலும், தனிமையான ஒரு துணையாக மதியின் அம்மா நின்றார். தன் நெஞ்சில் எண்ணற்ற கனவுகளை ஏந்தி, எதற்கும் அஞ்சாத தைரியக் காரிகையாய் அன்று முதல் சூழல ஆரம்பித்தார். மதியின் படிப்புக்காக, விடிகாலையிலேயே வயலுக்குச் சென்று 'நீர்ப்பாய்ச்சி நெல் விளைவித்தார். பிறகு, கடுமையான வெயிலிலும் களைகளைப் பிடுங்கி கடலை விளைவித்தார். அவர் உழைத்த ஒவ்வொரு நாளும், அவர் கைகள் பட்டுப் பண்பட்ட மண் போல, தன் மகளுக்குக் கல்வியெனும் பாதையை விரித்தார். அதன் பலனாக மதி உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி படிப்பில் முதல் மதிப்பெண் பெற்றாள்.

இதற்கிடையில் மதியின் தாத்தாவும் வயதுமுதிர்வால் இறந்துவிட, தன் கனவுகளும் ஆசைகளும் கருகிடும் சூழல் வந்துவிட்டதோ என்று எண்ணி சோர்ந்து போனாள். அதற்கு ஏற்றார்போல, தந்தை இல்லா பெண்பிள்ளையைப் மேலும் படிக்க வைப்பது, இச்சமூகத்தில் சாத்தியமாகாது என்று தயங்கிய மதியின் தாயார், மதியின் மேற்படிப்பிற்கு முட்டுக்கட்டை போட்டார். தன் அப்பா இருந்திருந்தால், இந்நிலை தனக்கு வந்திருக்காது எனக் கலங்கினாள் மதி. அதன்பின் ஆசிரியர்களின் வழிகாட்டலின் பேரில், "எந்தச் சூழிலும், எந்த உயர்நிலைக்குச் சென்றாலும் தன் விருப்பத்திற்கு மாறாக எந்த முடிவும் எடுக்கக் கூடாது" என்ற உறுதிப்பாட்டை மகளிடம் பெற்றுக் கொண்டு, மகளின் மேற்படிப்பிற்கு அனுமதி அளித்தார் மதியின் தாயார். மதியும் அந்த உறுதியுடன் கல்லூரிக்குள் நுழைந்தாள்.

மதியின் கல்லூரிக் கட்டணத்திற்காகவும், புத்தகங்கள் வாங்கவும், தன் கைகளில் கிடைத்த பணத்தை, பிற செலவுகளுக்குப் பயன்படுத்தாமல், மதிக்குக் கொடுத்தார் அவள் தாயார் பருத்தி பயிரிட்டு, செடிகளைப் பராமரித்து, பூக்களிலிருந்து பஞ்சு திரளும் வரைகாத்திருந்தார். மிளகாய்ப்பழம் பறித்து காரமான வாடை கண்களை உறுத்தினாலும், அவர் உழைப்பின் ஒவ்வொரு வியர்வைத் துளிகளும் தன் மகளின் எதிர்காலத்தைச் செதுக்கிக்கொண்டிருப்பதாகவே கருதினார். மாலையில் தலைச்சுமையாய் புல் கட்டுகள் சுமந்து வந்தார். ஒவ்வொரு சுமையிலும், தன் மகளின் கனவை நனவாக்க அவர் முயன்றார். சில சமயங்களில், மண்ணில் புதைந்த கிழங்குகளைத் தோண்டி எடுத்தார். மண்வாசனை அவரது உழைப்பை உறுதிப்படுத்தியது. ஒவ்வொரு முறையும் கல்லூரி கல்விக் கட்டணத்தைச் செலுத்த அம்மா கஷ்டப்படுவதைப் பார்க்கும்போது, மதியின் மனம் வலிக்கும். "அம்மா, நான் படிக்காம உன்னோட வேலைக்கு வரவா" என்று சொல்ல முயலும்போதெல்லாம், "அப்பா கனவுல கூட சம்மதிக்க மாட்டாருடி... நல்லா படிச்சி பெரிய ஆளா வரணும்!" என்பார். அம்மாவின் அந்த வார்த்தைகள், அப்பாவின் கனவை நினைவூட்டும்.

அதே கனவை நிறைவேற்றும் வகையில் தொடர்ந்து படித்து கல்லூரி படிப்பிலும் முதன்மை பெற்றாள் மதி. அதே வெறியுடன் அரசு நடத்தும் தேர்வாணயத் தேர்வு எழுதி அரசு பதவியில் உயர் இடத்தில் அமர்ந்தாள். அம்மாவின் விருப்பத்தின் படியே அவள் அமைத்துக்கொடுத்த நல்லதொரு குடும்ப வாழ்வில் நுழைந்து, இரு மகன்களுக்குத் தாயாகவும், சமூகத்திற்கு உதவும் கருணை உள்ளம் கொண்டவளாகவும் இன்று திகழ்கிறாள் மதி. குறிப்பாக, தன் மகனுக்கு பாடம் கற்றுக்கொடுக்கும்போது, 'காவல் தெய்வம் கருப்பசாமி' பற்றிய ஒரு பாடம் வரும்போது, அப்பா கோவில் திருவிழாவில் கருப்பசாமியைச் சுமந்து ஆடிய நினைவுகள் மதிக்குள் மின்னி மறையும். அந்த வீரமும், பக்தியும், கம்பீரமும் கொண்ட அவளின் தந்தையின் நினைவுகள் இன்றும் அவளுக்கு ஒரு கவசம்போல பாதுகாப்பளிக்கின்றன.

இன்றும் பணிக்குச் செல்லும் ஒவ்வொரு நாளும், தெய்வத்தோடு அப்பாவையும் சேர்த்து வணங்கி, "எனக்குத் துணையாக இருங்கப்பா" என்று வணங்கிவிட்டுத்தான் செல்வாள் மதி. "ஆம், என் ஒவ்வொரு அடியிலும் அவர் என்னுடன் இருக்கிறார்!" என்று மனதுக்குள்

கூறியவாறே பழைய நினைவுகளில் இருந்து மதி மீளும்போது, விழா நிறைவுப் பகுதியை எட்டியிருந்தது.

"என்னைக கனவில் கூட தொந்தரவு செய்யக்கூடாது என்று இதுவரை ஒருநாள் கூட என் கனவில் வராத என் அப்பா, நனவில் ஒவ்வொரு அடியிலும் ஒவ்வொரு நொடியிலும் என்னுடன் இருப்பதாகவே நான் உணர்கிறேன் டீச்சர்.' என்றவாறு, 'சரின்னு சொல்லுங்க அப்பா' என்ற நூலைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டாள் மதி.

மதியின் வாழ்க்கைப் பயணத்தில் அவள் தனிமையாய் இல்லை. அவளின் அப்பாவின் கனவுகளும், அம்மாவின் தியாகமும் அவளுக்குத் துணையாக இருக்கின்றன. இன்றும் அவளின் வாழ்வில் அப்பாவின் சுவடுகளும், நினைவுகளும் ஒரு காவல் தெய்வமாய் அவளைக் காத்து நிற்கின்றன என்பதை உணர்ந்த அன்னபூரணி, "உன் அப்பாவின் ஆசீர்வாதமும் அம்மாவின் தியாகமும் என்றும் உனக்குத் துணையாக இருக்கும் மதி, நம்பிக்கையோடு தொடர்ந்து வெற்றி நடைபோடு" என அன்னபூரணி அம்மா அவளை வாழ்த்த, விழா முடிந்ததும் அன்னபூரணியிடம் இருந்து விடைபெற்றுத் திரும்பினாள் மதி

என் கருப்பழகி

அழகியடி நீ
அழகான காகிதத்தை கண்டவுடன்
அவளைப் பற்றி எழுத நினைக்கிறது - மனம்
அது என்ன அழகான காகிதம் ? - ஆம்
அது வெறுமையான, வெற்று
வெள்ளை காகிதம் இல்லை
மலர்ந்த தாமரை அருகில் ஓர்
சிறிய தாமரை
இரண்டு இலைகள்
ஒரு சிறு மொட்டு
பார்வையை உறுத்தாத வண்ணம் பதிவிடப்பட்டுள்ளது
அழகா... உன்னை நினைவு படுத்தியது இல்லை

தண்ணீரிலேயே நின்றிருந்தாலும்
தனித்திருக்கும் உன் குணம்
ஒற்றையாய் இல்லாமல் உன்னருகில்
முற்றிய இலைகளாய் பெரியவர்கள்
சிறிய தாமரையாய் என் தங்கை
சிறு மொட்டாய் நம் மழலை
இவர்களுடன் மலர்ந்த முகத்துடன்
இருக்கும் நீ

செந்தாமரையில் முகம் காட்டுகிறாள்
என் கருப்பழகி
அழகியடி! நீ ...

- இ. சக்தி சுரேஷ்

சரமை

இரா. சைலஜா சக்தி
கோவில்பட்டி

ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே என்று பலர் சொல்வதுண்டு. அனைத்திற்கும் பெண்ணையே ஏன் காரணமாகச் சொல்ல வேண்டும். இதில் ஆண்களுக்குத் தொடர்பு இல்லையா என்ற கேள்வி எழுகிறது.

கணவன் என்பவன் மனைவியின் வார்த்தைகள் சரி எனில் கேட்க வேண்டும். தவறு எனில் மறுக்க வேண்டும். இதே நியதி மனைவிக்கும் பொருந்தும். பின் எப்படி பெண் முழு முதல் காரணமாகிறாள் என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அதே நேரம், வரலாற்றில் பல சாம்ராஜ்யங்கள் உருவாவதற்கும், வீழ்வதற்கும் பெண்கள் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பதையும் மறுப்பதற்கு இல்லை.

ராமன் காட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற வரத்தை மாற்றிக் கொள்ளுமாறு கைகேயியிடம் தசரதன் கெஞ்சினான். ஆனால் கைகேயி அதைக் கேட்கவில்லை. வேறு வழியின்றி தசரதன் தன் மகன் ராமனைக் காட்டுக்கு அனுப்பினான். ராவணனின் மனைவி மண்டோதரி அழகில் சிறந்தவள். நற்குணங்கள் நிறைந்த பதிவிரதை. சீதையைக் கவர்ந்து வந்தது தவறு. ராமனிடம் சீதையை ஒப்படைத்துவிடுங்கள் என்று மண்டோதரி பலமுறை கூறியும் கேட்க மறுத்தான் ராவணன். ஆக மனைவி சொல் கேட்டதால் மாண்டவன் தசரதன். மனைவி சொல்லைக் கேட்காமல் மாண்டவன் ராவணன்.

இவர்களிடமிருந்து மாறுபட்டவர்கள் விபீஷணனும் அவன் மனைவி சரமையும். இருவரும் தங்களுக்குள் ஒருவர் கருத்தை இன்னொருவர் மதித்து அதன்படி நடந்தனர்.

கந்தர்வ அரசன் சைலூஷனின் மகளான சரமை மானசரோவர் ஏரிக்கரையில் பிறந்தாள். அப்போது ஏரியின் நீர் உயர்ந்தது. அதைக் கண்ட குழந்தை அழுதது. உடனே சைலூஷனின் மனைவி ஏரியைப் பார்த்து "சரோமா வர்தாதா" என்றாள். அதன் பொருள் "ஏரியே உயராதே" என்பதாகும். இதன் காரணமாக குழந்தைக்கு சரோமா என்று பெயர் வைக்கப்பட்டது. சரோமா தமிழில் சரமை என்று அழைக்கப்படுகிறாள்.

ராவணன் அரண்மனையில் இருந்து வந்த உணவை அசோகவனத்தில் இருந்த சீதை உண்ண மறுத்தாள். அதை அறிந்த விபீஷணன் தன் மனைவி சரமையிடம், சீதைக்கு உணவைத் தயாரித்து வழங்கும்படி கூறினான். சரமையும் கணவன் சொற்படி கேட்டு

சீதைக்கு உணவளித்தாள். விபீஷணனும் அவனது குடும்பத்தினரும் ராமனின் மீது மிகவும் பக்தி கொண்டவர்கள் என்பதால், சரமை தந்த உணவை சீதை ஏற்றுக்கொண்டாள்.

மேலும் விபீஷணன் கூறியதை ஏற்று அசோகவனத்தில் இருந்த சீதையின் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்தாள். சீதையைப் பயமுறுத்த ராவணன் ஒரு மாய நாடகத்தை நிகழ்த்தினான். அதன்படி ராமனின் தலையும், வில்லும் சீதையின் முன் கொண்டு வந்து வைக்கப்பட்டது. அதை பார்த்த சீதை மூர்ச்சையுற்றாள். ராமன் இறந்த பிறகு வாழ விரும்பாமல் தன் உயிரை போக்கிக் கொள்ள நினைத்தாள். அப்போது ஓடிவந்த சரமை அவளைத் தடுத்து "உன் கணவன் ராமன் இறக்கவில்லை. உயிரோடுதான் இருக்கிறான். இது ராவணனின் மாயைகளில் ஒன்று. கலங்காதே மகளே" என்று சீதையைக் காப்பாற்றினாள். கருணை உள்ளம் கொண்டு சீதைக்கு அன்னையாக மாறி அரவணைத்தாள்.

அண்ணனின் தவறான செயலுக்குத் துணைபோவதா அல்லது ராமனின் பக்கம் நிற்பதா என்ற குழப்பத்தில் தவித்த விபீஷணனிடம் நியாயம் எங்கிருக்கிறதோ அதன் பக்கம் நில்லுங்கள் என்று கூறி கணவனை தர்மத்தின் பாதையில் செல்லுமாறு வழி நடத்தினாள் சரமை.

மேலும் சீதையைத் தான் பாதுகாத்ததுடன் நிற்காமல் தன் மகளையும் அப்பணியில் ஈடுபடுத்தினாள். அசோகவனத்தில் சீதையைக் கண்ணின் இமை போலக் காத்தவள் திரிசடை. இந்தத் திரிசடை வேறு யாருமல்ல, சரமை பெற்றெடுத்த மகள்தான்.

ராமனுக்கும் சீதைக்கும் நடுவே தூது சென்ற அனுமனை அனைவரும் அறிவர். விபீஷணனையும் அவன் மகள் திரிசடையையும் கூட அறிவர். ஆனால் இலங்கை மண்ணில் இருந்து கொண்டே ராவணனின் அதர்மச் செயலைத் துணிவுடன் எதிர்த்து, சீதையைப் பாதுகாத்து ராமனிடம் ஒப்படைத்தவளும், சீதையால் ‘‘அன்னையே‘‘ என்று அன்புடன் அழைக்கப்பட்டவளுமான சரமை நம்மில் பலராலும் அறியப்படாதவள் என்பதுதான் உண்மை.

சரமை சீதைக்கு உணவு கொண்டுவந்து கொடுத்தல். அருகில் திரிசடை

மறுபடியும் அவள்

இரம்யா நடராஜன்
செங்கல்பட்டு

வெகுநேரமாக அந்த வேப்பமரத்தடி அவளைத் தாங்கிக் கொண்டிருந்தது. தன்னால் முடிந்தது நிழலும் குளிர் காற்றும் தான் என நினைத்ததோ என்னவோ. அவள் கூந்தல் வருடி வியர்வை துடைத்துக் கொண்டிருந்தது. கண்ணீர் துடைத்தும் சுவடுகள் மறைவதாய் இல்லை. குத்தவைத்து அமர்ந்துக் கொண்டு ஏதோ புலம்பலின் நடுவில் ஒரு விசும்பல். அவள் புலம்புவது அவளுக்கே புரியுமோ என்னவோ. வேப்பமரத்துக்கு புரிந்தது என்று தான் தோன்றுகிறது. இப்படியே சில மணிநேரம் போயிருக்கும்.

சட்டென்று ஏதோ நினைத்தவளாய் எழுந்து தன் புடவையை உதறி சரி செய்து கொண்டாள். கலைந்த கூந்தலை கழற்றி உதறி கொண்டையிட்டுக் கொண்டாள். தன் அருகில் இருந்த பையிலிருந்து ஒரு பாட்டல் நீரை எடுத்து முகம் கழுவிக் கொண்டாள். அப்படியே தொண்டையையும் நனைத்துக் கொண்டாள். பழையபடி அந்த கல்லின் மேல் குத்தவைத்து அமர்ந்து எதிர்திசையில் வெறித்து உட்கார்ந்தாள். இப்போது கண்ணீர் இல்லை. வெறுமை மட்டுமே.

‘அம்மான்னு நீ எனக்கு என்ன செஞ்சு கிழிச்ச... படி படின்னா எனக்கு ஏறல அதுக்குன்னு விட்ருவியா. ஒரு பத்தாயிரம் ஏற்பாடு பண்ணித்தர முடியாது உனக்கு. யார்கிட்ட பசப்பற. உன்னாலதான் நான் சந்தியில நிக்கறேன். வேண்டாம்னு சொன்னவள நீதான் புள்ளதாச்சினு கூட்டிட்டு வந்து வூட்டுக்குள்ள சேத்த. அவ புத்திய காட்டிட்டு எவன் கூடவோ போயிட்டா...உன்னால தான் கோர்ட் ல நிக்கறேன். நீ தான் பணம் குடுத்து வாதாடனும். பணம் குடு. பத்து வீட்டில வேல செய்யற ல..நல்ல தீனி திங்கற. கேட்டு வாங்கு. வேல செஞ்சு கழிச்சிக்கோ...எனக்கு அதெல்லாம் தெரியாது. இன்னும் ரெண்டு நாள்ல பத்தாயிரம் கொண்டு வா. இல்லனா உனக்கு தீ வைக்க புள்ள இல்ல... போடி’

மனதின் மூலையில் எதிரொலிக்க தலையை சிலுப்பிக் கொண்டாள். மறுபடி வெற்றிடம் வெறித்தாள்.

‘உம்மகனோட புள்ள தான இது..அதுல சந்தேகம் இல்லியே. அந்த கூர வீட்ட இவன் பேருல எழுதி குடுத்தா என்ன. அவன நம்பி என் வாள்க்கை போச்சு. எனக்கு புடிச்ச வாள்க்கைய நான் பாத்துக்கறேன். இந்த புள்ளைக்கு எலுதி குடு. வயசாச்சில்ல இன்னும் என்ன ஆச. எங்காவது ஒண்டிக்க உன் புள்ளைய எவ கூடயாவது போக சொல்லு..

அதெல்லாம் நல்லா பண்ணுவான். அவன பத்தி எனக்கென்ன இன்னொரு தரம் இப்டி தெருல கத்த விடாத மரியாதையா வூட்ட எழுதி குடுத்துபுட்டு நடைய கட்டு. உன்னால என் வாள்க்க போச்சு..மூதேவி'

சம்மந்தம் இல்லாத ஒரு பெண்ணின் குரல் காது புகுந்து மண்டை குடைகிறது அவளுக்கு. அக்கம் பக்கம் பார்த்த பார்வைகளும் ஏளனங்களும் ஊசியாய் குத்திய நிமிடங்கள் நெஞ்சில் நெறுஞ்சியாய் குடைந்தது. விதிர்விதிர்த்து எரிந்த நெஞ்சுக்குழிக்குள் எச்சிலை விழுங்கி அனைத்தாள். சுடும் நினைவுகளைத் தான் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

பெரிய பிள்ளையை காலனுக்கு வாரிக்குடுத்த போதும் சின்னவனுக்காக கடையில் இட்டலி வாங்கி ஊட்டிக்கொண்டிருந்தவள் இவள் தான். பள்ளிபடிப்பில் நாட்டமில்லாமல் ஊர்சுற்றித்திரிந்து, கெட்ட பழக்கம் தொற்ற ஆரம்பிக்கையில், தன் ஊரைவிட்டு வேரோடு பெயர்த்து வந்து இங்கு தினக்கூலிக்கும் வீட்டுவேலைக்கும் என்று தேய்ந்து பள்ளியில் சேர்த்தாள். காதலோ கருமமோ ஒரு பெண்ணின் வாழ்க்கை என்று ஊர் பொதுவில் மன்னிப்புடன் கல்யாணம் முடித்து வைத்தவள் இவள் தான். கணவன் இருந்தவரை ராணியாக கொண்டாடப்பட்டவள் தான் இன்று தெருவே அவளின் நிலையை வேடிக்கை பார்க்கும் நிலைக்கு வந்துவிட்டாள்.

''டேய் ரேசு....எழுந்திரு டா...ஒரு படுபாவி என்ன பாத்து அப்டி கேட்டுபுட்டான் டா.. மனசு தவிக்குது டா...டேய் ரேசு...''

''சொம்மா என்ன கத்தல்..எவன் என்ன பண்ணான்....''

''வக்கில பாத்து பேசிபுட்டு வரும்போது ஒருத்தன் வெய்யில்ல போறியே வா வண்டில கூட்டிட்டு போறேன்னான்..வேணா வேணா சொல்ல..வயசான காலத்துல பாவமா இருக்க வா வண்டில ஏறுன்னான்னு ஏறிட்டேன்...கொஞ்சம் நேரம் அப்றம் ஆயிரம் தர்ரேன் வூட்டுக்கு வரியான்னு...ஐயோ...நெஞ்சு வெடிக்குது டா ரேசு...ஊரே சாமி மாதிரி என்னை பேசுது..நான் வேல செய்யிற வூட்டுலலாம் என்னை கண்டு அவ்ளோ அன்பா இருக்கு... யாருக்கு துரோகம் பண்ணல...திருட்டு பண்ணல...பொய்யி கூட சொன்னதில்ல..என்ன பாத்து இப்டி... ச்சீ...என்னடா வொலகம் இது...முடிலடா''

"ஏய்...இதெல்லாம் விசயம்னு மூக்குசிந்தற..எந்திரிச்சு போ அப்டி..வந்துட்டா.. அப்படியே போன கூட ஆயிரம் கூட பெற மாட்ட மூதேவி"

வேப்பமரம் கூட என்னவோ உணர்ந்தது போல..இலை அசைக்காமல் இறுகி இருந்தது. இப்போது தான் துடைத்த கண்ணிலிருந்து வழிந்து கொண்டிருந்த செந்நீரை துடைக்கவும் விருப்பமில்லாமல் காற்றும் உறைந்து போயிருந்தது. வாய்விட்டே 'ஆஆஆஆ' என்று அலறினாள். வான்முட்டி சென்ற அவள் குரல் கரைந்து காணாமல் போனது. அப்படியே மரத்தடியில் சரிந்தாள். அழுகை மனதை சிறுபிள்ளையாக்கியது. உடல் குறுக்கி கால் குறுக்கி முட்டியைக் கட்டிக்கொண்டு 'ம்மா' 'ம்மா' என்று சிறுகுழந்தையானாள். இவளை வேடிக்கை மட்டுமே பார்த்துக்கொண்டிருந்தது அந்த தெரு சூரியன். எப்போது அசந்தாள் என்று தெரியவில்லை. கண்விழித்தாள். மனத்தின் பாரம் அசதியாய் வழிந்தது. அப்படியே எழுந்து அமர்ந்தாள். இதயவெளிகளில் ஏதோ இறுகிய உணர்வு எழுந்தது. காயங்களை வெறுமை அப்படியே முழுங்கத் தொடங்கியது. தன் நிலைக்கு வந்தாள்.

எதிர் தெருவில் கட்டட வேலைக்கு செய்யும் இளைஞர்கள் கண்ணில் பட்டனர். வெயிலின் தாக்கத்தில் ஆளாளுக்கு குடத்திலிருந்த தண்ணீரை அள்ளி குடித்துக் கொண்டிருந்தனர். சுருட்டிக்கொண்டு எழுந்த அவளிடமிருந்த பையை தூக்கிக் கொண்டு அவர்களை நோக்கி ஓடினாள்.

"ஏப்பா.. இந்தாப்பா இத துன்னு இந்தா மோரு குடி... குடி...ப்பா... நிறைய இருக்கு பாரு. ஆளுக்கு கொஞ்சம் குடிங்கப்பா".

"இதெல்லாம் வேணாம்..நீங்க யாரு..எதுக்கு குடுக்கறீங்க".

"நான் யாரோ சாமி..பாவம் கஸ்டபடுறீங்க வெய்யில்..வேற...நா இங்க தான் நாலு வூட்டுவேல செய்யிறேன் அங்க எனக்கு குடுத்தாங்க...எனக்கு வேண்டியில்ல..நீங்க குடிங்க...கூடவே இந்த பண்டம் வாயில போட்டுக்கங்க..பசிக்கும் சாமி..சாப்டுங்க....."

அவளிடமிருந்த தண்ணீரை மட்டும் குடித்துவிட்டு காலிப்பையை உதறி கையில் இடுக்கிக்கொண்டு, தன் முந்தானையை எடுத்து தலையில் போர்த்தியபடி தேய்ந்த காலில்ல புழுதி செருப்பு தேய வந்த திசையிலேயே நடக்கத் துவங்கினாள்.

வெப்பம் உமிழும் சாலை வழிவிட்டு நின்றிருந்தது. தலை சாய்த்து பந்தலிட்டன தெருவோரம் நின்ற மரங்கள். துரத்தும் வெக்கையில் தூரத்து ஓவியமாய் மறுபடியும் அவள்.

மலேசியச் சிறுகதைகளில் தமிழர் உணவு முறை

முனைவர் ஜ. ஜான்சிராணி
ஆய்வு வளமையர், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது உணவாகும்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்" – (குறள்.எண்.942)

என்கிறார் திருவள்ளுவர். அதாவது உடலுக்கு எது பொருத்தமான உணவு என்பதைத் தேர்ந்தெடுத்து உண்பதால் நோய்களின்றி வாழமுடியும் என்பதே இதன் கருத்து. பண்டைத்தமிழர்களின் உணவுமுறை அவர்களின் வாழ்வியலோடு கலந்திருந்தது. "உணவே மருந்து; மருந்தே உணவு" என்ற கோட்பாட்டோடு வாழ்ந்தனர். உணவு முறையிலும் தங்களுக்கென தனிக்கோட்பாடுகளையும் கட்டுப்பாடுகளையும் வகுத்திருந்தனர்.

இன்று காலத்தின் மாற்றத்தால் பண்டைத் தமிழரின் உணவு முறைகளிலிருந்து விலகி வந்திருக்கிறார்கள். இதில் மலேசியத் தமிழர்கள் மட்டும் விதிவிலக்கல்ல. ஆனால், இன்றைய காலத்தில் தமிழகத்தில் மக்கள் மேற்கொண்டிருக்கும் உணவுப் பழக்கவழக்கமும் மலேசியத் தமிழர்களின் உணவுப் பழக்கவழக்கமும் பெரும்பாலும் ஒன்றுபட்டதாகவே இருக்கின்றது என்பதைப் பல சிறுகதைகள் தெளிவுபடுத்துகின்றன.

தேவராணி கிருஷ்ணன் எழுதிய 'அந்த மனிதர்' என்ற சிறுகதையில் வேலையின் காரணமாக ஊர் மாற்றலாகிப் புதிய ஊருக்குச் செல்லும் குடும்பத்தினருக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சுவைபட விவரிப்பதாக அமைந்துள்ளது. "வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்ற கருத்தை முன்னிறுத்துவதோடு அதனால் ஏற்படும் பின்விளைவுகளையும் தெளிவுபடுத்துகின்றது. இச்சிறுகதையில் புதியதாகக் குடிவந்திருக்கும் குடும்பத்தினருக்கு வலிய வந்து உதவிசெய்யும் பக்கத்து வீட்டுக்காரர். அவரது கனிவான பேச்சும் உதவும் மனமும் இவர்களைக் கவர்கிறது. அவரின் நல்ல மனதை உணர்ந்து அவரது எட்டுவயது மகன், மனவளர்ச்சி குன்றிய நிலையில் இருப்பதை எண்ணி மனம் வருந்துகின்றனர். பின்புதான் தெரியவருகிறது. அந்தப் பெண்மணி அவரது தம்பியை ஏமாற்றி அந்த வீட்டைப் பெற்றிருப்பதை அதனால் அவருடைய தம்பி மனச்சிதைவு ஏற்பட்டு ஊரைச் சுற்றுவதையும் அறியமுடிகிறது.

இச்சிறுகதையில், புதியதாக இடம்பெயர்ந்து வந்திருக்கும் குடும்பத்தினர் வீட்டை ஒழுங்குசெய்யத்தாமதமாகும் என்றகாரணத்தால், அவர்களுக்குப்பக்கத்துவீட்டுக்காரரான திலகவதி தேத்தண்ணியும் உளுத்தம் வடையும் செய்து கொண்டு வந்து தருகிறார். தேத்தண்ணி என்றால் தேநீர். வடையும் தேநீரும் தமிழகத்தில் தற்போதும் மக்களின் உணவுப் பழக்கவழக்கத்தில் உள்ளன.

மேலும், இது ''ரெடிமேடா நீங்களே ஊற வைச்சி ஆட்டினதா?'' என்று கேட்டவுடன், ''நமக்கு ரெடிமேட் ஒத்து வராதுக்கா வீட்டு வேலைகளை முடிச்சிட்டா சும்மாதானே இருப்பேன். நானே உளுந்தை ஊரப்போட்டு ஆட்டுக்கல்லை ஆட்டி சுட்டதுக்கா, ஆட்டுக்கல்லு மாமியார் விட்டுப் போனது'' என்று பெருமையாகச் சொன்னார் என்று குறிப்பிடப்படுவதிலிருந்து தமிழர்களின் உணவுமுறை மலேசியத் தமிழர்களிடமும் இருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

சி. சுபத்திரா தேவியின் 'தேசிய சேவை' என்னும் சிறுகதையில், ''எனக்கு சோறு வேணா'' என்ற மகனிடம் அவள் தாய் ஆதிலட்சுமி, ''என்னடா உனக்கு இப்படி கோபம் வருது? வெறும் வயித்தோட படுக்கக்கூடாது. கொஞ்சம் சாப்பிடு. சாடின், முட்டை அவிச்சு, நெத்திலிப்பொடி பொரிச்சி வைச்சிருக்கேன். மதியம் வைச்ச சாம்பாரும் இருக்கு, சாப்பிடு'' என்று கூறுகிறாள்.

'தேசிய சேவை' சிறுகதையில் மற்றுமொரு இடத்தில், ''வாழையிலைகளை வீசிவிட்டு திரும்பிய ஆதிலட்சுமி பழையக்கறி சுண்டிபோய் இருப்பதைப் பார்த்தாள். கோழிக்கறி வீடெல்லாம் மணத்துக் கொண்டிருந்தது. அதனை வழித்து ஒரு பாத்திரத்தில் வைத்துவிட்டு பாத்திரத்தை தூக்கி கழுவப் போட்டாள்'' என்று இடம்பெறுகிறது. இக்கதையிலிருந்து வாழையிலையில் உணவு உண்பதும் சாம்பார், முட்டை, நெத்திலிப்பொடி கருவாடு என உணவு வகைகளும் தமிழகத்தில் உள்ள பாரம்பரியம் மலேசியத் தமிழர்களிடமும் உள்ளன.

தமிழர்களின் அன்றாட உணவுப்பழக்கத்தில் முக்கியமானதாக இடம் பெறுவது 'குழம்பு'. இந்த உணவு வகை பருப்பு, காய்கறி, இறைச்சி, பயறு உள்ளிட்டவற்றைக் கொண்டு சோற்றில் ஊற்றிச் சாப்பிடும் வகையில் குழம்பு என்பது தயாரிக்கப்படுகின்றது. மலேசியத் தமிழர்கள் குழம்பு என்பதைக் கறி என்று அழைக்கின்றனர். இதனைப் பின்வரும் சிறுகதையின் வாயிலாக அறிய முடிகின்றது.

மலேசியத் தமிழர்களின் உணவில் 'கருவாடு' என்பது முக்கியமாக இடம்பெறுகின்றது என்பதைப் பல சிறுகதைகளின் ஊடாக அறியமுடிகின்றது. அடுத்ததாக, 'நாசிலெமாக்' என்று மலாய் மொழியில் குறிப்பிடப்படும் தேங்காய்ப்பால் சோறு. இது மலேசியாவின் தேசிய உணவு. காலை நேரத்தில் உண்ணப்படுகின்றது. இது மலாய்க்காரர்களிடம் மட்டுமன்றி தமிழர்களிடமும் காணப்படும் முக்கிய உணவாக உள்ளது.

காற்று வசப்படுவதில்லை' என்ற சிறுகதைத் தொகுப்பில் உள்ள எழுத்தாளர் நல்லம்மா இராமசாமியின் 'அப்பா அல்ல... அப்பப்பா...' என்ற சிறுகதையில், படித்து முடித்துவிட்டு வேலை கிடைக்காமல் இருக்கும் ஒரு பெண் துணிச்சலாகத் தன் குடியிருப்புப் பகுதியில் உணவுக்கடை ஒன்றைத் தொடங்குகிறாள்.

''அன்று திங்கட்கிழமை, வாரக் கடைசி விடுமுறை முடிந்து வேலைக்குச் செல்லும் முதல் நாள். அந்தத் தாமானின் முச்சந்தியில் புதியதாக, சின்னதாக இரண்டு மேசைகள் முளைத்திருந்தது. அந்தக் குடியிருப்புப் பகுதியில் இதுவரையில் அப்படி ஒரு கடையை யாரும் பரப்பியதாய்த் தெரியவில்லை. அவ்விடத்தைக் கடந்து செல்லும் பலர் தங்களின் விநோதப் பார்வையை மட்டும் வீசிச் சென்றனர்.

சிறிது நேரம் சென்று அவ்வழியே வந்த புரோட்டோன் ஈஸ்வரா கார் ஒன்று நிற்க, அதிலிருந்து ஒரு மலாய் மாது இறங்கி வந்தார். காருக்குள் ஐந்தாறு சின்னஞ்சிறிய பள்ளிப் பிள்ளைகள் துறுதுறுவென்று தங்களுக்குள் ஏதோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர். வந்தவளை, நீலவேணி ''சிலாமட் பாகி'க்கா'' என உபசரித்தாள்.

வந்தவளும் சிரித்த முகத்தோடு ''சிலாமட் பாகி டேக்'' எனக் கூறிவிட்டு மேசைமேல் பரப்பி வைத்திருந்தவற்றை நோட்டம் இட்டாள். சூடாக வைத்திருக்கக் கூடிய பாத்திரத்தில் 'நாசிலெமாக்' இருந்தது. அதன் மூடியைத் திறந்தவுடன் கமகமவென பண்டான் இலையின் வாசனையும் தேங்காய்ப் பாலின் மணமும் குப்பென வெளிப்பட்டது. அழகாக வரிசையாக வைக்கப்பட்டிருந்த பாத்திரங்களில் கோழி சம்பல், நெத்திலி சம்பல் இருவிதமாக, பொரித்த நெத்திலி, பொரித்த நிலக்கடலை, அழகான வடிவில் வெட்டி வைக்கப்பட்டிருந்த வெள்ளரித் துண்டுகள், பொரித்த, அவித்த முட்டைகள் என பார்த்தவுடனே வெகு எளிதில் அங்கு 'நாசிலெமாக்' விற்கப்படுகிறது என்று அறிந்து கொண்டாள்.

புன்முறுவல் பூத்த இதழ்களோடு ''வாவ்! நாசிலெமாக், சம்பல் நம்பாக் சந்தேக், பகி, நாசி லெமாக் தெலூர் கோரேங் தீகா புங்குஸ், நாசி லெமாக் ஆயாம் டுவா புங்குஸ் டேக்'' என்றாள்.

இந்தச் சிறுகதை மூலம் நாசிலெமாக் என்ற தேங்காய்பால் சோறு மலேசியத் தமிழர்களிடமும் மலாய் மக்களிடமும் முக்கிய உணவாக இடம்பெறுகின்றது என்பதை அறிய முடிகின்றது. இது ஒரு தேசிய உணவு. காலை நேரத்தில் உண்ணப்படுகின்றது. வீடுகளிலும் சமைக்கப்படுகின்றது. இதைப் பல மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள் நமக்கு உணர்த்துகின்றன.

மேலும், இச்சிறுகதையில் ஓரிடத்தில், ''சீன உணவகத்துக்கு மாதம் ஒருமுறை சாப்பிடச் செல்வார்கள். மனைவி, பிள்ளைகளுக்குப் பிடித்தமானதைச் சாப்பிட வைப்பவர், வீட்டுக்கு வந்து பழைய கறியைச் சூடாக்கித் தரச்சொல்லி சாப்பிடுவார்'' என்று வருவதன்மூலம் சீன உணவுகளை உண்ணும் வழக்கமும் மலேசியத் தமிழர்களிடம் இருப்பதை அறிய முடிகின்றது.

அதிகாரிச்சி

மா.மாரிராஜன்.
சோழர் வரலாறு ஆய்வு மையம், காரைக்கால்

வரலாற்றுக் காலங்களில் மன்னர்கால ஆட்சியில் அனைத்தும் அனைவருக்கும் என்ற பொதுவுடமை வழக்கத்தில் இருந்தது என்பதை ஏராளமான கல்வெட்டுத் தரவுகள் மூலம் வரலாற்றை அறியமுடிகிறது குறிப்பாய் பெண்களின் நிலை மிகவும் சிறப்பாக இருந்தது.

சோழர்கால கல்வெட்டு செய்திகள் வழி

பெண்களுக்கு சொத்துரிமை இருந்தது. தங்கள் விருப்பம்போல் பெண்கள் செயல்பட உரிமையும் அதிகாரமும் இருந்தது. கோவில்களுக்குத் தானம் வழங்குதல், குளங்கள் வாய்க்கால்கள் வெட்டுதல், ஏரிகளைப் பராமரித்தல், தண்ணீர் பந்தல் அமைத்தல் போன்ற பல்வேறு அறப்பணிகளை பெண்கள் தங்கள் சொந்த பொருளுதவியில் செய்தார்கள் என்னும் செய்தியை ஏராளமானக் கல்வெட்டுகள் பதிவு செய்கின்றன.

பெண்கள் அரசுப்பணியிலும் இருந்தார்கள். உயர்ந்த பொறுப்பேற்று திறம்பட செயலாற்றினார்கள்.

அரசுப்பணியில் இருந்த பெண்கள் அதிகாரிச்சி என்னும் பெயர் பெற்று இருந்தனர் என்பதை கல்வெட்டுகள் மூலம் நம்மால் அறியமுடிகிறது.

முதலாம் இராஜராஜ சோழனின் பட்டத்தரசி உலோகமாதேவி. இவர் திருவையாற்றில் ஓலோகமாதேவீச்சுரம் என்ற பெயரில் ஒரு கோவில் கட்டினார். இக்கோவிலுக்கு ஏராளமானோர் தானம் அளித்தனர்.

தானமளித்த பலரில் அதிகாரிச்சி ஒருவரும் இடம்பெற்றுள்ளார்.

கல்வெட்டு வாசகம்.

> "உடன் கூட்டத்து அதிகாரம் செய்கின்ற கோவலூரு டையான் காடந் னூற்றெண்மதையும் அதிகாரிச்சி எருதந் குஞ்சிர மல்லியையும்"

அந்தப் பெண் அதிகாரியின் பெயர்

" எருதந் குஞ்சரமல்லி "

இந்தப் பெண் அதிகாரியின் கீழ் 180 ஊழியர்கள் பணியாற்றியுள்ளனர்.

இதுபோன்ற வரலாற்றுக் கால பெண் அதிகாரிகள் பற்றிய செய்திகளை மேலும் பல கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது.

அம்மா

அம்மா
பிற்காலத்தில்
எதனாலோ
மௌனச் சிலை
ஆனாள்

தரையில்
படுத்துக் கொண்டு
கால் மேல்
கால் போட்டுக் கொண்டு
ஒரு சக்கரவர்த்தினியாக
தனக்குள்
பேசிக் கொண்டு
கடகட வெனச்
ஓவென
கொற்றவைச்
சிரிப்பு
சிரித்தாள்

மாலை வேளைகளில்
மௌனமாக
பொம்மை சீரியல்
பார்த்தாள்

என்ன கதை
என்பேன்
ஏதோ கதை
என்பாள்
மாலைக் காப்பி
ஆற்றிக் கொடுப்பேன்
சூடு பத்தாது
என்பாள்

டம்ளரை
உயரத் தூக்கி
பல்லில்
காப்பி ஊற்றி
உள் அனுப்புவாள்

பக்திப் புத்தகங்களை
கண் விரித்து
சுவர் சாய்ந்து
முட்டு இடுக்கி
முட்டை
வாசிப்பு
விரி பலகை ஆக்கி
மௌனமாக
மனதுள்
வாசிப்பாள்

ரசத் தக்காளியை
நசுக்கி விட்டு
ரசம் ரசித்து
ரசித்து
ரசச் சோறு
உண்பாள்
கரண்டி ரசம்
உள்ளங்கையில்
வாங்கி
ஓசையின்றிக்
குடிப்பாள்
அந்த
துக்க நாள் ஒன்றில்
கண்ணாடிப்
பெட்டியில்
கால் நீட்டி
அதே கடும் மௌனம்
தாங்கி
சற்றே அரைக் கண்
மூடி
மரியாதையாய்
கரம் கோர்த்து
படுத்து இருந்தாள்

அது யாருக்கான
மரியாதை
என் இறை
மரியாதை
அம்மா..

உன்னிடம்
பலப்பல
சின்னஞ்சிறு கதைகள்
கதைத்த நான்
உன்னிடம்
அந்த
மௌன காரணமும்
கேட்டு இருக்க வேண்டும்
அதோ
அந்த பால் வெளி
மௌனம்
பால் வெண்ணிலா
மௌனம்
சிறு தூறல்
சாரல்
உள் மௌனம்
பெரும் மழை
பொருள் மௌனம்
பெரும் சுழல்காற்று
சின மௌனம்
இதத் தென்றல்
சுக மௌனம்
அந்தப் பெருந் தீ

கடும் மௌனம்
பெருந் தீயின்
பறக்கும் கங்குத்துகள்
களி மௌனம்
எல்லாம் எல்லாம்
நீயாம்மா
வாழ்வின்
பொருள் உணர்த்தும்
நீயாம்மா
என் மௌன குரு
அம்மா

என் வீழும்
காயா கண்ணீரின்
மௌன கனமும்
நீயே என்
செல்ல அம்மா.
இனி
என் மௌனத்துதி
ஒருநாளும்
உன்னோடு பேசவே
பேசாது
என் கண்கண்ட
மௌன இறையே
என் அம்மா
என் அம்மா

– கேள்விக்காரன்...

ஜானகி அம்மாவும் கரும்பும்

சுதந்திரம் அடைவதற்கு முன்னர் வரை, நமது நாட்டில் விளைவிக்கக் கூடிய கரும்பு, தற்போதைய கரும்பு வகைகளைக் காட்டிலும் இனிப்பு சுவை வெகுவாக குறைந்து இருக்கும். விளைச்சலும் ஏக்கருக்கு பத்து, பன்னிரண்டு டன்களுக்கு மேல் எந்த காலத்திலும் வந்ததில்லை. எப்படி இந்த கூடுதல் சுவையும், அபார விளைச்சலும் சாத்தியமானது?

கேரளத்தில் 1897 ல் பத்தொன்பது குழந்தைகளில் ஒருவராக பிறந்தவர் ஜானகி அம்மா. இயற்கையின் மீதும் தாவரங்களின் மீதும் தான் கொண்ட ஆர்வத்தின் காரணமாக, தந்தையிடம் மன்றாடி தனது தாவரவியல் இளங்கலை படிப்பை சென்னை ராணி மேரி கல்லூரியிலும் முதுகலை படிப்பை பிரசிடென்ஸியிலும் முடித்தார்.

அவரது வயதொத்த பெண்கள் திருமணம் முடித்து வாழ்க்கையில் நிலைபெற முடிவெடுத்த காலத்தில், இவர் தனது தாவரவியல் ஆராய்ச்சி படிப்பை, கடல் கடந்து சென்று, அமெரிக்காவின் மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் பயின்று, 1931ல் பிஎச்டி பட்டம் பெற்றார்.



இரண்டாம் உலகப் போரின் போது லண்டன் நகரில் உள்ள ராயல் தாவர வியல் கழகத்தில் பணியாற்றி, அனைத்து வகை தாவர குரோமோ சோம் வரைபடங்கள் (Mapping) பணியை செய்து முடித்தார்.

இத்தனை பணிக்காலத்திலும தன் உடையை, நடவடிக்கையை இந்திய தன்மை மாறாமல் நடந்து கொண்ட தால், இன வேற்றுமை உணர்வில், தனது பதவி உயர்வு தடைப்படுவது பற்றி பெரும் அதிருப்தியில் இருந்து வந்தார்.

இதற்கிடையில், நாடு சுதந்திரம் அடைந்து முதல் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு அவர்கள், தனது லண்டன் விஜயத்தின் போது, ஜானகியை சந்தித்து, இந்திய மண்ணில் பணியாற்ற வருமாறு வேண்டினார்.

அவரது இந்திய பணிக்காக உருவாக்கப் பட்டது தான் தேசிய தாவரவியல் பரிசோதனை மையம். இந்த மையத்தின் சார்பில் பல்வேறு தாவரங்களின் குரோமோசோம்களை மாற்றம் செய்து புதிய பூச்செடிகள், பழ மர வகைகளை உருவாக்கினார்.

நாட்டின் சர்க்கரை தட்டுப்பாடு அதிகமாக இருந்ததை உணர்ந்து, தான் லண்டனில் தனது சக பேராசிரியர்களால் எள்ளி நகையாட ப்பட்ட சோளத்துடன் கரும்பை இணைத்து புதிய ரகங்களை உருவாக்கும் பணிகளைத் தொடர்ந்து செய்தார். அதன் விளைவாக நாம் பெற்றவை தான் தற்போது வரை நாட்டில் வீரிய விளைச்சலைத்தந்து வரும் ஒட்டுக்கரும்பு ரகங்களாகும்.

1984ல் தனது இறுதி வரை தாவர வியல் வளர்ச்சியில் புதிய கருத்து களை உருவாக்கி மறைந்தவர் மதிப்பிற்குரிய ஜானகியம்மா.

- முகநூல் பதிவு

ஔவையார் – அரியது எது?

அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானிடர் ஆதல் அரிது
மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
தானமும் தவமும் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே.

Translation by Sambandam Ekambaram from "ஔவையார் – அரியது எது?"

Most exceptional
Oh! Revered Godly-Son! The most distinguished happening it is
Yes! It is most exceptional to be born, being human!
Even if you were born, it is extraordinary to be born
Free from deformity, blindness, deafness, and gender incongruence
Even if born free from such imperfections
A gift it is! To grow into a learned and wise scholar, endowed with human values
Even, if you attain wisdom of inner clarity and erudite scholarship
Unique it is, to have heart that loves to give, leading a life of awareness!
For such a hallowed human having devotion to give, living with dedicated awareness
The doors of Cosmic Abode open to welcome aboard!

பெண்ணுக்கு நீதி

கல்யாணம் ஆகாத பெண்ணே! - உன்
கதிதன்னை நீநிச் சயம்செய்க கண்ணே!
கல்யாணம் ஆகாத...
வல்லமை பேசியுன் வீட்டில் - பெண்
வாங்கவே வந்திடு வார்கள்சில பேர்கள்;
நல்ல விலை பேசுவார் - உன்னை
நாளும் நலிந்து சுமந்து பெற்றோர்கள்,
கல்லென உன்னை மதிப்பார் - கண்ணில்
கல்யாண மாப்பிள்ளை தன்னையுங் காட்டார்;
வல்லி உனக்கொரு நீதி - "இந்த
வஞ்சகத் தரகற்கு நீஅஞ்ச வேண்டாம்."
கல்யாணம் ஆகாத...

பெற்றவ ருக்கெஜ மானர் - எதிர்
பேசுவாண் ணாதவர் ஊரினில் துஷ்டர்,
மற்றும் கடன் கொடுத்தோர்கள் - நல்ல
வழியென்று ஜாதியென் றேயுரைப் பார்கள்;
சுற்றத்தி லேமுதி யோர்கள் - இவர்
சொற்படி உன்னைத் தொலைத்திடப் பார்ப்பார்.
கற்றவளே ஒன்று சொல்வேன் - "உன்
கண்ணைக் கருத்தைக் கவர்ந்தவன் நாதன்!"
கல்யாணம் ஆகாத...

தனித்துக் கிடந்திடும் லாயம் - அதில்
தள்ளி யடைக்கப் படுங்குதி ரைக்கும்
கனைத்திட உத்தர வுண்டு - வீட்டில்
காரிகை நாணவும் அஞ்சவும் வேண்டும்;
கனத்தஉன் பெற்றோரைக் கேளே! - அவர்
கல்லொத்த நெஞ்சையுன் கண்ணீரி னாலே
நனைத்திடு வாய்அதன் மேலும் - அவர்
ஞாயம் தராவிடில் விடுதலை மேற்கொள்!
கல்யாணம் ஆகாத...

- கவிஞர் பாரதிதாசன்

மாலைக் கடற்கரை யோரம் - நல்ல
வண்புனல் பாய்ந்திடும் மாநதி தீரம்
காலைக் கதிர்சிந்து சிற்றூர் - கண்
காட்சிகள் கூட்டங்கள் பந்தாடு சாலை
வேலை ஒழிந்துள்ள நேரம் - நீ
விளையாடுவாய் தாவி விளையாடு மான்போல்!
கோலத்தினைக் கொய்வ துண்டோ? - "பெண்கள்
கொய்யாப் பழக்கூட்டம்" என்றே உரைப்பாய்.

கல்யாணம் ஆகாத...முழுநிலவின்
முகமெல்லாம் ஏனிந்தகுருதித் தெளிப்பு
அதன் பயம் நிரம்பிய விழிகள் நம்மை
ஏனிப்படிப் பார்க்கின்றன
என் முகம் ஏந்தி நீ முத்தமிடும் போதும்
விழியகன்று திகைக்கிறேன்இதுதான் நம்
இறுதியிணைவோ என்று

நீ விடைபெற்றுத் திரும்பும் போதெல்லாம்
எனக்குள் எங்கோ அடிபட்டு விழும் இறக்கைகளின்
சடசடப்பே கேட்கிறது
உனக்கான அழைப்புகளில் தாமதிக்கும்
சில நொடிநேரம் கூட
என்நாடி நரம்புகள் தானாய் அறுந்து விழுகின்றன
நம் கனவுகள் சாகக் கிடப்பவனின்
பார்வையில் விரியும்மங்கிய காட்சிகளாய் துண்டுபடுகின்றன

இனி இந்த வனத்தில் நம் எந்தப் பொழுதும்
வசந்தமாகும் சாத்தியமில்லை வா நாம்
வியாழனுக்குள் குடிப்புகுவோம்
அங்கு ஏழெட்டு நிலவுகள் உண்டாம்
ஒன்றிலே பறந்து திரிவோம்
இன்னொன்றில் இனித்திருப்போம்...
மீதத்தைஇளைப்பாறலற்றுத்
தவித்தேகும் கவின்களுக்குப் பரிசளிப்போம்

என்ன பார்க்கிறாய் என் இன்பா
சுவாசத்தை நிறுத்தும் உபாயங்கள் இல்லா அந்நிலவுகளுக்குள்
நீ என்னையும் நான் உன்னையும்
சுவாசித்து வாழ்வோம் வா என்கிறேன்

- முனைவர் த.ஜான்சி பால்ராஜ்
திருநெல்வேலி

ஓசையற்ற ஒலி

வித்யா மனோகரீ

ஆசிரியர்: ம.வீ. கனிமொழி
வெளியீடு: ஒருதுளிக் கவிதை (புதுச்சேரி)

கவிஞர் கனிமொழியின் முதல் கவிதை அச்சுத் தொகுப்பாக வெளிவந்திருக்கும் இந்நூல் வல்லினச் சிறகுகள் சார்பாக நடத்தப்பட்ட அமரர் மருத்துவர் ஜெ. அம்பிகாதேவி நினைவுப் பரிசுப் போட்டியில் பரிசு பெற்ற நூலாகும். இத்தொகுப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட நல்முத்துகளாக 20 கவிதைகள் உள்ளன.

இயற்கை அழகில் மெய் மறந்து நிற்கும் கவிஞரின் உள்ளம், வேறொரு கவிதையில் தாது வருடத்தின் பஞ்சத்தைப் பேசுகிறது. ஈழ மாந்தர்களின் வலிகளைப் பேசும் கனிமொழியின் கவிதைகள் உள்ளத்தை உருக்குகின்றன. சில கவிதைகளில் பெண்ணெழுத்து மேலோங்கி நிற்பதையும் உணர முடிகிறது.

சில மாதங்களுக்கு முன்னால் கட்டுரை ஒன்று எழுதுவதற்காக மதுரை குஞ்சரத்தம்மாள் வரலாற்றை இணையத்தில் வாசித்தேன். தாசியான குஞ்சரத்தம்மாள் பேரழகி. வடக்கு ஆவணி மூல வீதியில் மிகப்பெரிய மாளிகையில் வாழ்ந்து வந்தவள். ஆனாலும் தாசி வாழ்க்கையில் பலருடைய ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளானவள். பலரும் அவளைப் பந்தாடிச் சீரழித்துச் சிதைத்தனர்.

அவ்வேளையில் தாது வருட பஞ்சம் தலைவிரித்தாடியது. பொதுமக்கள் உணவின்றித் தவித்தனர். அவளோடுக் கூடிக்களித்த மிராசுதார்களும் பஞ்ச காலத்தில் உதவுவதற்கு முன்வரவில்லை. அரசாங்கமும் கண்டுகொள்ளாத நிலையில் குஞ்சரத்தம்மாள் உள்ளத்திலிருந்த சேவை மனப்பான்மை தலைதூக்கியது. தன்னிடம் இருக்கும் செல்வத்தைப் பயன்படுத்தி முதலில் ஒரு பெரிய வட்டிலில் கஞ்சி காய்ச்சி ஊரார்க்கு ஊற்றினார். பின்னர் ஒரு வட்டில் மூன்று வட்டில்களானது. அவருடைய செல்வமும் கரைந்து கொண்டே வந்தது. தாது வருட பஞ்ச காலத்தில் பொது மக்களுக்கு குஞ்சரத்தம்மாள் செய்த உதவிகள் அனைத்தையும் படித்ததில் என் உள்ளம் உருகிற்று. அக்காலத்தில் பெண்கள் மேன்மையான வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் நம்மில் எத்தனை பேருக்கு குஞ்சரத்தம்மாளின் வாழ்க்கை வரலாறு தெரியும் எனும் கேள்வி என்னை வாட்டியது.என் கேள்விக்கு பதில் சொல்லும் விதமாக கனிமொழி மிக அற்புதமாக முதல் மூன்று கவிதைகளில் குஞ்சரத்தம்மாளின் சேவையைக் கவிதையாக்கி இருக்கிறார்.

"மதுரையின் மாசிலா தாசி பெண்ணவள்
மாண்பிலா குலமென்று ஊரார் ஏசினாலும்
மானத்தின் உறைவிடம் அவளின் நெஞ்சம்
பாசத்தின் பொங்கிடம் அவளின் எண்ணம்"

என்று தாது வருடப்பஞ்சத்தில் மதுரையின் மணிமேகலையாய் பசி போக்க வந்த குஞ்சரத்தம்மாளை நேர்த்தியாக அறிமுகம் செய்து வைக்கிறார் கவிஞர்.

"தொடர்ந்து எரிந்த அடுப்பு எரிந்தது
தொகையிலா செல்வத்தை; முற்றாய் அழிந்தும்
வீடுகள் விற்றும் மாரியாய் பொழிந்தாள்
கல் பதித்த ஆரங்கள் தோடுகள்
மின்னும் வெள்ளிப் பாத்திர பண்டங்கள்
நீண்ட நெடிய காசு மாலை
விரலின் நீங்கா அணி கணையாழி
மின்னலிடை கொடியாளை அலங்கரித்த
ஒட்டியாணம்
தேடி வந்தோர்க்கு நீர்க் கஞ்சியானது
பரிதவித்து வந்தோர்க்கு வாரி வழங்கியது".

என்று குஞ்சரத்தம்மாள் ஏழை எளிய மக்களின் பசிப்பிணி போக்கியதை கவிதையாக்கியுள்ளார் கனிமொழி. நாள்கள் நகர்ந்ததில் குஞ்சரத்தம்மாள் செல்வம் முழுவதும் கரைந்தது. ஓட்டு வீட்டினில் ஓய்வெடுக்க அவள் சாய்ந்தாள். அவள் மூச்சும் ஒருநாள் ஓய்ந்தது . குஞ்சரத்தம்மாளை இறுதியாக பார்ப்பதற்காக திரண்டு வந்த மக்கள் கூட்டம் ஒரு திருவிழா கூட்டத்தை விட அதிகமாக இருந்தது என்று ஆட்சியர் ஒருவர் குறிப்பு எழுதி வைத்திருந்தார் என்ற தகவல் நாம் அறிந்ததே.

குஞ்சரத்தம்மாளின் இறுதிப் பயணம் குறித்த கனிமொழியின் வரிகள் நெகிழச் செய்கின்றன. அவ்வேளையில் ஊர் மக்கள் மனநிலை எப்படி இருந்தது என்பதைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டும் கவிதை இதோ...

"ஓயாத அலையென அவள் முகம்
ஒருமுறை காண ஓடிவந்தார் ஊரார்
உடலை விற்கும் அற்ப பெண்ணென
உதாசீனம் செய்தோரின் உயிரை காத்திட்ட
உன்னத மணியாளை ஒரு நிமிடம்
உலுக்கி எழுப்ப கனத்தன மனங்கள்
தாசி வேசி சதுராட்டக் கூனியெனத்
தூற்றிய சொற் குவியல்கள் வரிசையாய்

குதித்தோடிப் புதைந்தன அவள் கல்லறையில்
வற்றா நதியானாள் பாயும் புனலானாள்
முற்றா மலரானாள் முளைக்கா பயிரானாள்
பொற்றாமரை குளத்தினில் மூழ்கும் மதியானாள்
கற்றாழை குளிரானாள் கன்னல் மொழியானாள்"

"நான் கிளியோபாட்ரா பேசுகிறேன்" என்ற கவிதையில்,

"மோசவலை
வீசிடும் மாயக்காரியென
தூரிகை வரைந்த
தினவெடுத்த ஓவியக் கரங்களே
உங்கள் ஓவியம் என் மேல்
தெளித்த நிறங்கள் தட்டி
காலத்தைத் தீட்டி
வரலாற்றில் உ றைய
வைத்தவள் நான்
கிளியோபாட்ரா!!"

என்று கிளியோபாட்ராவின் வாழ்க்கைப் பக்கங்களை கொஞ்சம் புரட்டுகிறார் கனிமொழி,

அடுத்து, ஈழப்போர் குறித்து எழுதுகையில்,

"சேவலின் கூக்குரலில் விடியாது பொழுது;
வானின் மேலிருந்து நூறு அணுகுண்டின் வெடிப்பில்
புலரும் ஒவ்வொரு வைகறையும்"

என்று போர்க்காலத்தை கண்முன்னே நிறுத்துகிறார். நம் நெஞ்சமோ பதறித் துடிக்கிறது.

"நெடிதாய் ஒரு நடை" என்ற கவிதையில்

"உள் வலியாய் வயிற்றின் அடிப்பகுதி
உள்ளிழுக்கும் மாதவிடாய் வலியைவிட,
மனத்தின் ஓரத்திலிருந்து எழும்
மெல்லிய அழுகுரல்
நடுநிசிப் பொழுதைக்
கிழித்தெறிந்து காற்றில் கரைகிறது"...

என்றும்,

"கொண்கன் வீசும் வலையில்
சிக்குண்ட மீனாய்"

என்ற வரியிலும் பெண் மொழியாக வெளிவந்துள்ள உணர்வுகள் கருத்திற்கொள்ளத் தக்கன.

வீட்டுக்குள் மக்களை முடக்கி, அச்சத்தில் யாவரையும் தவிக்க விட்டு பல உயிர்களைக் கொன்று வீழ்த்திய கொரானா என்னும் பெருந்தொற்று குறித்த ஒரு கவிதையில்,

"இலையொன்று உதிர்தல் கண்டு கண்ணீரும்
இறங்கி கன்னம் நனைக்கும்,வெலவெலக்கும்;
கொரானாவில் மண்மூடி கனவாய் கனப்பொழுதில்
உதிரும் உயிர்கள் நினைக்கையில் தளரும்,
உள்ளிழுக்கும் நெஞ்சம் துக்கத்தில் ஊளையிடும்
இளவேனில் இலைகள் மீண்டும் துளிர்க்கும்;
உதிர்ந்த உயிர்கள் துளிர்க்குமோ? உதிக்குமோ?"

என்று வினவுகிறார்.

கொரானா காலத்தில் சேவை புரிந்த செவிலியர்களை, "உயிர் அணையாது தேற்றும் செப்புச் சிமிழ்களே செவிலியர்களே வாழ்க நீவிர்"!! என்று வாழ்த்துகிறார்.

"உதிர்ந்து விட்ட பூவின் வாசம்" என்ற கவிதையில் மூளைப் படிமங்களில் பதிந்து கிடக்கும் நினைவுகளை மீட்டெடுக்கிறார் கவிஞர். மிதிவண்டி பற்றிய ஒரு கவிதையில்,

"அது
அம்மாவுக்குப்
பழைய மிதிவண்டி எனக்குத்
திரும்ப முடியா வாழ்க்கை;
இழந்துவிட்ட ஒரு நொடி;

உதிர்ந்து விட்ட பூவின் வாசம்" என்கிறார். நாம் இழந்துவிட்ட நொடிகளைத் திரும்பிப் பார்க்க வைக்கிறது இக்கவிதை.

"கரிக்கும்- கண்ணீர் துளிகள்!" என்ற தலைப்பில் அமைந்த கவிதையில்,

"காலத்தை பின்னோக்கி
ஓட்டும் கால இயந்திரம்
ஒளிப்படங்கள்"

என்று ஒளிப்படத்தின் அருமையைப் பேசுகிறார்.

"ஒளிப்படக் கருவியைக்
கடன் வாங்கியெடுத்த
படங்கள் யாவும்
கரைந்து போன இளவேனிற் காலங்களை
இளையராசாவின் இசையாகக்
கடனில் மீட்டெடுக்கும்"

என்ற வரிகள் நடுத்தரக் குடும்பச் சூழலைப் படம் பிடித்துக் காட்டுகிறன.

தமிழ்நாடு என்ற தலைப்பில் அமைந்த கவிதையில்,

"நெல்லின் மணியாய் கண்ணின் ஒளியாய்
பைந்தமிழ் மணக்க தணல் வெப்பத்தில்
தமிழ்நாடு எனும் பெயர் உதித்த நாள்
தரணியில் தமிழ் தழைத்த நாள்
தீராவிட முரசறைந்து கொண்டாட தமிழர்க்கு
தாயென தமிழ்நாடு பிறந்தநாள்!

என்று கொண்டாட்ட மனநிலையை மகிழ்வுடன் வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர்.

சாதியக் கொடுமைகளைத் தகர்த்தெறிய வேண்டும்; சாதிய அநீதியைக் களை எடுக்க வேண்டும் என்ற நோக்கில் "அம்ருதா" வுக்கு ஒரு கவிதையும் உள்ளது இத்தொகுப்பில். அதில் "கள்ளினும் கொடிய வெறியேற்றும் சாதி; காதலைப் பிரித்திடும் கொடுநஞ்சு சாதி" என்கிறார்.

அடுத்து

"நெய்தல் நிலச் சூழல்
இரங்கலும் இரங்கல் நிமித்தமும்
ஆயிரம் ஆண்டுகள் ஆன பின்னும்
மாறவில்லையே?!"

என்று மீனவர்கள் வாழ்வில் தீராத பல இன்னல்கள் மீதான தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர்.

கனிமொழியின் அழகியல் பேசும் கவிதைகள் யாவும் அற்புதமானவை.

மை நிறத்து குயிலினமும், பஞ்சொத்த முகிலினமும், பச்சை நிற கொஞ்சும் தத்தையும், தேனில் துள்ளி ஆடும் வண்டினமும், இனிதாய் பூத்திடும் காட்டு மல்லிகையின் மணமும் கனிமொழியின் கவிதைகளில் கலந்து அழகூட்டுகின்றன.

இப்படியாக, கவிஞர் கனிமொழியின் ஓசையற்ற ஒலியில், மிதமான மழையின் இனிய ஓசையும், ஒளிச் சிதறலின் ஏந்தலாய் ஓடிடும் தடையிலா நீரோடையின் மெல்லிய ஓசையும்,அநீதிக்கு எதிராகப் பறைகள் அதிரும் ஓசையும் கலந்திருப்பதை இத்தொகுப்பை வாசிப்போர் உணரக்கூடும்! நல்லதொரு தொகுப்பு. வாழ்த்துகள் கனிமொழி!

Janaki amma

Edavalath Kakkat Janaki Ammal (4 November 1897 – 7 February 1984) was an Indian botanist who worked on plant breeding, cytogenetics and phytogeography. Her most notable work involved studies on sugarcane and the eggplant (brinjal). She also worked on the cytogenetics of a range of plants and co-authored the Chromosome Atlas of Cultivated Plants (1945) with C.D. Darlington. She took an interest in ethnobotany and plants of medicinal and economic value from the rain forests of Kerala, India. She was awarded Padma Shri by the then prime minister is mentioned among Indian Americans of the Century in an India Currents magazine article published on 1 January 2000, by S.Gopikrishna & Vandana Kumar: "In an age when most women didn't make it past high school, would it be possible for an Indian woman to obtain a PhD at one of America's finest public universities and also make seminal contributions to her field?!" Kerala-born Janaki was arguably the first woman to obtain a PhD in botany in the U.S. (1931) and remains one of the few Asian women to be conferred a DSc (honoris causa) by her alma mater, the University of Michigan. During her time at Ann Arbor she lived in the Martha Cook Building, an all-female residence hall and worked with Harley Harris Bartlett, a professor at the Department of Botany.

She was elected Fellow of the Indian Academy of Sciences in 1935, and of the Indian National Science Academy in 1957. The University of Michigan conferred an honorary LL.D. on her in 1956 in recognition of her contributions to botany and cytogenetics said: "Blest with the ability to make painstaking and accurate observations, she and her patient endeavours stand as a model for serious and dedicated scientific workers." The Government of India conferred the Padma Shri on her in 1977.The Ministry of Environment and Forestry of the Government of India instituted the National Award of Taxonomy in her name in 2000.

She produced many hybrid brinjal varieties (the Indian name for eggplant).

Two awards were instituted in her name in 1999: EK Janaki Ammal National Award on Plant Taxonomy and EK Janaki Ammal National Award on Animal Taxonomy.A herbarium with over 25000 plant species in Jammutawi has been named after Janaki Ammal.[16] The John Innes Centre offers a scholarship to PhD students from developing countries in her name.

To honour her work in plant breeding, the Royal Horticultural Society, Wisley, U.K.named a variety of Magnolia she created as Magnolia Kobus 'Janaki Ammal'. In 2018, to celebrate her remarkable career and contribution to plant science, two rose breeders, Girija and Viru Viraraghavan bred a new rose variety which they named E.K. Janaki Ammal.

The name Janakia arayalpathra is also after her.

Sonerila janakiana, a species of plant in the family Melastomataceae, is named after her.

Dravidogecko janakiae, a species of geckos found in India is also named after

- Facebook Post

காதல் வன்முறை !

நானும் நீயும் ஒரு
சிறு அகலின் ஒளி
துணுக்குகள்
காற்றில் அலைவது
போல் காதலின்
உச்சத்தில்
அலைவுற்றோம்

உன் மகிழ்ச்சியின்
அதிர்வுகள்
இருண்மையின்
சுவாசம் போல அந்த
அறையை
நிறைத்ததை நான்
சுவாசித்தேன்
அங்கே வழியும்
மௌனத்தை நான்
பேசாத சொற்களின்
அடர்த்தி உடைத்து
விட மௌனம் பிறந்த
குழந்தையின்
இதயத் துடிப்பைப்
போல அதிர்ந்து
துடித்துக் கொண்டிருந்ததை

நீ கேட்டாய்
களிப்பும் தயக்கமும்
நளினமான
இசைவுடன் கூடிய
உடல் மொழி வழி நம்
இருவருக்குள்ளும்
கடத்தப்பட கலவியில்
முடிந்திருந்தது எதிர்
பாராத தருணத்தில்
நமக்குள்
நிகழ்த்தப்பட்ட காதல்
வன்முறை.

– கனியமுது அமுத மொழி

சக்தி பெண்ணிதழ்

என் கண்கள் பார்த்த முதல் உலகம் நீ....
என் கைகள் வருடிய முதல் ஓவியம் நீ....
என் உதடுகள் உச்சரித்த முதல் வார்த்தை நீ...

என் அறிவை விரிவாக்கிய முதல் புத்தகம் நீ ...
என் வெற்றியின் முதல் தேடல் நீ...
என் தோல்வியின் முதல் ஆறுதல் நீ ..
என் விருப்பமே உன் முதல் விருப்பம் நீ...
என் தேடலின் முதல் தேடல் நீ...
என் மூச்சு இருக்கும் வரை மட்டுமல்ல என் மூச்சை நீதான் அம்மா...

– S.சுஜாத்தா .B.com, சென்னை

தாலி குறித்த கல்வெட்டு....

மா. மாரிராஜன்
சோழர் வரலாறு ஆய்வு மையம், காரைக்கால்

தஞ்சை பெரிய கோயிலில் இருக்கும் இந்த கல்வெட்டு மிகவும் முக்கியமானதாகும்

காரணம் மூன்று முக்கிய செய்திகளை உள்ளடக்கியுள்ளது.ஒன்று இராசேந்திர சோழன் பெயர் வருகிறது இரண்டு அருள்மொழிதேவன் என்ற பெயர் வருகிறது.மூன்று "தாலி" என்ற வார்த்தை பதிவாயிருக்கிறது.

நம்முடைய தமிழ் சமூக அமைப்பில் எந்த நூற்றாண்டிலிருந்து பெண்கள் தாலி அணியும் பழக்கம் தொடங்கியது என்பது பெரிய விவாத பொருளாகும்.சங்க காலமான கி.மு.3 தொடங்கி கி.பி.3 வரையிலான 600 ஆண்டுகளைதான் சங்க காலமாக ஏற்கபட்டுள்ளது.

சங்க காலத்திற்கு முன்பு எழுதப்பெற்ற மகாபாரத இதிகாசத்திலும் தாலி என்ற வார்த்தையை பயன்படுத்தியதாக தெரியவில்லை. இராமாயணத்தில் ராமன் சீதைக்கு திருமணம் நடைப்பெற்றதாக கம்பரும் எழுதியுள்ளார்.ஆனால் எந்த இடத்திலும் தாலி என்ற வார்த்தையை பயன்படுத்தியாக தெரியவில்லை. சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோ அடிகளும் கோவலன் கண்ணகிக்குதிருமணம்நடப்பதைபதிவுசெய்திருக்கிறார். அவரும் கூட மங்கல அணி என்று வார்த்தையைதான் பயன்படுத்தியுள்ளார். ஆக சங்க காலம் வரை பெண்கள் தாலி அணியும் பழக்கம் இருந்ததற்கான வரலாற்று சான்று இல்லை.

அதன் பிறகு சங்கம் மறுவிய காலமாக கருதப்படும் கி.பி 6 ஆம் நூற்றாண்டிலிருந்தோ அல்லது அதற்கு

பின்வந்த காலத்திலிருந்தோ தான் தாலிகட்டிக்கொள்ளும் பழக்கம் நடைமுறையில் வந்திருக்க வாய்ப்பிருக்கிது.

"தாலி என்ற சொல் தாலிகம் என்ற சொல்லின் அடியாக பிறந்தது. தாலிகம் என்றால் பனைமரம் என பொருள்படும். அதாவது பனை ஓலையில் இன்னாருக்கும் இன்னாருக்கும் இந்த நாளில் அல்லது இன்று அல்லது இந்த காலத்தில் திருமணம் என எழுதி அவர்களின் கழுத்தில் மக்கள் மத்தியில் காட்டுவார்கள். தாலி பொருளாகுபெயராகத்தான் இங்கே பயன்படுத்தப்படுகிறது .சரி அதற்கும் இந்த கல்வெட்டுக்கும் என்ன தொடர்புஎன்ற கேள்வி வரும்.

"ஆலயத்தில் இருக்கும் உமா பரமேஸ்வரிக்கு சாத்தியருள
கொடுத்த தாலி ஒன்று "

என்று கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வேறு எந்த கோயில் கல்வெட்டிலாவாது இப்படி தாலி கொடுக்கப்பட்டதற்கான செய்தி உள்ளவா என தெரியவில்லை.

கல்வெட்டு செய்தி
"ஸ்வஸ்திஸ்ரீ.... ஸ்ரீ ராஜராஜஸ்வர உடையாருக்கு
சத்தானசம் செய்திட ஆர..வீ..லாலுடைய யான
..உடையார் கோயிலில் திருச்சுற்று மாளிடையில்
ஆலயத்து உமா பரமேஸ்வரியாருக்கு உடையார்..
ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு ஒரு
பத்தொன்பதாவது
வரை கொடுத்தன கல்லில் வெட்டியது ஆலயத்து
உமா பரமேஸ்வரியாருக்கு சாத்தியருள
கொடுத்த தாலி ஒன்று பொன் ஆடவல்லானால் ஒரு
கழஞ்சே இவர்க்கு ..பி..ராஜ ராஜ சோழ தேவர் சிவத்தலத்து.. இரட்டக்குளந்தாள் தெரிந்த.....சிவத்தில்
உடையார் கோயிலில் கல்லில் எழுத்து வெட்டிவித்தன
அருள்மொழிதேவ..வளநாட்டு வண்டாளை,,இல்..
வில்ல கூற்றத்து சாத்தான்குடி வெள்ளாள பாளுடையார்..ஸ்ரீராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு
மூன்றாவது வரை கொடுத்த பட்டத் தாரை ஒன்று
பொன் ஆடவல்லான் எழுத்து கல்லில் நிறை முக்காளே..
மூன்று மஞ்சானி.....

A dead rose in Tami (மரணித்த மலர்)

எலிசபெத் பேரட் பிரௌனிங்

ரோஜாவே
உனக்கு துணிவுடன் இப்பெயரைச் சூட்டியவர் யார்?
உன்னிடம்
மலர்ச்சியும் இல்லை மென்மையும் இல்லை இனிமையும் இல்லை
வெளிறிப் போய்க் கடினப்பட்டு
வறண்டு
வற்றல் கோதுமை போல் இருக்கிறாய்!
ஏழாண்டுகள் அடைக்கப்பட்டுக் கிடந்ததில்
உன் பெயர்கள் உன்னை வெட்கப்படுத்தின

உன் முட்களுக்கிடையே புகுந்து வந்த தென்றல்
உன் நறுமணத்தைச்
சந்து முழுக்க
நாள் முழுக்க
பரப்பி மகிழ்ந்தது.

இப்போது அந்தக் காற்று இங்கே வீசினால் இனிமையின்மையே முந்தும்.

உன் கவர்ச்சியான தாழியின் மேல் விழுந்து, தன் மகிமையைக் கலந்து, தன் கதிர்கள் மலரும் வரை,
மலர் கருகும் வரை
உன் மீது வெயில் அடித்தது

ஆனால்
இப்போது

உன் எந்த வண்ணமும் அதில் ஒளியேற்ற வில்லை

உன்னை ஈரம் ஆக்கிய பனித்துளி
முதலில் வெண்மையாகவும்
பின்பு இளம் சிவப்பாகவும் உன்னை மாற்றியது.

உன் சிவந்த இதழ் மீது
அது விழுந்து கிடந்தது!

இப்போது பனித்துளி விழுந்தால்
விழுந்த இடத்தில்
உன்னை கருஞ்சிவப்பாக்கி விடும்.

உன் இதழ்களின் தூய நுனியில் அமர்ந்து
தன் சிறிய கால்களில் இருந்து
உணர் நரம்புகளை நீட்டி உன்னை ஒளிர்வித்து
தன் அடையில் தேன் சேர்க்க
வாசனை அம்பர் கட்டியை உருவாக்க
உன்னை உறிஞ்சி எடுத்த தேனீ

இப்போது உன்னைக் கடந்தால்
பாரா முகமாய் பறந்து விடும்

ஜூலியா தன் நடனத்தின் போது
அணியும் புன்னகை பூக்கும்
ரோஜாக்களை விட பூத்திருக்கும் ரோஜாக்களை விட
செத்து நிற்கும் ரோஜாவான உனக்குத்தான்
என் இதயம் மிகவும் கடன் பட்டுள்ளது
என் இதயத்திலே தங்கிவிடு
அது உனக்காக உடைந்து நொறுங்கும் முன்பே.

மொ.பெ. முனைவர் செ. ராஜேஸ்வரி

விதை நெல்

முனைவர் வெ.மைதிலி
தமிழ்த்துறைத் தலைவர், *எஸ் எஸ் வி எம் கல்வி நிறுவங்கள்*

சோவை அவள் அபூர்வா. அவன் கண்ணன். பனந்தோப்பு நிறைந்த அந்தக் கிராமத்து வெயிலில், அவர்களின் காதல் களிமண் பொம்மையாக உருப்பெற்றது. பனை ஓலையின் வழி கசியும் நிழலில், அவர்களின் விரல்கள் கோர்த்து நடந்த ஒவ்வொரு நொடியும், வெறும் கால்கள் தரையைத் தொடுவதாக இல்லை. அவர்களின் எதிர்காலக் கனவுகள்தான் நிஜத்தில் மலர்ந்து கொண்டிருந்தன. ''என் வாழ்வில் நீ இருக்கும் வரை, இந்த உலகத்தின் துயரம் எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை,'' என்று அவன் சொல்லும்போது, அபூர்வா அவனது கைகளைப் பிடித்துக் கண்களாலேயே பதிலுரைப்பாள். ஆனால், சாதி என்னும் கொடிய அரக்கனின் கை, அந்த களிமண் பொம்மையை நொறுக்கி எறிந்தது. அவர்களின் கனவுகளும், எதிர்காலமும் ஒரே நொடியில் தவிடுபொடியாயின.

அபூர்வாவும் கண்ணனும் பிரிவதற்கு ஜாதி மட்டுமே தடையாக இருந்தது. ஆண் வாரிசு இல்லாத அபூர்வாவின் அப்பா தன்னுடைய ஜாதி வெறியின் உச்சத்தில் இருந்தார். இவர்களுடைய காதல் தெரிய வந்தவுடன் ஒரே நாள் இரவில் மொத்தமும் தலைகீழாக மாறியது அபூர்வாவை அப்பா அரிவாள் எடுத்துக்கொண்டு தன்னைத்தானே வெட்டிக் கொள்வேன் என மிரட்ட அபூர்வா பிரம்மித்து நின்றாள், எவ்வளவு தான் காதலன் மீது காதலும் அன்பும் இருந்தாலும் தன் தந்தையின்

சாவுக்கு தான் காரணம் ஆகிவிடக்கூடாது என்ற எண்ணத்தில் செய்வது அறியாது நின்றவளின் கைகளைப் பற்றிக்கொண்டு அம்மா அழுதாள். ''எந்த பெண்ணிற்கும் இந்த கொடுமை வரக்கூடாது தனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துத் தர வேண்டிய அம்மா தன் தாலிக்காக என்னிடம் கையேந்தி நிற்பது என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை'' என மனம் கலங்கி நின்றாள். மனதிற்குள் இருந்த கண்ணனை மனதின் ஆழத்தில் அழுத்தி விடமட்டுமே முடிந்தது அபூர்வாவுக்கு. அது உயிரோடு புதைப்பது போன்ற வலி.

அபூர்வாவின் திருமணம் அவளுடைய அத்தை மகனான ரவியுடன் நடந்தது. ரவி, பண்புள்ளவன்தான்,. ஆனால், அப்பாவை விட சாதி வெறி பிடித்தவன். அவள் மனதின் ஆழத்தில், அவனுக்கு ஒருபோதும் இடம்கிடைக்கவில்லை. ரவியின் அருகாமை அவளுக்குப் பாதுகாப்பு உணர்வைத் தரவேயில்லை அவனது கை சிறிதேனும் கார்த்திக்கின் கரம் தந்த நெருக்கத்தை அளிக்கவில்லை. உயிர் கலந்த அன்பையும் கொடுக்கவில்லை. அவளது உதடுகளில் அவ்வப்போது புன்னகை பூக்கும், ஆனால், அந்தப் புன்னகையில் கண்ணனுக்காக மட்டுமே மலர்ந்த ஆத்மார்த்தமான சிரிப்பின் ஒளி இருக்காது. அவளது கண்களில் ஒளி இருந்தது, ஆனால் உயிர் இல்லை. ஒவ்வொரு இரவும், ரவியின் கரங்களுக்குள் அவள் உறங்கும்போது, அவளது நினைவுகள் கண்ணனின் முகம், அவன் பேசிய கடைசி வார்த்தைகள், அவன் அவளைப் பார்த்த கடைசிப் பார்வை என அனைத்தும் அவளது இதயத்தை ஊசலாடச் செய்து, கண்ணீரில் நனைத்தது, ஆன்மாவை வருத்தின.

நான்கு வருடங்கள் கடந்திருந்தன. ஒரு கிராமத்துத் திருவிழாவின் கூட்டத்தில் அவள் கண்ணனைச்சந்தித்தாள். இருவரும் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொண்டனர், ஆனால், பேச வார்த்தைகள் இல்லை. அவனது தோள்களில் இருந்த வன்மை குறைந்து, வாழ்வில் இருந்த மகிழ்ச்சியின் சாயல் விலகியிருந்தது. அவனது பார்வையில், அவனது அன்பையும் ஏமாற்றத்தையும் ஒருசேரக் கண்டான். அவர்கள் இருவரும் சில நொடிகள் பார்த்துக் கொண்டனர். அந்தச் சந்திப்பில், பேசாத ஆயிரம் கதைகளும், புதைத்து வைக்கப்பட்ட ரகசியங்களும், தவிப்புகளும், வாழ்நாள் ஏக்கமும் கலந்திருந்தன. அவர்கள் கண்களின் வழியே, தங்கள் விதி வசத்தால் நொறுங்கிய வாழ்க்கையை ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

அன்று இரவு, மீண்டும் உறக்கம் இழந்தாள் அபூர்வா. கண்ணனின் கண்களில் கண்ட அந்த ஏக்கமும், காதலும் அவளை மீண்டும் உயிர்ப்பித்தது. தன் வாழ்வில் இழந்த காதலுக்கு ஒரு சாட்சி வேண்டும். தன் ஆன்மாவின் துணையுடன் அவள் வாழ்ந்திருக்க வேண்டிய வாழ்க்கையின் ஒரு சிறு துண்டாவது நிஜத்தில் இருக்க வேண்டும். ரவியின் வாரிசாக அல்ல, கண்ணனின் அன்பின் அடையாளமாக ஒரு உயிர் வேண்டும் என்று அவள் மனம் தீவிரமாய் ஏங்கியது.

மறுநாள் மாலை திருவிழாக் கூட்டத்தில் அவள் அவனைத் தேடினாள். அவன் ஒரு வளையல் கடையின் ஓரத்தில் நின்றிருந்தான். அவன் அருகில் சென்று, "உன்னுடன் பேச வேண்டும்," என்று மெல்லிய, தழுதழுத்த குரலில் சொன்னாள். அன்றிரவு, பனந்தோப்பின் இருட்டில், அவர்கள் மீண்டும் சந்தித்தனர். இந்த முறை, முந்தைய சந்திப்பைவிட இன்னும்

ஆழமான அமைதி நிலவியது. வார்த்தைகள் இல்லை. அவர்களின் கைகள்தான் பேசின. கண்ணனின் கரம் அபூர்வாவின் கையைத் தொட்டது. இருவருக்குள்ளும் ஒரு ஆத்மார்த்தமான புரிதல் உருவானது. அவர்கள் இருவரின் உடல்கள் மட்டுமே அல்ல, அவர்கள் ஆன்மாக்களும் இணைந்தன. அவர்களுடைய உயிரற்ற கனவுகளின் வாரிசாக ஒரு உயிர் இந்த உலகில் துளிர்விடட்டும் என்று இருவரும் பிரார்த்தனை செய்தனர். அந்தக் கணம், அவர்களுடைய பிரிவின் வலியை விட, தங்கள் காதலின் ஆழம் பெரிது என்பதை உணர்த்தியது. ஒரு மெல்லிய மழை அந்தப் பனந்தோப்பை நனைத்தது. அது அவர்களுடைய கண்களில் வழிந்த கண்ணீரா, அல்லது இயற்கையின் ஆசியா என்று அவர்களுக்குப் புரியவில்லை. அந்த மழை, அவர்களின் மறக்கப்பட்ட காதலின் அழுகையாக இருந்தது.

அதன்பிறகு அபூர்வா கண்ணனைச் சந்திக்கவே இல்லை. அவளது மனதை முழுமையாகக் கண்ணனின் நினைவுகளே ஆக்கிரமித்திருந்தன. காலங்கள் கடந்தன. அபூர்வா ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். ஐந்து ஆண்டுகள் காத்திருந்த அவளின் காதல், கண்ணகி என்ற பெயரில் பூத்தது. அவள் மகள் வளர்ந்தாள். கண்ணகியின் பிறப்பு, அபூர்வாவின் குடும்பத்தில் ஒரு புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சியது. அபூர்வாவின் அப்பா, "நம் குலக்கொடி! நமது ஜாதிக்குக் கிடைத்த வாரிசு!" என்று பெருமிதத்தால் உச்சிமுகர்ந்து கொண்டாடினார். ரவியும் அந்தக் குழந்தையின் அழகிலும், சுட்டித்தனத்திலும் மயங்கி, "நம் கண்ணகி!" என்று பூரித்துப்போனான். அவர்கள் தங்கள் ஜாதிக்குக் கிடைத்த வாரிசு என எண்ணி ஆனந்தக் கூத்தாட, அபூர்வா மட்டும் கண்ணகியின் கண்களைப் பார்த்தபோது, அது கண்ணனின் கண்களைப் போலவே அமைதியையும், ஆழமான அன்பையும் கொண்டிருந்ததை ஒவ்வொரு நாளும் உணர்ந்துகொண்டாள். அவளது மனதுக்குள் இருந்த ஆழமான காதல், அவள் காதலன் கண்ணனின் அன்புக்குச் சொந்தமானது என்பதை அபூர்வா ஒவ்வொரு நாளும் உணர்ந்துகொண்டாள். அந்தக் குழந்தை, காதலுக்குக் கிடைத்த பரிசு மட்டுமல்ல; சாதிவெறிக்கு அபூர்வா வைத்த ஒரு கண்ணுக்குத் தெரியாத சவுக்கடி! அது ஒரு விதைநெல், புதிய மாற்றத்திற்கான விதை. சாதியின் பெயரால் நிராகரிக்கப்பட்ட அன்பின் ஆத்மார்த்தமான சாட்சி அவள்.

ஒவ்வொரு முறையும் கண்ணகியை மார்போடு அணைக்கும்போது, அபூர்வாவுக்குள் ஒரு மெல்லிய வலி எழுந்தது. அது, கண்ணனை இழந்த வலி மட்டுமல்ல, தன் காதலின் அடையாளம் தன் குழந்தையாகத் தன்னுடன் இருப்பதன் மகிழ்ச்சியும்கூட. அவர்கள் இருவரும் சேர்ந்து வாழவில்லை. ஆனால், ஒரு குழந்தை, அவர்களுடைய பிரிக்க முடியாத பந்தத்தின் சாட்சியாகவே வளர்ந்தது. கண்ணகி அவளின் உலகமாய், கண்ணனின் மீதான அவளின் மறக்க முடியாத காதலின் உயிர்ப்பான நினைவூட்டலாய், ஒரு நிம்மதியான துணையாகவும், கனத்த இதயத்தின் வலியைத் தாங்கும் ஆதாரமாகவும் இருந்தாள். கண்ணகி, வெறுமனே ஒரு வாரிசல்ல; ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளம்பிய அன்பின் புரட்சி!

இப்போதெல்லாம் நண்பர்களுக்கும் சேர்த்தே காதலிக்கிறார்கள்

காதலின் உச்சத்தில்
கலவி கவிதையாகும் நேரம்
ஒளித்து வைக்கப்பட்ட கேமராக்கள்
விழித்துக் கொள்ளலாம்

பதிந்த கலவி கொண்டே
மீண்டும் மீண்டும் பதியப்படலாம்
அழைக்கும் நேரம் வரும்
நிர்பந்தங்கள் நிகழலாம்

கைபேசி காலத்தில்
காதல் அடிமைகள்
நிறையவே முளைத்து விட்டார்கள்

ஒற்றை உற்சாக பானமோ
குளிர்பானமோ கூட - உங்களைக்
குடித்து விடக்கூடும்

காதல் என்பது
அழகானவர்களுக்கு பெருந்தொல்லை
அஃதிலாருக்கு அதிலும் தொல்லை

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓசியில் கிடைத்தால்
ஏசி அறைக்குள் எல்லாம் தொலையும்

காதல் மாதமெனும் பெயரில்
கால்களுக்கு இடையே முளைத்த எதையோ
கவட்டைகளுக்குள் அண்டக் கொடுக்க
நாயாய் திரியும் எதற்கோ
இரையாகி விடாதீர்கள்

அப்புறம்
காதல் என்றெல்லாம் ஒன்றும் இல்லை
கவிஞனுக்கும் காட்சிப்படுத்துவோனுக்குமான
கிளுகிளு களங்கள் அவை

மரத்தை வைத்தவன்
தண்ணீர் ஊற்றுவான்
அதுவரை பொறுங்கள்
அழியாத காதல் கிடைக்கக்கூடும்

–விஜி



சந்திரோதயம் பதிப்பகம், மதுரை
நூல் விலைப்பட்டியல்

3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar, Madurai 625 018.
Mob: +91 7010997639

நூல்கள்		விலை
1.	திருவிளையாடல் புராணக்கதைகள் (எளிய உரைநடையில்)	200

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்

1.	உன்னோடு உரையாடுதல்	100
2.	காதல் மொழி	200
3.	பார்வையில் பூத்த நிலா	100
4.	தேனடையும் வரலாறு	100
5.	நுண்கலை மருத்துவன்	200
6.	தொடரும் புழுதிக்கால்கள்	100
7.	புரட்டாசி மூன்றாம் சனிக்கிழமை இரவு	200

முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்

1.	வெற்றித்திருமகள் எம்.ஜி.ஆர்.	200
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	200
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர் கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	200
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	200
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்	200
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	200
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	200
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	200
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் - I	200
10.	நீங்க நல்லா இருக்கணும் (எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - 1)	
11.	பாட்டுடைத் தலைவன். எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]	200
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்	200
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	200
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	200
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	200
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	200
17.	Unique Fandom of MGR	200
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	200
19.	எம்ஜி.ஆர். படத்தில் சண்டைக்காட்சிகளின் சுவாரஸ்யங்கள்-1	200
20.	எங்க வீட்டுப்பிள்ளை.	200
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	தலைமை பொறுப்பேற்கலாம்	200
2.	இணையத் தமிழ்	120
3.	ஊடகச் சட்டங்கள்	250
4.	ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்	200

5.	*கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)*	*200*
6.	*பாரதியார்*	*100*
7.	*நவீன மொழி பெயர்ப்பு உத்திகள்*	*200*
8.	*மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)*	
9.	*மாயோன் வீட்டு யானை (சிறுவர் நூல்)*	

பிற ஆசிரியர்களின் நூல்கள்

1.	*பன்முகப் பண்பாட்டு உரையாடல் - முனைவர் ஆனந்த அமலதாஸ்*	*200*
2.	*மொழிபெயர்ப்புத் திறன் - பேரா. முனைவர் மு. முத்துவேலு*	*150*
3.	*சிறுநல் வாழ்க்கை - முனைவர் ஜோதி எஸ். தேமொழி*	*200*
4.	*ஏன்? எதற்கு? எப்படி? - முனைவர் ஜோதி எஸ். தேமொழி*	*150*
5.	*உடல் நலமும் புதிய சிகிச்சை முறைகளும் - முனைவர் ஜோதி எஸ். தேமொழி*	*150*
6.	*தமிழ் இறைவனார் யார் - பேரா. முனைவர் மு. முத்துவேலு200*	
7.	*கவிஞர்களும் எழுத்தாணிய - மேனகா நரேஷ் (NJ)*	*300*
8.	*இலக்கிய நயங்களும் நுட்பங்களும் – மு. பழநிச்சாமி*	*300*

Other Books

1.	Concepts of Constitution - Dr. S. Kalai Arasu	300
2.	Aranyani By Vijeni (English Novel Part I & Part II)	200
3.	Translating Tamil Poetry - Dr. C. Rajeswari	200
4.	Tie Your Hears with Words - Afrah Fathin F.N.	215

முனைவர் செ. இராஜேஸ்வரியின் சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1.	*பண்பாட்டு நகர்வுகள் - தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு*	*200*
2.	*பெண் தெய்வ வழிபாடு*	*200*
3.	*தேவேந்திரன்*	*200*
4.	*மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)*	*200*
5.	*இரு நிலத்தில் திருமுருகன்*	*200*
6.	*முன்னோர் வழிபாடு (கதிரவன். காலதேவன், நாகர் வழிபாடும்)*	*200*
7.	*வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்*	*200*
8.	*யானைக்கடவுள்*	*200*
9.	*பெண் பூப்பின் புனித வழிபாடு*	*200*
10.	*வழிபாட்டின் வேர்களைத் தேடி*	*250*
11.	*பெண் தெய்வம் (தோற்றமும் வரலாறும்)**	*300*
12.	*உலகத்தமிழரின் ஒரே நூல் திருக்குறள்*	*200*

சமய வழிகாட்டி நூல்கள் (7)

சாமிகளின் சரித்திரம் (வரலாறும் வழிபாடும்)	*300*
விரதங்களின் விளக்கம்	*200*
சாமிகளின் துதிகள் (27, 54, 108 போற்றி)	*200*
மலைக்கோயில்கள் - முருகன் (வரலாறும் வழிபாடும்)	*200*
மலைக்கோவில்கள் - சிவன், விஷ்ணு	*250*
அம்மன் கோயில்கள் (வழிபாடும் வரலாறும்)	*250*
திருமணத் திருத்தலங்கள் (வழிபாடும் வரலாறும்)	*250*
பிள்ளை வரம் அருளும் கோயில்கள் (வழிபாடும் வரலாறும்)	*250*

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	*பாடுபொருளும் பாசப்பொருளும்*	*250*
2.	*"பூ மர நிழலி"ன் களமும் காலமும்*	*200*
3.	*"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு*	*100*
4.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்*	*100*
5.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் பயணக் கவிதைகள்*	*200*

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*எட்டுத்திக்கும் செல்வீர்*	*200*
2.	*அவன் கடவுளுக்கு நிகரானவன்*	*200*
3.	*செக்கச் சிவந்த ரோஜா*	*200*
4.	*கலீல் ஜிப்ரானின் "மணலும் நுரையும்"*	*200*
5.	*கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"*	*200*
6.	*ஆங்கிலத் தேன் கவிதைகள்*	*400*

Tamil Classics in English - (Dr. C. Rajeswari)

1.	Kurunthokai	200
2.	Purananooru	200
3.	Naaladiyaar	200
4.	Aasaarakkovai	200
5.	A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanchi)	200
6.	A Peasant with two Wives (Mukkudal pallu)	200
7.	Classic Tamil Poems of Poetess Avvai.	300
8.	Classic Poems of Love and Life	400
9.	Ainkurunuuru	200
10.	Pastoral Literature of Classic Tamil	300
11.	A Classic Portrait of Ancient Madurai	300
12.	The Winter's Tale in Classic Tamil (Nedu nal vaadai)	

Socio Cultural Study Series

1.	Lord Indra -The Forgonen Diet	300
2.	Serpent - The Primordial God	300

தற்காலத் தமிழில் சங்க இலக்கிய நூல் வரிசை

1.	*குறுந்தொகைக் கவிதைகள்*	*200*

மொழிபெயர்ப்பு ஆய்வு நூல்கள் - முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)*	*200*
2.	*கவிதை மொழிபெயர்ப்பு*	*200*
3.	*நவீன மொழிபெயர்ப்பு உத்திகள்* (Co-author)	*200*
4.	*மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்*	*200*
5.	*மொழிபெயர்ப்பு நுண்ணாய்வு*	*400*

தமிழ் இலக்கண நூல்

1.	*தமிழில் வேற்றுமை உருபுகள்*	*200*

சிறுகதை, கவிதை

1.	*அமராவதியின் காதல் - சத்யப்பிரபா*	*200*
2.	*ரோஜா மொட்டு (சித்திரக்கவிதைகள்) - சத்யப்பிரபா*	*200*
3.	*மகிழ் பேரின்பம்*	*200*

ஜோதிட நூல்கள்

மேஷ ராசியின் சூட்சும ரகசியம்	*200*
ரிஷப ராசியின் சூட்சும ரகசியம்	*200*
நவரத்தினமும் உபரத்தினமும்	*200*
மிதுன ராசி சூட்சும ரகசியங்கள்	*200*
கடக ராசியின் சூட்சும ரகசியம்	*200*

மாத இதழ்கள்

1.	*தமிழணங்கு மாத இதழ்*	*200*
2.	Love Thamizh	*500*
3.	*சக்தி (பெண்ணிதழ்*	

பேராசிரியர் முனைவர் தே. ஞானசேகரனின் நூல்கள்
ஆங்கிலத்தில் - முனைவர் செ. இராஜேஸ்வரி
Moonstone Publication, Madurai

1.	Emerging Mallarism	200
2.	Festival of lord Indra	200
3.	Role of Devendirar's in Indian war of Independence	200
	(Sundaralingam Kudumbanar)	200
4.	Re reading of Pallu literature	200
5.	Mallariyan Literature	200
6.	Frontyard without My Dad (Poem)	200

Poems of Er. Poet Muththamizh Virumbi - In English Dr. C. Rajeswari
[Moonstone Publication]

1.	Therapist of the Finest Art	200
2.	Following Dusty Feet	200

ஆதிசக்தி வரலாறும் வழிபாடும்

முனைவர் செ. ராஜேஸ்வரி

உலகின் படைப்பு பற்றி ஆதிமனிதன் சிந்தித்தபோது படைப்பாற்றல் என்பது பெண்ணுக்கு உரியது என்ற அறிவியல் உண்மை தெளிவாகியது. ஆக, இந்த உலகத்தையும் (ஆதி சக்தி) ஒரு பெண் தான் படைத்திருக்க வேண்டும் என்ற யூகத்தில் ஆதி மனிதன் உலகைப் படைத்தவள் பெண் என்ற நம்பினான். பின்பு மெல்ல மெல்ல குழந்தைப் பேறுக்கு ஆணின் பங்கும் அவசியம் என்ற இரண்டாவது அறிவியல் உண்மை தெரிந்ததும் பெண் தெய்வத்துடன் ஆணையும் சேர்த்து (ஆதி சிவன்) தெய்வமாக்கி வணங்கினான்.

முப்பெருந்தேவியர்

இந்தியாவில் புராணங்களின் படி அண்ட சராசரங்களையும் படைத்தவள் ஆதிபராசக்தி என்ற பெண் தெய்வம் ஆவார். இவள் ஞானசக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி என்று மூன்றாக பிரிந்து இவ்வுலகை காத்து வருகின்றாள். இவளை மகா மாயா என்றும் புராணங்கள்

அழைக்கின்றன. ஆதிபராசக்தியிடம் இருந்து சரஸ்வதி, லட்சுமி, பார்வதி என்ற மூன்று சக்திகள் தோன்றின. இவ்வுலகின் படைத்தல் காத்தல் அழித்தல் செய்யவும் இவர்களுக்குக் கணவர்களாக விளங்கவும் மூன்று ஆண் தெய்வங்களான பிரம்மன், விஷ்ணு சிவன் ஆகியோரை ஆதி சக்தி படைத்தாள்.

சக்தி சம்பிரதாயம்

முழுக்க முழுக்க ஆதி சக்தியை மட்டுமே வழிபடும் சக்தி வழிபாடு என்பது சக்தி சம்பிரதாயம் எனப்படும். இவர்கள் வேறு எந்த தெய்வத்தையையும் குறிப்பாக ஆண் தெய்வங்களை வணங்குவதில்லை. சக்தி சம்பிரதாயத்தில் சக்தி சாத்வீக, ராஜச, தாமஸ குணங்கள் உடையவளாக விளங்குகிறாள். அவற்றை காதி சம்பிரதாயம், ஹாதி சம்பிரதாயம், சாதி சம்பிரதாயம் என்பர். இவற்றில் காதி என்பவள் அமைதியே (சாத்வீகம்) உருவானவள். ஹாதி எனும் என்பவள் ராஜச குணம் உடையவள் கோப ரூபினி. இவள் தீயவர்களை ஹதம் (வதம்) செய்வாள். சாதி சம்பிரதாயத்தில் அவள் தாமச குணம் உடையவள் வேகம் குறைந்தவள்.

சக்தியின் ஏழு வடிவங்கள்

ஆதிசக்தி அல்லது ஆதி பராசக்திக்கு கணவர் கிடையாது. அவள் மகா கன்னிகையாக விளங்குகிறாள். மகா கன்னிகையான சக்தி ஏழு கன்னிகைகளாக வடநாட்டிலும் தென்னாட்டிலும் வழிபடப்படுகிறாள். வடநாட்டில் அஷ்ட மாத்ரிகா என்று எண்ணிக்கையை எட்டு ஆக்குவர். ஆதி சக்தி பிராமி, வைஷ்ணவி, மகேஸ்வரி, இந்திராணி, கவுமாரி, வராகி, சாமுண்டி என்று 7 கன்னிகளாக வணங்கப்படுகிறாள்

ஏழு கன்னிமாரின் கணவர்கள்

பிற்காலத்தில் ஒரு ஒரு பெண் தனித்து வாழ முடியாது என்ற சூழ்நிலையில் தெய்வம் மட்டும் எவ்வாறு தனித்து செயல்பட முடியும் என்ற கருத்தில் ஒவ்வொரு பெண் தெய்வத்திற்கும் ஒரு ஆண் தெய்வத்தை இணை சேர்த்தனர்.

பிரம்மன் (பிராமி), விஷ்ணு (வைஷ்ணவி), மகேஸ்வரன் (மகேஸ்வரி) இந்திரன் (இந்திராணி), குமரன் (கௌமாரி) ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

வராகிக்கும் சாமுண்டிக்கும் பொருத்தமான ஆன் கடவுளர் அமையவில்லை. வராகிக்கு வராக மூர்த்தியையும் சாமுண்டிக்கு சாமுண்டன் என்று மீண்டும் ஈஸ்வரனையும் குறித்தனர். வராக மூர்த்தி எனப்படும் விஷ்ணுவின் வராக அவதாரம் பூமாதேவியுடன் தொடர்புடையது. தவிர ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் பாராட்டுகின்ற தேவியின் தளபதியாக விளங்குகின்ற வராஹியோடு எவ்விதத்திலும் தொடர்புடையது கிடையாது. பெயர் ஒற்றுமை காரணமாக வராக மூர்த்தியை குறிப்பிட்டனர் என்று கருதத் தோன்றுகிறது.

மகா வித்யாவின் பத்து அவதாரம்

ஆதி சக்தி வழிபாடு மகாவித்யா என்ற பெயரில் வளர்ச்சி பெற்றது. மஹாவித்யா உபாசகர்கள் அவளை. காளி, தாரா, திரிபுரசுந்தரி, புவனேஸ்வரி, பைரவி, சின்ன மஸ்தா, தூமாவதி, பகாளமுகி, மாதங்கி, கமலா என்ற பத்து அவதாரங்களாக வணங்குகின்றனர். இவர்களில் தாரா, தூமாவதி, மாதங்கி போன்றோர் நீண்ட வரலாறு உடையவர்கள். திரிபுர சுந்தரி திரிபுரம் எரித்த சிவனின் கதையோடும் தொடர்பு படுத்தப் படுகிறாள். சிறுமியாகவும் வணங்கப்படுகிறாள்

அறுவகைச் சமயம்

ஆதிசங்கரர் தன் காலத்தில் நாடெங்கும் பரவிக் கிடந்த வழிபாட்டு முறைகளை ஆறாக வகைப்படுத்தினார். அவை சௌமரம், (சூரியன்), சாக்தம் (சக்தி) கௌமாரம் (குமரன்), சைவம் (சிவன்) வைணவம் (விஷ்ணு) காணாபத்தியம் (கணபதி) ஆகும். வைதீக சமயங்களின் வளர்ச்சிக்குப் பிறகு பிறகு சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், சவுரம் போன்றவை செல்வாக்கிழந்து விட்டன. வெகு சிலரே ஆதி சக்தி சக்தி உபாசனையில் இன்னும் ஈடுபட்டுள்ளனர். சைவ சமயம் பேரெழுச்சி பெற்ற பின்பு கௌமாரமும் காணாபத்தியமும் சாக்தமும் சைவத்திற்குள் இணைந்தன..

சிவனுக்கு மனைவியாக சக்தியும் சிவனின் மகனாக குமரனும் சக்தியின் மகனாக கணபதியும் சைவத்துக்குள் ஈர்க்கப்பட்டனர். வைணவம் மட்டும் தனித்து நின்றது.

ஸ்ரீ குலம், காளி குலம்

சக்தி வழிபாட்டினர் ஸ்ரீ குலம் என்றும் காளி குலம் என்றும் இரு வகைப்படுவர். ஆதி சக்தி கருணையும் கடுமையும் வடிவானவள். அவளே ஆக்கும் சக்தியும் அழிக்கும் சக்தியும் ஆவாள். ஆனால் புராணங்கள் அவளை சக்தி (பார்வதி) - கருணையின் வடிவான அன்னை

என்றும் காளி கொடுமையை தண்டிக்கும் கொலைத் தெய்வம் என்றும் பிரித்தன. அடக்கம் நிறைந்தவள் (ஸ்ரீ குலம்) , அடங்கா பிடாரி (காளி குலம்) என்று பிரிக்கப்பட்டாள். சக்தி வழிபாடு பல வடிவங்களில் உலகெங்கும் வளர்ந்து வந்த போதும் காளி வழிபாடு அதன் நிழலாக இருள் வடிவாக கருப்புத் தெய்வமாக கொலைத் தெய்வமாக பலித் தெய்வமாக எல்லா நாடுகளிலும் இன்னும் இருக்கின்றது.

காளி குலம்

இந்தியாவின் வடமேற்கு மாநிலங்களான மேற்குவங்கம், பீகார், அஸ்ஸாம், ஒரிசா, நேபாளம் மற்றும் தென்கோடியில் உள்ள கேரளம் ஆகிய மாநிலங்களில் காளி குலத்தார் இருக்கின்றனர். அன்னைக்கு கருணையும் உண்டு கடுமையும் உண்டு என்பதைக் குறிக்கும் வகையில் பௌத்த சமயம் தான் பரவிய இடங்களில் எல்லாம் பெண் தெய்வ வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்ததால் அச்சமயம் பரவி இருந்த அந்த மாநிலங்களில் இன்றும் காளி குலத்தார் துடியான பெண் தெய்வங்களை வணங்குகின்றனர்.

சக்திக்கு உரியவை

சிவனுக்கு வில்வமும் திருமாலுக்கு துளசியும் இருப்பது போல சக்திக்கு வேம்பு திகழ்கின்றது. சிவனுக்கு நமச்சிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரமும் விஷ்ணுவுக்கு ஓம் நமோ நாராயணாய என்ற எட்டெழுத்து மந்திரமும் முருகனுக்கு சரவணபவ என்ற ஆறு எழுத்து மந்திரமும் இருப்பது போல சக்திக்கு ஐயும் கிலியும் சௌவம் என்ற மூன்றெழுத்து மந்திரம் உள்ளது. காளிக்கு ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் கிலீம் என்ற மூன்றெழுத்து மந்திரமும் சக்தி உபாசகர்களின் ஜபதபங்களின் போது பயன்படுத்தப்படுகின்றது. இவர்கள் எந்த மந்திரத்தை சொல்வதாக இருந்தாலும் அவற்றை இந்த மூன்றெழுத்து மூல மந்திரத்தோடு சேர்த்துத் தான் சொல்வார்கள் எடுத்துக்காட்டாக கண் நலம் காக்கும் சூரியனுக்குரிய மந்திரம் ஓம் ஸ்ரீம் ஸஹ்ரீம் க்லீம் கமலா தரணி ஆதித்த வர்ணாயை நமஹ

நிலையம்

தேவியை குண்டலினி யோகத்தில் சுருண்டு கிடக்கும் பாம்பாக மூலாதாரத்தில் அசையா நிலையில்வைத்துப் காண்கின்றனர். இதனால் இவள் நிலையம் எனப்படுகிறாள். இங்கிருந்து இவளைத் தட்டி எழுப்பி ஆதிவெளி எனும் பரவெளிக்குக் கொண்டு சேர்க்க

வேண்டும். மூலாதாரச் சக்கரமாக இருக்கும் இவளை மெல்ல மெல்ல மேலே ஏற்றி ஆயிரம் இதழ்கள் கொண்ட உச்சிக்கமலத்தில் ஆண்டவனோடு சேர்த்தால் அங்கு இருவரின் கூடல் நடக்கும். இதனை ஆனந்த தாண்டவம் என்பர். இது ஒரு யோக சாதனை ஆகும். உடம்பை யோக சாதனமாகக் கொண்டு செய்யப்படும் யோகப் பயிற்சி. இதனை விளக்க வேறு வழி தெரியாமல் சக்தி சிவன் ஐக்கியமாக எடுத்துக்காட்டி விளக்கினர். யோக சித்தி ஏற்பட்டால் அப்போது அமுத உணர்வு பொங்கி உடலெங்கும் பிரவாகமாய்ப் பரவும். நாடி நரம்புகளில் புத்துணர்ச்சி தோன்றும் . தன்னைச் சுற்றிலும் அபிராமப் பட்டர் உணர்ந்ததைப் போல் போல் ஒளி வெள்ளம் பெருகுவதை உணர்வர்.

பூப்பு வழிபாடு

தேவிக்குரிய சின்னம் கீழ்நோக்கிய முக்கோணம் ஆகும். அவளின் ஆயுதம் சூலாயுதம். வாகனம் புலி. ஆதி சக்தி படைப்பு தேவதை என்று வணங்கிய காரணத்தினால் அவளுடைய யோனி (ஆவுடை) வழிபடு பொருளாக உள்ளது. அவளுடைய பூப்புக் குருதி

தெய்வ சக்தி உள்ளதாக நம்பப்படுகிறது. அசாமில் காமாக்கியா என்ற திருத்தலத்திலும் கேரளாவில் செங்கனூர் என்ற திருத்தலத்தில் இன்னும் சில ஊர்களிலும் தேவியின் பூப்பு வழிபடப்படுகிறது. செங்கன்னூர் பகவதியின் ஆடையில் மாதம் ஒரு முறை பூப்புக் குருதி படிந்திருக்கும். காமாக்யாவில் தேவி ஆண்டுக்கு ஒருமுறை பூப்படைகிறாள். அப்போது அக்கோயிலைத் தழுவி ஓடுகின்ற பிரம்மபுத்திரா நதி நிறம் மாறி (சிவப்பாகத்) தோன்றும்

கேரளாவிலும் வங்காளத்திலும் குருதி வழிபாடு இன்றைக்கும் வெவ்வேறு வகையில் நடைபெறுகின்றது. முன்பு பூப்புத் தடம் உள்ள ஆடையுடன் பால், மஞ்சள் நீர் சேர்த்து பிழிந்து பிரசாதமாகவும் வழங்கப்பட்டது.

ஷீலா நா கீட்ஸ்

அன்னையாக பெண்ணை வழிபடத் தொடங்கிய காலத்தில் பெண்ணை கர்ப்பவதி உருவத்தில் பெரிய வயிறும் தளர்ந்த மார்பகங்களும் கொண்ட வடிவில் ஆதி மக்கள் வழிபட்டனர். இத்தகைய சிற்பங்கள் சிந்து சமவெளி எங்கும் கிடைத்துள்ளன. மனிதர் வாழ்ந்த அனைத்துப் பகுதிகளிலும் மேலை நாடுகள் உட்பட முதலில் இத்தகைய உருவங்கள் தாம் வழிபடப்பட்டன. ஷீலா நா கிட்ஸ் *(Sheela na gitz)* என்பது இங்கிலாந்தில் இவ்வுருவத்தின் பெயர் ஆகும். மேரி மாதாவின் கோயில் வாசலில் உள்ள மலைக் குகை போன்ற கட்டுமானம் தாய்மையைக் குறிப்பதாகும்.

சக்தியின் தோல்வி

சிவசக்தி ஐக்கியத்தைக் குறிக்கும் அறுகோணசக்கரம் / நட்சத்திர வடிவத்தில் இருக்கும். இதில் மேல் நோக்கி இருக்கும் முக்கோணம் சிவபெருமானை குறிக்கின்றது. கீழ் நோக்கிய முக்கோணம் சக்தியை குறிக்கும். பெண்களை அடிமைப்படுத்திய ஆணாதிக்க சமுதாயம் பெண் தெய்வங்களையும் ஆண்களுக்கு அடிமைப் பட்டவர்களாக காட்டும் வகையில் புதிய கதைகளைப் புனைந்தன

தாட்சாயினி கதை

தாட்சாயினி கதையில் சிவன் பெரியவனா சக்தி பெரியவளா என்ற வினா எழுப்பப்பட்டு சக்தியை சிவன் தலைக்கு மேல் தூக்கிக் கோபமாகச் சுற்றியதில் அவள் 108 துண்டங்களாக பல்வேறு இடங்களில் போய் விழுந்தாள். அவை இன்று சக்திக்குரிய 108 திருத்தலங்களாக விளங்குகின்றன என்பது கதையின் சாராம்சம். இந்த கதை சிவன் சக்தியைச் சிதறடித்தார் என்பதை உணர்த்துகின்ற கதையாகும்.



சக்திக்குப் பிள்ளை இல்லை ஏன்?

.சிவபெருமான் தியானத்தில் இருந்த போது அவருடைய தியானத்தைக் கலைக்க வேண்டும் என்று உலக நன்மைக்காக காமதேவன் அவர் மீது மலர் அம்பு தொடுத்தான். சிவபெருமான் கோபத்தோடு விழித்து காமனை எரித்துச் சாம்பலாக்கி விட்டார். இதனால் அவனுடைய மனைவி ரதிதேவி இனி 'உங்களுக்கு குழந்தையே பிறக்காது நீங்கள் கூடி மகிழ இயலாது' என்று சிவனுக்கும் பார்வதிக்கும் ஒரு சாபம் கொடுத்து விட்டாள். இதனால் சிவனின் சக்திக்குக் குழந்தை இல்லை. சிவபாலன் எனப்படும் குமரன் அக்நிபுத்திரன் ஆவான். அவனுக்கும் பார்வதி/ உமா/ தேவி/ சக்திக்கும் தொடர்பில்லை. விநாயகர் உமாவின் அழுக்கு உருண்டையில் இருந்து தோன்றியவர். அவருக்கும் சிவனுக்கும் தொடர்பில்லை.

லஜ்ஜா கௌரி

சிவனின் இரண்டு மனைவியருள் ஒருத்தி கௌரி. இவள் மிகவும் அமைதியானவள். சிவனின் தலையில் அவருடைய சடாமுடியில் ஒளித்து வைத்திருக்கும் கங்கை எனப்படுபவள் வாய் துடுக்கானவள். கங்கையின் வேகத்தைக் குறைக்க அவர் தன்

சடாமுடியில் தாங்கினார் என்ற காரணங்கள் சொல்லப்பட்டாலும் கூட அவளை அவர் தன் துணைவியாக ஏற்றுக் கொண்டார் என்பதும் கதை கூறும் தகவல் தான். இந்த கௌரியை லஜ்ஜா கௌரி என்று அழைக்கும் ஒரு கதையும் வழக்கில் உள்ளது. சிவன் ஒருநாள் பார்வதியிடம் தனக்கு பிரியமான போர்வை ஒன்றைம் கொடுத்து இதைப் பத்திரமாக வைத்துக் கொள் என்று சொல்லிச் சென்றார். எலி கடித்து விட்டதே , இனி கணவரின் கோபத்திற்கு ஆளாகி விடுவோமே என்று அஞ்சிய பார்வதி தையல்காரர் அழைத்து வந்து அந்த போர்வையைத் தைத்துத் தரும்படி வேண்டினாள். தையல்காரர் அவளிடம் 'நீ என்னுடன் ஒரு முறை இன்பம் துய்க்க சம்மதித்தால் இதைத் தைத்து தருகிறேன்' என்றார் அவளும் வேறு வழி இல்லாமல் தையல்காரருக்கு சம்மதித்து கால்களை விரித்துப் படுத்த நிலையில் தன் முன்னால் நின்ற தையல்காரர் சிவபெருமானாக மாறி இருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றாள். வெட்கத்தில் தலை தொங்கி கீழே விழுந்து விட்டது. இப்போது தலையற்ற முண்டமாக கால்களை விரித்த நிலையில் இருந்தாள். இப்படியே இரு இதுதான் உனக்குத் தண்டனை என்று சிவபெருமான் அவளுக்கு சாபம் கொடுத்து விட்டார். எலியாக வந்ததும் தையல்காரராக வந்ததும் சிவபெருமான் தான் என்பதை பார்வதி அறியவில்லை. இந்த பெண் உருவத்திற்கு பெயர் லஜ்ஜா கௌரி. இந்த பெண்ணின் உறுப்பிற்கு பதில் ஒரு தாமரையை வரைந்து வைத்து அல்லது சிலையில் தாமரையை செதுக்கி வைத்து இந்தியா முழுக்க பல மாநிலங்களிலும் லஜ்ஜா கௌரியை வழிபடுகின்றனர். காரணம் இந்தப் பெண் உருவம் தாய்த் தெய்வ வழிபாட்டின் ஆதி காலத்து உருவம் ஆகும்.

நிறைவு

இவ்வாறு ஆதி சக்தியை அன்னையாக வழிபடத் தொடங்கி பின்பு அவளிடம் இருந்து மூன்று தேவியர் உருவாகி இவ்வுலகின் படைக்கும் காக்கும் அழிக்கும் தொழில்களைச் செய்யும் கணவன்மார்களுடன் இணைந்து இவ்வுலகை இரட்சித்து காப்பாற்றி வருகின்றனர். காலப்போக்கில் பெண் தெய்வங்களுடைய இன்றியமையாமை குறைக்கப்பட்டு ஆண் தெய்வங்களின் அதிகாரம் அதிகமாக்கப் பட்டது. சமுதாயம் எப்படியோ சமயமும் அப்படித்தான் இருக்கும். இதனை,

எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே என்றார் அவ்வையார். சமயம் சட்டம் சம்பிரதாயங்கள் அனைத்தும் அதிகாரத்தில் இருப்பவர் விருப்பப்படியே அமைவது உலகத்து இயற்கை.

பெண்களின் புறம்பான பாடு!.

ஒளிரும் புன்னகையில் மறைந்திருக்கும் துன்பங்கள்,
ஒவ்வொரு நாளும் வாழ்வுக்குத் தரும் சவால்கள்!
வீட்டில் தாய், வெளியில் தொழிலாளி,
மூச்சு விட நேரமில்லா பணி நித்தியமாய்!

நடையைப் பார்த்து நிந்தை செய்யும் கண்கள்,
வழியெங்கும் விடாத பாதுகாப்பு சங்கடங்கள்!
குரல் கொடுத்தால் "அவள் ஆண்களைப் போல நடந்தாளாம்,
மௌனம் வைக்க "பழமையான" பாவம்!

வேலைவாய்ப்பில் கூட சமம் எங்கே?,
ஊதியத்திலும் ஓர் இடைவேளை!
விருப்பத்தைக் கேட்காமல் திருமண தீர்ப்பு,
கனவுகள் விலைக்கேடாய் முடிவுக்கு வரும்!

ஆனால் தவிக்க மாட்டாள், தாங்கி நின்று,
தன்னம்பிக்கையோடு துளிர்க்கும் பெண்மையே வென்று!
நாளையோர் காலம் வரும் நிச்சயம்,
சமத்துவம் கொண்டிடும் புதிய நெறி!

- ம.ஆச்சின்

A poem by Avvai

A spear in his hand,
Victorious anklet in his legs
Sweat in his body
Fresh wound in his throat
Worn a wreath of flowers of Kino and Jungle flame,
with white needled petal
Bloomed at the top of a big Palmyra tree
On his shiny black hair

Like a young tusker
Fought against a tiger
His anger has not subdued
No enemies shall escape him
The same eyes, stared red at his foes
Now looked at his boy baby close

-Tamil Original - Poetess Avvai
- Translation Dr. C. Rajeswari

தைரிய லக்ஷ்மி

வை.மு.கோதைநாயகி அம்மாள்

அத்தியாயம்-3

தடதடவென்று வெளியே சென்றான். ஒவ்வொருவரு டைய வார்த்தையும் அவன் செவியில் ஒலித்து இதயத்தைத் தாக்குகிறது. இதென்ன போராட்டமான வாழ்க்கை. தனி அறையில் இருந்தாலும் நிம்மதி இல்லை. சினிமாவுக்குச் சென்றாலும் அங்கும் கதையில் வரதக்ஷிணையின் கொடுமை யைப்பற்றிய இலந்தானா? அதில்வரும் ஒவ்வொரு கபரும் சுடச்சுடச் சொல்லும் வார்த்தைகள் என்னை நையாண்டி செய்துக் குத்திக் காட்டி ஏளனமாகச் சிரிப்பதுபோலல்லவா தோன்றுகிறது. சீச்சீ ! இந்தப் பேயின் தாண்டவத்தைச் சினிமாவில் பார்த்தால் என்ன? நாடகத்தில் பார்த்தால் என்ன? மக்களுக்குப் புத்திவரப்போகிறதா என்ன! இக்கொடிய வரதக்ஷணை முன்பெல்லாம் ப்ராமணர்கள் சமூகத்தில் மாத்திரம் தாகண்டவம் செய்ததாகவும் மற்ற வகுப்பாரிடம் இல்லை என்றும் சொல்வதுண்டு. இப்போதா! அடேயப்பா! சர்வ ஜாதியிலும் புகுந்து அந்தப் பேய் எக்காளமிட்டு உருமு கிற கோராமை என்றுதான் மறையப்போகிறதோ?

மாதங்கள் ஓடி மறைந்து ஒரு வருஷ காலமும் ஆகி விட்டது. என் வாழ்க்கைப் பாதையிலிருந்து ஒரு அடிகூட எடுத்துவைக்கும் மாறுதல் உண்டாகவில்லை. நான் ன் லீவுக்குப் போகாததால் அம்மாதான வருந்திக் கடிதம் எழுதியிருக் கிறாளேயன்றி அப்பா எத்தகைய சந்தடியும் இல்லாமலிருக் கிறார். நந்தினியும் அப்பாவின் அந்தக் கடிதத்திற்குப் பிறகு ஒரு கடிதங்கூட எழுதவில்லை. அவள் காலேஜில் சேர்ந்து படிப்பதாகச் சிலர் சொல்கிறார்கள். சிலர், 'வீட்டில் தண்டப் பொழுது போக்கும் நீ எங்களுக்கு ஒத்தாசைக்கு வந்திரு' என்று உடன்பிறந்த சகோதரிகள் இளப்பமாகக் கூறுவதாக வும் அதனால் இவள் குன்றிவிட்டதாயும் சிலர் சொல்கிறார்கள். எது நிஜமோ? எது பொய்யோ! நிம்மதியற்ற மனத்திற்கு விமோசனந்தான் ஏது? என்று வைத்யநாதன் பாதிசினிமாவி லிருந்து எழுந்து தன் தனியறைக்கே வந்து சேர்ந்தான்.

அன்றைய மாலைப் பத்திரிகை அப்போதுதான் வந்தது. வழக்கப்படி பத்திரிகையைப் பிரித்தான். அதில் பலபல விஷ யங்களும் புகைப்படங்களும் இருந்தன. அவைகளில் ஒன்று வேஷங்களணிந்த சிலமாணவிகள் ஏதோநாடகம்நடித்தபோது எடுத்த புகைப்படமும் அதன் விவரமும் கீழே குறிப்பிடப் பட்டிருந்தது.

மகாத்மாஜி கல்லூரியில் வருஷாந்திர விழா கவர்னர் தலைமையில் நடந்தது. அக்கல்லூரி மாணவி நந்தினிவைத்ய நாதன் என்கிற மாதரசி "வரதக்ஷிணை பூதம்" என்கிற கதையைத் தானே எழுதி தானே கதாநாயகி பாத்திரம் ஏந்தி நடித்தார்கள். அந்த நாடகத்தின் பாத்திரங்கள் மற்ற மாணவிகள். மத்தியில் இருப்பவர் கவர்னர் ஜோதராய். பக்கத்தில்இருப்பவர் கல்லூரி ப்ரின்ஸிபால். இந்த நாடகம் மிகவும் நன்றாயிருந்த தாகவும் வரதக்ஷிணை பூதம் உலகத்தையே உறிஞ்சு அழிக்க வந் திருக்கும் காளகோடி விஷத்திற்குச் சமமானது என்றும் அந்தக் கொடிய பூச்சி எப்படியோ நம் சமூகத்தில் புகுந்து விட்டதென்றும், அதை அடியோடுவிறட்டியடித்து அதற்கு முற்றுப் புள்ளிவைத்து சாவுமணி யடித்துவிடவேண்டும் என்றும் ஸ்ரீமதி நந்தினி வைத்யநாதன் ச்ருஷ்டித்த கதை மிகமிக ஸ்வாரஸ்யமாயிருந்ததோடு அவர் நடித்த நடிப்பு அபாரமாய் உணர்ச்சி ததும்ப காண்போர்களின் இதயத்தைத் தொட்டுக் கண்ணீரைக் கக்கவைத்து ஆட்டிவிட்டது என்றாலும் மிகை யாகாது. அந்தக் கதையில் சொல்லியபடி இக்கொடுமையை ஒழிக்க சட்டம் அவச்யம் கொண்டுவரவேண்டியது தான் என் பதை நான்கூட ஒப்புக்கொள்கிறேன். சீக்கிறத்தில் அம்மாதிரி யொரு நல்லகாரியத்தைப் பொதுமக்கள் ஒன்றுகூடிச் செய்யத் தூண்டி சட்டமாக்கப் பாடுபடவேண்டும் என்றும் கவர்னர் பேசினார்: காலேஜ் ப்ரின்ஸிபால் ஸ்ரீமதி சகுந்தலாதேவி நந்தினி வைத்யநாதனைப் பாராட்டிப் பேசி அவருக்கு மாலை சூட்டினார்.

என்று வரைந்திருந்ததைப் படிக்கப்படிக்க வைத்யநாத னின் கண்ணீர் கட்டுமீறி வழிந்தோடுகிறது. நந்தினி வைத்ய நாதன்/என்னபொறுமை! வேண்டாமென்று விலக்கிய என்னைத் திரஸ்கரித்துத் தள்ளிவிடாமல் தற்கால நாகரீகத்தையொட்டி என் பெயரைக் கூடசேர்த்துக்கொண்டிருக்கிறாளே? இதை அப்பா பார்த்தால் என்ன ஆட்டம் ஆடுவார்! என் பெயரை வைத்துக்கொண்டது ஒரு குற்றம்,நாடகம் எழுதினது இரண் டாம்குற்றம், அதில் அவள் நடித்தது எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோலான குற்றம், அவள் காலேஜில் படிப்பது மன்னிக்கமுடியாத குற்றம். ஆக நான்கு குற்றங்களுக்கும் இப்போது நந்தினி ஆளாகிவிடுவாள் என்பதில் ஐயம் இல்லை. அடாடா! தன்னுடைய அனுபவத்தையே! தன்னுடைய- உணர்ச்சிகளையே கொட்டி எழுதியும் நடித்தும் சிறிது தணித் துக்கொண்டாளா! இந்தப் பத்திரிகையில் உள்ள இந்த விஷ யத்தை அப்பாவின் சினேகிதர்களும் பந்துக்களும் படித்தால் என்ன மதிப்பார்கள். அப்பாவின் அசட்டுக்குணம் எத்தனை தூரம் பாதிக்கப்பட்டு ஏச்சுக்கும் பேச்சுக்கும் இடமாகி விடும். அதனால் அவர் மனது இன்னும் எப்படித்தான் கோபமடையுமோ! தெரியவில்லையே? இதனால் என்ன அனர்த் தம் விளையுமோ! என்று வைத்தியநாதன் மனது தவிக்கிறான்.

நந்தினிக்கே கடிதமெழுதி அந்தக் கதையை எனக்கு அனுப்பும்படி கேட்டால், அனுப்புவாளா? ஊம். ஒருபோதும் அனுப்பமாட்டாள். அவளைக்கேட்பதால் என்னுடைய முட் டாள்தனந்தான் வெளியாகும்.. இதைவிட காலேஜ் ப்ரின்ஸ் பால் ஸ்ரீமதி சகுந்தலாவுக்குக் கடிதமெழுதினால் ஒருவேளை கிடைக்கலாமல்லவா! ஆம்! இப்படித்தான் செய்யவேண்டும். என்று தீர்மானித்து உடனே கடிதம் எழுதத் தொடங்கினான்.

மரியாதைமிக்க ப்ரின்ஸ்பால் அவர்களுக்கு

நான் ஒரு காலேஜ் மாணவன். இன்று நேயன் என்கிற பத்ரிகையில் உங்கள் காலேஜ் வருஷ விழாவின் கொண்டாட்ட வைபவமும் புகைப்படமும் பார்த்தேன். வரதக்ஷிணை என்கிற பேயை விறட்டி யடிக்கக் கங்கணங் கட்டிக் கொண்டுள்ள கோஷ்டியைச் சேர்ந்தவன் நான். தங்கள் காலேஜில் நடை பெற்ற நாடகத்தைப்பற்றி நேசனில் படித்தபோது நாங் களும் அதே நாடகத்தைப் போட்டு ஒருகிளர்ச்சியும் புரட்சியும் உண்டாக்கி வரதக்ஷிணை வாங்கும் பிள்ளைவீட்டுக்காரர்க ளாகிய கொள்ளைக்காரர்களை ஒரு ஆட்டு ஆட்டி வைக்க மிக வும் ஆசைப்படுகிறோம். இத்தகைய உபயோகமான கதையை எழுதியும் நடித்தும் புகழ்பெற்ற உங்கள் சிறந்த மாணிக்கம் போன்ற மாணவியாகிய ஸ்ரீமதி நந்தினி வைத்யநாதன் அவர் களுக்கு எங்கள் சந்தோஷத்தையும் பாராட்டுதலையும் தெரி விக்கவும். அந்தக்கதை அச்சு ஏறாத கையெழுத்து ப்ரதியா யிருப்பினும் தேவலை, அதை தயவு செய்து அனுப்பினால் பார்த்து ஒரு காப்பி நாங்கள் எடுத்துக்கொண்டு உடனே திருப்பி அனுப்பிவிடுகிறோம். உங்கள் மாணவியிடம் இதற்கு அனுதியும் வாங்கியனுப்பவும். ஏதாவது நிபந்தனைகளோ, கட்டணம் செலுத்த வேண்டியதோ இருந்தால் அதையும் தெரிவிக்கவும்.தாராளமாக அப்படியே நடந்துக்கொள்வோம்,

இந்த உதவியைத் தாங்கள் செய்தால் என்றுமே மறக்கமாட் டோம். பாரதமாதா கல்லூரிக்கு மகாத்மாஜி கல்லூரி உதவுவது மிகமிகப் பொருத்தமானதாகும்.

உடனே அனுப்பவும்.
இங்ஙனம்
வைதீச்வரன்.

என்று கடிதமெழுதி உடனே உரையிட்டு அனுப்பினான். இம்மாதிரி செய்வது சரியா ! இதனால் அப்பாவுக்குக் கோபம் அதிகமாகி என்ன நேருமோ என்ற பயமும் ஊடே சற்று வதைத்தது எனினும் தனது மனத்தில் பொங்கும் ஆத்திரம் தணிவதற்கு இது ஓர் வழியாகவே தோன்றியது. அவைகளை அனுப்பிய பிறகே மனத்தில் ஒரு நிம்மதி நிலவியயது.

மறுபடியும் இன்னொரு பத்திரிகை விலை கொடுத்து வாங் கினான் அதில் நந்தினியின் உருவம் சிறிது வேஷத்தினால் மாறி இருப்பினும் மல்கோவா மாம்பழம் போன்ற கன்னங்க ளின் எடுப்பும் சண்பகப்புஷ்பம்போன்ற தீர்மையான மூக்கின் அழகும் கயல்விழிகளின் ப்ரகாசமும் சடக்கென்று தெரிந்து விட்டது. கல்யாணத்தன்று எடுத்த புகைப்படத்தையும் இந்த படத்திலிருக்கும் நந்தினியையும் ஒப்பிட்டுப் பார்த்தான். உடல் மெலிவின் வித்யாஸமும் முகத்தில் ஒரு விதமானசோக மும், ஏக்கம், கவலை, முதலிய ரேகைகள் படர்ந்திருப்பதும் வெகு நன்றாகத் தெரிந்தது. தண்ணீரில் வாழவேண்டியமீனைத் தரையில்போட்டதுபோலிருக்கும் பரிதாபத்தைக் காண உண்மையில் தன் பிதாவின்மீது வந்த கோபமும் அடங்காத வெறுப்பும் அவனைக் கட்டு மீறி நடக்கும்படிச் செய்து விடும் போன்ற பயமும் உண்டாகியது. பத்திரிகையைப் புரட்டிக் கொண்டே வந்தான். பத்திரிகைக்காரர்கள் எழுதும் செய்திச் சுருள்பத்தியில் அந்தநாடகத்தின் விமர்சனம்வந்திருப்பதைக் கண்டு பரமசந்தோஷத்துடன் அதைப்படிக்கலானாள்.

“மகாத்மாஜி காலேஜின் வருஷாந்திரவிழா மேன்மை தங்கிய கவர்னரவர்களின் தலைமையில் நடைபெற்றது... இக் காலேஜ் ஆரம்பித்து சுமார் பத்து வருஷங்களாகிறது. பத்துவருஷத்திற்குள்ளாகஇக்காலேஜ்மிகமிகஉயர்ந்தநிலைமையில்வ்ருத்தியாகிவருகிறது குறிப்பிடத்தக்கது. கல்லூரி போதனா முறையைத் தவிர கைத்தொழில் வளர்ச்சி சமூகசீர்திருத்த ஸேவை, மாண னவிகள் ஒன்றுகூடி சன்மார்க்கத்தில் ஐக்ய பாவத்துடன் பலதுறைகளிலும் முன்னேற்றமடையவும் தொண்டு புரிவதற்காகவும் மகாத்மாஜி ஸேவாசங்கம் என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்து அதைமிகமிகச் சிறந்த முறையில் நடத்திவருகிறார்கள். இவ்வருஷ விழாவன்று பொதுமக்கள் உள்ளங்களை உருக்கும் வண்ணம்“வர தக்ஷிணைப்பேய்” என்கிற நாடகத்தை நடத்தினார்கள். கதையை எழுதிய மாணவி ஸ்ரீமதி நந்தினி-வைத்யநாதன் அவர்களே கதாநாயகியாக நடித்து ஒருபெரும்புரட்சியை விளைவித்துவிட்டார்கள்.முக்ய மாய் கதையில் சில பாகங்களைக் குறிப்பிடாமலிருக்க முடியாது.

கதாநாயகியாகிய இந்திரா என்பவள் வரதக்ஷிணையும் சீரும் சிறப்பும் போ தவில்லை என்கிற காரணத்தினால் தள்ளப் படுகிறாள். அவள் தானாகப் புக்ககம் சென்று மாமியார் மாமனார்காலில் விழுந்து தன்னை வேலைக்காரியாகவாவது ஏற் றுக் கொள்ளுங்கள் என்று கெஞ்சும் காட்சி மனத்தை உருக் கியது. கணவனிடம் வந்து இவ்வடிமையைக் கைவிடலாமா? அக்கினி சாக்ஷியாகக்கைப்பற்றிய ப்ரமாணத்தை மீறலாமா? என்பிதாவின் நிலைமைக்கு மனமிரங்கி என்னை ஒருவேலைக்காரி போல் நடத்தக்கூடாதா ! பதியின் கடமை சதியைத் தவிக்க விடுவதுதானா? பணத்திற்கா நீங்கள் மாலை இட்டீர்கள்? மாலை யிட்ட பெண்ணுக்கு தயை காட்ட உங்கள் இதயத்தில் பசை யில்லையா? நான் இப்படித்தவிப்பதுதான் உங்கள் விருப்பமா; சமூ முகத்தின் பெருமை இதுதானா! இந்து தர்மத்தின் மகிமை இதுதானா! நாட்டின் லக்ஷயங்கள் இதுதானா’ நான் தற்கொலை புரிந்து கொண்டால் அந்த பாதகம் உங்கள் காலைச்சுற்றாதா! ஒரு பெண்ணை அக்கினிசாக்ஷியாகக் கைப்பிடித்ததன் அடை யாளம் அவளை அக்கினிபகவானுக்கு இறையாகச்செய்வது தான் வீரபுருஷர்களின் தீரச்செயலா! உங்கள் காதில் என் கதறல் கேட்கவில்லையா! இம்மாதிரி வரதக்ஷிணைப்பேயின் நிர்மூலத்தாண்டவத்தின் பரிபவத்தில் மனது கொதித்து உடைந்து சின்னபின்னமாய்ச்சிதறிப் போவதன் விளைவால் அப்பெண்ணின் வாழ்வே பாழ்படுகிறது. சில இடங்களில் தகாத துன்மார்க்க வழிகளிலும் சென்று பாவியாகிறாள். இத் தகைய கதிக்குக்கொண்டுவந் தகணவனை – கொள்ளைக்கூட்டத் திற்கொப்பான பிள்ளைவீட்டுக்காரர்களை சமூகம் ‘ஒன்றுமே செய்வதில்லை.

இத்தகைய சதிகாரர்களின் செய்கையினால் மனமுடைந்து நாசமாய்விடும் பெண்களைப் பாழும் சமூகம் ஏற் பதில்லை. ப்ரஷ்டம் செய்து வேடிக்கைப் பார்க்கிறது. பின்னும் ஏசிப்பேசி இளப்பமாக்கி மடியச்செய்கிறது. சண்டாளசமூ கத்தின் ஊழலை வளர்க்கும் புல்லுருவிகளைக் கண்டிக்க எந்தச் சட்டமும் இல்லை. நீதியும் இல்லை. பெரியமனிதர்கள் என்று பட்டம், பதவி, பணம் இவைகளுக்காகவே உயிர் வாழும் பொம்மைகளும் வருவதில்லை. இந்த அனியாயத்தைக் கேட் பாரில்லையா! இந்த அக்ரமத்தை அடக்குவாரில்லையா! கடவு ளுமா கண்மூடிக்கொண்டு மவுனம் சாதிக்கிறது...

என்று இன்னும் ஏதேதோ வார்த்தைகளை ஆத்திரம் மீறிய உணர்ச்சியுடன் கடச்சுடசொல்லிநடித்த நந்தினிவைத்ய நாதனுக்கு முன்பு ஒரு தொழிலாளியான நாடகக்காரர்களும் வெட்கித்தலை குனியவேணும். கடைசீயில் நந்தினி, ''கொடிய வரதக்ஷிணைப்பேயே! எத்தனைக் குடும்பங்களில் நீ புகுந்து நாசச்தையும் க்ஷாமத்தையும் விளைவித்தும் இன்னும் உன் கொடிய பசி தணியவில்லையா! உன் ரௌத்திரத்தாண்டவத் தின் ஜதிஸ்வர அடைவுகள் முடியவில்லையா! இன்னும் சீற்றம் தணிந்து த்ருப்தி உண்டாகவில்லையா! இந்த உலகத்தில் இல் லாத பொல்லாத பெயர்களுடன் பில்லி சூன்யம் பேய் பிசாசு ஏவல் என்று உலாவும் கொடுமைகளை ஒட்டி த்வம்ஸம் செய்ய பல மந்திரவாதிகள் மூலை முடுக்குகளில் தோன்றி அவர்களே பெரிய ஆட்டம் ஆடவும், ஆட்டிவைக்கவும் சில பாவிகள் வேஷக்கார மந்திரவாதிகள் எத்தனையோ குடும்பங்களை இந்த வ்யாஜத்தின் மூலம் கெடுத்துக்குட்டிச்சுவரடிக்கவும், படிப்பே இல்லாத பட்டிக்காட்டு மூடஜனங்களை-ஏன் படித்த பட்டிண வாஸத்து ப்ரமுகர்களையும்கூட ஆட்டிவைக்கக்கிளம்பியிருக்கி றார்களே! உன்னைத் துலைத்துத்தலைமுழுகவும், உனக்குச் சாவுமணி யடித்துக் குழிதோண்டிப் புதைக்கவும் – உன்னை பூண்டோடு கிள்ளி எ றியவும் ஒரு மந்திரவாதியும் இல்லையா? உன்னுடைய கொடிய அரசாட்சி இருக்கும் வரையில் உலகம் உருப்படப்போவதில்லை. ஹதமாகிப்பொடிசூர்ணமாகி சூன்ய மாகி வரண்ட பாலை வனமாகி மடியத்தான் போகிறது.

ஹே! வரதக்ஷிணைப்பேயே! கருப்புமார்கெட்டில் கொள் ளையடித்தவனும் லஞ்சம் வாங்கி பெரிய பணக்காரனாகியவனும் தரகுவ்யாபாரம் செய்பவனும் சூதாடி குதிரைப்பந்தயமாடி மோசடியில் ஜெயித்துப் பணம்சேர்த்த பாதகர்களும் செய் யும் அட்டகாஸத்தைக்கண்டு,க்ரா ராமாந்திரங்களில் உழுது பயிரிட்டு ஊணும் உடையும் வாழ்வுக்கான சகல சம்ரக்ஷணையும் செய்து கொள்ள ஆகாயத்தை எதிர்பார்த்துஏங்கும் ஏழைக் குடிமக்களையுமா நீ பிடித்து ஆட்டுகிறாய்.

மாதம் 50 ரூபாய் சம்பளத்தில் 5-6-ஆத்மாக்களை வைத்து ரக்ஷிக்கும் வகையின்றி, தற்காலம் புதிய கொள்ளை யாகிய வீட்டுக்கு அட்வான்ஸ் பணத்தைக்கொட்டித் துலைக்கக் கதியின்றி, அன்றாடம் காலக்ஷேபம் எப்படி ஆகப்போகிறது என்று கதிகலங்கித் தவிக்கும் குடும்பத்திலும் நீ புகுந்துகாசம் செய்கிறாய்!உன்னை ஒழித்துத் தலைக்கட்ட உலகில் யாருமே இல்லையா... என்போ போன்ற பாவிகள் கணவனால் விலக்கப்பட்ட அவமானத்துடன் தாய் வீட்டிலும் சிறுமைப்பட்டுச்சாகும் நிலைமை: ஊரிலும் மதிப்பில்லை, வாழாவெட்டி! வாழாவெட்டி என்கிற ஏச்சு: சுற்றத்தவர்கள் இகழ்வது. படித்துப்பயன் பெறப் பணமில்லை. சிபார்சு செய்ய மனிதரில்லை, மனிதரிருந் தால் மனமில்லை, உதவி செய்ய உற்றாரில்லை, எப்படியோ படித்து வருத்திக்குவந்தால் வேலை யில்லாத் திண்டாட்டம். போக்கிரிப்பாவிகளின் கண்வலைக்குத் தப்பமுடியாத பயங்கரம் அப்பப்ப! ஒன்றா இரண்டா! வெறிபிடித்தப் பேயே ! என் போன்ற இளநங்கைகளின் உயிரைப் பலி வாங்கிக்கொண்ட பிற காவது உன்னை ஒழித்து விடும் நல்ல காலம் உலகத்திற்கு வருமா! அப்போதும் வராதா!கட்டிய கணவனும் வரதக்ஷிணை வரதக்ஷிணை என்று இரவு பகல் கொள்ளிவாய்ப் பிசாசுபோல் பறக்கும் அற்பமதியுடையமாமனார் மாமியார் முதலிய எல்லோ ரும் அந்தப் பெண் மடிந்த சுகத்தை, சந்தோஷத்தை, வாழ்க்

கையில் இன்பத்தை அடைந்து வாழட்டும். இதோ! இதோ! நான் பலியாகிறேன். வரதக்ஷிணைப்பேயே! என்னை விழுங்கி ஏப்பமிடு, இந்தச் சந்தோஷத்தை என் கணவனிடமும் என் மாமனாரிடமும் கூறிக் கும்மாளமிடு " என்று ஒரே உணர்ச்சி வெள்ளத்துடன் ஆவேசம்வந் தவளைப்போலக்கூறிவிட்டுக்கத்தி யால் குத்திக்கொண்டு கீழேவிழுந்த காக்ஷி சபையிலுள்ள அத்தனைபேர்களின் நெஞ்சை உருக்கிக் கண்ணீரைக் கக்க வைத்துவிட்டது"

என்றதைப் படிக்கும்போது, "ஹா... நந்தினி! நந்தினி." என்று தன்னையறியாதுவாய் விட்டுக்கத்திவிட்டான். அவனால் பொறுக்கவேமுடியாத வேதனை செய்துவதைக்கிறது. உண்மை யிலேயே நந்தினிகுத்திக்கொண்டு இறந்திருப்பாளோ... என்கிற எண்ணம் தோன்றி வதைக்கிறது. தகப்பனார் மீது வரும் கோபம் உச்சநிலையை அடைந்து கண்களில் தீப்பொறிபறக் கிறது. இனி இம்மாதிரி பயந்து கொண்டு வாளாவிருப்பதில் பயனில்லை. எப்படியாவது ஊருக்குச் சென்று அப்பாவிடம் இவைகளைக் காட்டி, சண்டையிட்டு "மரியாதையாய் நீங்கள் அழைத்துவருகிறீர்களா! நான் போய் விடட்டுமா!" என்று பிடிவாதம் செய்து நந்தினியை அழைத்துவருவதே சரி.என்று திடமான ஸங்கல்பம் செய்துகொண்டான். அதே நினைவில் உள்ளத்தில் ஏதேதோ யோசனைகள் சுழன்றுப் போராடின.

அகிலத்தை வென்றிடு அக்னிச்சிறகே,

முட்டி மோதக்கூடிய சவால்களில் சலிப்பெதற்கு
விமர்சனங்களை வில்லில் விட்டுவிட்டு உனக்கான

பாதையை நோக்கி ஓடிக்கொண்டிரு..

உணர்வுகளை கூந்தலிலே முடிந்தவளுக்கு இலக்கை நோக்கிய
பயணத்தில் சற்றும் தளராமல் சிறகடிப்பாள்...

கனலேறி கரண்டி பிடித்த கைகளுக்கு கைத்தட்டல்கள்
கானலாய் போனதே..

சமையலறையிலே முடங்கி முதாட்டி ஆக ஆசைப்பட்டுவிடாதே

எழுத்தாணி என்ற பிரபஞ்சத்தால் உன்னை அடையாளபடுத்த
மறக்காதே..

காலங்கள் மாற பாரதி கூற்றோ மெய்யாகிட காற்றும் சுழற்றாத
கம்பீர மங்கையாய் முளைக்கிறாள்..

கீழிமைக்கும் நொடியில் கிள்ளி எறிய நினைத்தவர்களை
பொருட்படுத்தாமல் எட்டுத்
திசையிலும் ஏட்டுச் சுவடியில் பார்க்க வைத்தாள்

எறும்புகளும் நின்று யோசிக்க எதார்த்தங்களை முறியடித்தாள்..

- இளங்கவி. தீபிகா சுகுமார்
எம். ஏ., பி. எட் (தமிழ்) ஆசிரியர்

அமெரிக்கத் தமிழப் பெண் ஆளுமைகள்–10

பூரணி தஞ்சாவூர் ரமேஷ்

(நேர்காணல்: மேனகா நரேஷ், நியூஜெர்சி)

நடனக்கலைஞர் ,உலக சாதனை சாதித்தவர், கின்னஸ் உலக சாதனை சான்றிதழ் பெற்றவர்,அழகிப் போட்டி வெற்றியாளர்,"கலை திலகம்" பட்டம் பெற்றவர், மாடல், மேக்-அப் கலைஞர், குடும்பத் தலைவி எனப் பல பொறுப்புகளை திறம்பட கையாளும் பூரணி தஞ்சாவூர் ரமேஷ் அவர்களை "சக்தி" இதழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதில் பெருமைக் கொள்கிறேன்.

அவரது பேட்டி இதோ உங்களுக்காக.

1. வணக்கம் பூரணி, சென்னை சிட்லப்பாக்கம் முதல் சிகாகோ வரை உங்கள் பயண சாதனைக் குறித்து?

வணக்கம் ! இது ஒரு புதிய அனுபவம். திடீரென்று என் கணவர், " அமெரிக்கா கிளம்பணும்," என்றார். ஒரு நிமிடம் நானும் யோசித்து பார்த்தேன் — என்னுடைய சாதனைகள், நடனப் பயணம், நடத்திய வகுப்புகள் எல்லாம் என்னவாகும்? அப்போதுதான் கொரோனா லாக்டவுனிலிருந்து வெளியே வர ஆரம்பித்த நேரம். என் குழந்தைக்கும் அப்போது ஒரு வயதுதான். என் தயக்கத்தை உணர்ந்த என் கணவர் என்னுடைய சாதனைகள், கலை ஆர்வம், கலைத் தொண்டு அமெரிக்காவிலும் தொடரலாம் என்று எனக்கு ஊக்கமளித்தார். அதற்கான உதவிகளையும் அவர் செய்தார். ஆமாம், நான் பல அமெரிக்க மாநிலங்களில் என்னுடைய நடனத்தை அரங்கேற்றியிருக்கிறேன். மேலும், உலக சாதனையும், கின்னஸ் சாதனையும் நடனத்தில் படைத்தேன்.

2. இந்தியாவில் நடனத்தில் மின்னிய நீங்கள் திருமணமாகி அமெரிக்கா வரும் சூழலில் உங்கள் டன ஆர்வத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்று நினனத்தீர்களா..

முதலில் பயமாகத்தான் இருந்தது — புது ஊர், புது நாடு, புது மக்கள். என்ன செய்யப்போகிறோம், இரண்டு சின்ன குழந்தைகளுடன் எப்படி கலைப் பயணம் தொடரப் போகிறது?" என்ற எண்ணங்கள். ஆனால் என் கணவரின் ஆதரவும் உற்சாகமும் எனக்கு ஒரு புதிய தைரியத்தைத் தந்தது. எல்லா சிரமங்களையும் இன்முகத்துடன் எதிர்கொண்டு, என் கலைப்பணியில் மீண்டும் முழுமையாக மூழ்கி விட்டேன்.

3. நியூஜெர்சி வந்தபிறகு கலைத்துறையில் உங்களையும் வளர்த்துக்கொண்டு அடுத்த தலைமுறையினரையும் வளர்க்க முடியும் என்ற நம்பக்கை எப்படி ஏற்பட்டது?

நான் பயந்தது போல் இல்லை — இங்கு நிறைய பேர் கலை ஆர்வத்துடன் இருக்கிறார்கள். அது எனக்கு கூடுதல் உற்சாகத்தையும், மேலும் மேலும் உயரவேண்டும் என்ற தூண்டுதலையும் தந்தது. சீனர்கள், அமெரிக்கர்கள், ஸ்பானிஷ் மக்கள் — அனைவரும் கலைத்துறையில் காட்டும் ஆர்வம் பாராட்டுக்குரியது. ஒவ்வொரு கலை நிகழ்வும், எனக்கு புதிய கண்ணோட்டத்தைத் தந்தது. இதுவரை நான் பார்த்த கலை என்பது ஒரு தனி வெளியில் இருந்தது — ஆனால் இப்போது அது ஒரு உலகளாவிய உரையாடலாக மாறியது. புது நாடு, புது மக்கள் என்ற பயம் தொலைந்து, என் உள்ளத்தில் ஒரு நம்பிக்கை வளர்ந்தது. இந்த நம்பிக்கையே , பரதக்கலையை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டுசெல்ல எனக்கு உத்வேகத்தை அளிக்கிறது.

4. ஒருவர் பலதுறைகளில் சாதிக்க முடியாது என்பது பொதுவிதி. ஆனால் நீங்கள் பரதநாட்டியம், கிராமிய நடனம், பாலிவுட் நடனம், மேற்கத்திய நடனம், ஃபேஷன் ஷோ என்னும் ஆடை அலங்கார அணிவகுப்பு, என்று பலதுறைகளில் எப்படிசாதிக்க முடிகிறது?

ஒரு கலைஞனுக்கு அப்படித்தான் — ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் முழுமுயற்சியோடு கையாளவேண்டும். அனைத்து வகையான நடனங்களையும் ஆடும்போதுதான் — "என்னால் எதுவும் முடியும்" என்பதை தான் உணர்ந்தேன். அதன் பிறகு, ஒவ்வொரு தடையும் உடைக்க வேண்டி உறுதியுடன் முடிவுசெய்து, தனித்துவமான பயிற்சிகளை மேற்கொண்டு மேலெழுந்தேன். எப்போதும் என் கணவர் சொல்வார்: "நம்மால் முடியவில்லையென்றால், யாரால் முடியும்? நமக்கு திறமையும், விருப்பமும், முயற்சியும்

இருந்தால், அனைத்தும் சாத்தியமே!" நான் பன்முகக் கலைஞராகத் திகழ என் கணவரின் ஆதரவே காரணம்.

5. 2024ஆம் ஆண்டு மே மாதம் அமெரிக்க வெள்ளை மாளிகையில் நீங்கள் பங்கேற்ற கலாச்சார அனுபவம் குறித்து?

இது என் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான தருணம் என்று நான் கருதுகிறேன். ஆசிய அமெரிக்கன், பசிபிக் ஐலேண்டர்ஸ், நேடிவ் ஹவாயியன் கலாச்சார நிகழ்ச்சியில் பங்கேற்றது வித்தியாசமான அனுபவமாக இருந்தது. எனக்கு அழைப்பு வந்தது என் பாக்கியமாகக் கருதுகிறேன்.வெளிநாட்டுக் கலைக்காக, அமெரிக்க மண்ணில் விழா எடுப்பதென்பது மிகப் பெரிய விஷயம். அதில் நான் பங்கேற்றது, மிகவும் பெருமையாக நான் கருதுகிறேன்.

6. தஞ்சை பெரிய கோவிலில் நடனம் ஆடியதும், துல்ஹான் எக்ஸ்போவில் நடனம் ஆடியதும் பற்றி உங்கள் ஒப்பீடு ?

இரண்டிற்கும் ஒற்றுமை நடனம்தான் — ஒரு கலைஞனுக்கு மேடையே முக்கியம் என்று நான் நம்புகிறேன். கலைக்கு மொழி, இனம், தேசம் கிடையாது என்பதற்குக் இது ஒரு எடுத்துக்காட்டு.தஞ்சையில் அரங்கேற்றிய நடனத்தை கடவுளுக்கு சமர்ப்பித்ததால்தான், கடவுளின் ஆசீர்வாதத்தால், எனக்கு துல்ஹான் எக்ஸ்போவிலும் (Dulhan Expo), நடனக் கலை ஆர்வம் உள்ளவர்களின் முன்பாக நடனமாட வாய்ப்பு கிடைத்தது. இது எனக்கு மிகப் பெரிய பெருமையாகக் கருதுகிறேன்.

7.யுனெஸ்கோ கவுன்சலில் நடனக் கலை உறுப்பினராக உங்கள் பங்களிப்பு என்ன?

யுனெஸ்கோவில், உறுப்பினராவது அவ்வளவு சுலபமல்ல. கலைஞர்களின் நடன சாதனையை பரிசீலனை செய்த பிறகுதான் அவர்கள் சம்மதம் கூறுவார்கள். கூடிய விரைவில் பல நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளேன். அதைக் தொடர்ந்து, நியூயார்க் தியட்டர் ஃபெஸ்டிவலில் இந்த வருடம் டிசம்பரில் பங்கேற்கப்போகிறேன்

8.நடனம் உடலுக்கும் மனதுக்கும் மிப்பெரியபயிற்சி. ஆனால் இன்று கல்வியே பிள்ளைகளின்நேரத்தை எடுத்துக்கொள்கிறது. நடனப்பயிற்சியால்உங்கள்மாணவர்களின் கல்வி நேரம் பாதிக்கப்படுகிறதா?

இல்லை, என் மாணவிகளின் கல்வி பாதிக்கப்படவில்லை என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும். நடனம் அவர்களது ஒருங்கிணைப்பு திறன், ஒழுக்கம், மன அமைதி மற்றும் நேர மேலாண்மை ஆகியவற்றை மேம்படுத்துகிறது. என் மாணவிகள் பள்ளியிலும், கல்வியிலும் சிறந்து விளங்குகிறார்கள் என்பதில் எனக்குப் பெருமையே. நடனமும் கல்வியும் சமநிலையுடன் சென்றால் படிப்பைப் பாதிக்காது என்பது என் நம்பிக்கை.

9. திருமதி பாரத் பெடைட், கனலத்திலகம் விருது உள்ளிட்ட நினறய பாராட்டுகள், பட்டங்கள். இன்னும் என் சாதிக்கவேண்டும் என்று நினைக்கிறீர்கள்

இப்பொழுது இருக்கும் கலாச்சார சூழலும், வேகமான உலகத்தையும் பார்க்கும்போது, என்னால் முடிந்தவரை இளைய தலைமுறையினருக்கு நடனக்கலை மற்றும் இந்திய கலாச்சாரத்தை கொண்டு சேர்க்க வேண்டும் என்பதே என் எதிர்கால லட்சியம். இன்றைய இளைஞர்கள்தான் நாளைய எதிர்காலம் என்பது என் கருத்து.

10. நீங்கள் பங்கேற்ற கின்னஸ் உலக சாதனை நிகழ்வைக் குறித்து?

2024 ஆம் ஆண்டு மே 25-ஆம் தேதி, இல்லினாய்ஸ் மாநிலம், சிகாகோவில் உள்ள ரோஸ்மாண்டு திரையரங்கில், TNF, USA அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற கின்னஸ் உலகச் சாதனை முயற்சியாகிய மிகப்பெரிய தமிழர் நாட்டுப்புற நடன நிகழ்ச்சியில் பங்கேற்றேன். விடாமுயற்சியும், விருப்பமும், பயிற்சியும் இருந்தால், எந்த இலக்கையும் சாதிக்கலாம். இதுவே வெற்றிக்கான வழி.

11. கலைத்துறையில் உங்கள் எதிர்கால திட்டங்கள் குறித்து?

எனது எதிர்காலத் திட்டங்களில் மிக முக்கியமானது, அமெரிக்காவில் ஒரு தனித்துவமான நடனப்பள்ளியைத் தொடங்கி, இளம் தலைமுறையினருக்கு நடனம் சொல்லித்தர வேண்டும் என்பதேயாகும். அமெரிக்காவின் 50 மாநிலங்களையும் ஆன்லைன் நடன வகுப்புகள் மூலம் ஒன்றிணைக்க வேண்டும் என்பது என் கனவு. எதிர்காலத்தில் நாட்டிய நாடகங்களை (productions) நடத்த விரும்புகிறேன். இவையெல்லாம் நிறைவேற அயராமல் உழைப்பேன்.

பூரணியின் கனவு யாவும் நிறைவேற "சக்தி" இதழ் வாசகர்களின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துகள்!

பேட்டியாளர்
மேனகா நரேஷ்

ARANYANI

VIJENI

CHAPTER - 6

Let go of your past; it was just an experience!

Under the arching branches of the banyan tree, a three-year-old boy sat sucking his thumb and stared at his brother in awe. Sitting on his haunches, the teen brother pushed open a small tin box and began looking at the things that he had collected.

One of the things attracted the boy. “Anna!” he called and moved closer, taking unsteady steps. “Bhwhat izss that?”

The brother took the boy on his lap and smiled. “Vihaan, can you see this?” He showed the tiny seed in his hand. “Look! It looks like the shape of a face! Can you see the eyes and the lips here?” he asked, flashing the seed in front of him towards the sun.

The infant blinked his eyes innocently and grinned brightly when his brother started narrating a story about the seed.

The loud banging of the shovels and spades against the rock brought Vihaan out from his reverie, a pleasant memory of his elder brother. He was everything to him- a friend to share all his secrets, a teacher who taught him the hardships, a bodyguard who protected him from the bullies in school and an enemy when fights arose between them. He was him, he was all.

Sitting on the stump of a tree, Vihaan was scrutinising through pieces of broken stones at his feet. He had inherited the act of inspecting every speck of dirt from his elder brother. It had been years since he had seen him. How many years? He did not know; the count made him uneasy, and he suddenly wondered what his brother would be doing at the moment.

Sighing, he shifted his gaze over to the gang of workers plunging the hoe into the soil. The once beautiful village was now being dug for investigating the remains of a kingdom that

lived five hundred years ago. Of all the surrounding villages, this particular Athikoodoor village was believed to hold a deep history.

Sweat trickled down his forehead and his hands were sweaty and becoming sticky. Yet, all that he concentrated on was to investigate the silver item that had caught his eye. He picked it, rose, and rubbed the dirt from his face with the sleeve of his shirt.

After reaching for the magnifying glass placed on a wooden tray, he started inspecting the worn-out ring on his palm. It was the size of his thumb or for someone with the most significant fingers. On the outside, there was a drawing of an ancient goddess with crimson eyes and wide-open claws on it. Carefully, he dusted the ring and looked closer. There was some writing on the inside, and despite its enormous size, it was etched in minuscule lettering.

Vihaan completing his degree in archaeology, and working as an investigative journalist, his curiosity was awoken. He snatched up the ring and sought out to his extremely polite and intelligent manager.

"Rathnasamy," he called, as he recognised the brim of his bamboo hat next to the yellow tent.

"Yes," he replied without lifting his gaze from the stone that he was inspecting.

"I found this ring, and I was wondering if you could tell me what it is depicting." Vihaan handed him the piece he had uncovered.

The manager removed his hat, and Vihaan could see his rapidly receding hairline towards the patch of sparse hair at the back.

"Ah," he began, squinting at it in the bright light. "The inscription appears to represent some sort of goddess." He looked ahead at a tall and broad-shouldered man. "I think our company head can answer better. Yogesh!" he called and took a sip of water from the bottle placed on the table.

Yogesh was the CEO of the famous archaeology company, named Desire, which had branches all over the state. However, unlike the other CEOs who sat idle in their comfortable room, he was one of a kind who always worked in the site along with his employees. Despite his old age, he had a fit mind that would grasp anything. Even things that happened without his knowledge.

"What do you think of this?" Rathnasamy asked, screwing the cap back on the bottle.

The CEO stroked his baldhead. “The engraving looks like an angry goddess. In my culture, it is said that to even speak of them brings misfortune.”

“Is it?” Rathnasamy turned to Vihaan. “Then I think you should dispose it.”

“But I don’t believe in all this, Rathnasamy. Let me inspect this a little more.”

“It’s up to you! But be careful.”

He nodded at his manager and turned to leave. As he walked away, he had a distinct feeling of being watched. Turning around, he was surprised to see Rathnasamy looking in his direction. However, he was not looking at him, but at the ring, held tightly inside his palm. He shrugged it off and continued on his way.

“Vihaan!” He heard his friend calling him from a distance.

“Joss!”

“Come here,” Joseph called.

Vihaan and Joseph were college mates. After completing their degree, they had joined in different companies, and as years went by, they had lost touch with each other. However, a few months ago, when they met unexpectedly, Joseph had recommended Vihaan to join in his office for an upcoming project and he had agreed happily. That was how Vihaan was investigating the Athikoodoor village.

“You look as if you are going to crush down into pieces,” Joseph said. “You need to take intervals at times!”

“I am feeling a bit consumed... other than that, I am fine, Joss. Before everything you should see this.” Vihaan held his odd little discovery to him. “I’ve just been discussing it with Rathnasamy.”

“What did he tell about it?” he asked, stroking the cross over his neck, a mannerism when he indulged in the process of thinking.

“Well, he didn’t know much about it, so he asked our CEO to explain the engraving. Supposedly, he claims it is something called an angry goddess and said they are bad luck. He also stated it as a ‘Hidden One’”

“Hidden One?”

"Yes, he did not tell it to me directly, but I heard him talk to the manager."

Joseph stroked his little black goatee. "Sounds intriguing!"

"Hmm-Hmm."

"You'll be excited to know that I've found something of important myself."

Vihaan smiled up at him in anticipation. "What is it? A skeleton? A burial site?"

"Come and see for yourself."

They made their way carefully through the excavations, avoiding areas where major work was taking place. Joseph led him to one of the original dig sites, where the archaeologists had first started excavating. There was a wide pit dug into the ground. Vihaan crouched down, took the flashlight from his friend, and began investing the insides of the hole.

"Do you see it?" Joseph asked eagerly.

"Looks like some black stone."

"Yes! Yes!" He took a pebble and crouched down beside him. "Listen carefully." He threw it inside, waiting for it to hit the stone. "Did you hear it?"

Vihaan made a 'What are you trying to prove to me' face at his friend.

"You idiot, it is an underground tunnel!"

"What?"

"Yes, the stone is hollow, and it runs all the way from that corner to... I don't know where it ends." He shrugged his shoulders lightly. "But I bet you there is a cave or a chamber or a tunnel beneath it."

"I don't think so, Joss."

"This is where the capital of the kingdom was; you think the royals wouldn't have built an underground route for emergency purposes?"

"Hmmm."

"And I am sure the tunnel would pass through that temple."

“Temple?”

“Yeah, that old temple.” He stood up and dusted his hands. “Don’t tell me you haven’t visited it.”

“I don’t even know that there is a temple here.” Vihaan returned the flashlight to him. “I thought people scurried from this place long ago.”

“Yes, yes, for centuries Athikoodoor is left inhabited, but—”

“Sir!”

Joseph and Vihaan turned around, and a man in a dirty white vest and blue lungi stood before them.

“It is 4 30 sir,” he said, scratching behind his ear.

“Okay, okay... only 15 minutes break... I want your team to assemble soon,” Joseph ordered, and the man nodded before walking towards his group.

He turned his glance at Vihaan. “So where was I?”

“About Athikoodoor.” They both entered a tent and sat on the cloth chair across from each other.

“Yeah... people don’t live here, but the temple is so famous that lots and lots of people come often to visit it. They believe that it is a place where once the prayers of Arava ancestors echoed.”

“Oh...” Vihaan leaned sideways towards the corner and took a palm-leaf fan. “Is it so powerful?”

“Yeah. They say that when a place of worship becomes older, when the first worshippers had already become soil, their prayers become potent forces in the areas of prayer. And that gives more strength to the people who later come there to pray.”

“Hmmm...”

“And do you know there is no karuvarai–the womb chamber for the temple!”

“No karuvarai at all?”

He shook his head. “No... no... there is a karuvarai, but it is locked for centuries... and no one has the key and is unable to break it open.”

“Then what do people worship there?” Vihaan asked, furiously fanning around his neck.

“There is a snake idol, a small one. They do puja and prayers to it.”

“Snake?” The palm fan dropped from his hand and Joseph chuckled, looking at his shocked reaction. The fear of snakes was deep-rooted into Vihaan’s mind. He still did not know the reason for it, but the mere mention of the name would send shivers to his body.

“Yes, Vihaan. It is believed that a snake has been living in this village for centuries, and it is the main reason that people did not live here.” He leaned forward and hissed, “Everyone who wanted to stay in this village died of a snake bite.”

“What?” Vihaan’s eyes widened again in shock.

“These are just stories, da!” He patted Vihaan’s shoulders. “But you have to visit the temple once, it is nice... a five-hundred-year-old temple is always worth visiting.”

“Yeah, we shall go this evening.”

“Evening?” Joseph shook his head. “The temple will be open only till five in the evening, even if it is open past five, no one would come,” he said and stretched himself on the folding chair.

“Then we shall visit tomorrow morning.”

Joseph nodded.

“Vihaan sir.” The head of a worker popped inside their tent. “Rathnasamy sir is calling you to his tent.”

“I will be there in a minute.”

Arranging the papers into a file, Vihaan stood up and walked outside. As he left the tent, he could have sworn that he heard a whisper. He turned back towards the sound but could see nothing out of the ordinary. He shrugged it off, deciding an afternoon nap might be a good idea. Apparently, the tiredness was playing tricks on his mind.

***

“Vihaan, pass me that shovel,” Joseph said, having his gaze at the half-seen stone on the ground. “There are a few more spoils filled in.”

Vihaan was supposed to study the composition, age, and the intricate designs of the stones that Joseph passed him. He had to note down the details and submit it to their head. However, at the moment, he smiled to himself, having his focus completely on a chain that he held in his hand.

“Are you still with that chain?” Joseph asked, peeking at him. “At least pass me that shovel and continue your romance.”

Vihaan barely paid any heed to what his friend was saying. His gaze entirely over the chain, his mind lost in a dream...

“Aaru! Come over here,” Vihaan called, tapping the seat next to him.

“Wait, dear. I cannot find my jewellery box.” She opened and closed the dressing table drawers back to back after scanning its interiors.

“Aaru! When your husband calls you... you need to obey him.”

She raised her brows at him. “And when your wife is busy searching for something, you need to help her.”

“That is why I am calling you.”

Aarushi moved closer and playfully hit his shoulder. “So, this is all your work?”

He chuckled, opened a golden box, and flashed it in front of her. “Remember this? I want you to wear it.” He clasped the chain around her neck and gently stroked her collarbone. “You look like an angel.”

“Vihaan! I am already your wife... there is no need to play your charm to get me to your side.” She giggled like a little child.

“Aha! I wanted a kiss, but you found out my trick.”

“I love you, Vihaan, for everything you are to me.”

“I kn—”

Aarushi placed her finger over his lips and shushed him. Slowly she leaned forward, inches from his lip—

"VIHHHHHAANNNNN!"

"Arggg... what?" His lips curled unhappily, as he looked up from the chain at his friend gawking at him. "I was ruminating about her, and as usual you interrupted."

"Again with your daydreams, eh? Just pass me that shovel, you won't work and will not let me too."

"Don't act as if you have found the biggest secret."

"Of course I have."

"Do you know how beautiful the dream was? I have already started living with her. This chain is a symbol of our love."

"Yeah, I can see that." He looked at the chain and asked expectantly, "Anyway, it looks like the chain is almost centuries old. How your girl got it?"

"I have no idea, but will surely ask her after our marriage."

Joseph dusted the wet sand from the stone he had uncovered. "Marriage? Only if you meet her."

"Yesterday, I did!"

"Ah!" He walked over to the table and carefully placed the stone on a wooden tray. "Her birthday yesterday?"

Vihaan gave a vigorous nod.

"I still wonder why she asked you not to meet or talk to her for six months."

"Yeah, even me. Also, when I met her yesterday, she acted weird and never asked me about this chain." Vihaan gently stroked the impression of two elephants facing each other in the chain's medallion.

"Maybe that is another bizarre love test."

After a minute of silence, Vihaan said, “I had asked her to marry me, but I did not dare to face her and left the place without waiting for the response.” His fingers now traced along the round white stone in between the elephants.

“What? You proposed and did not even wait to hear her response?” Joseph rolled his eyes in shock. “You are an idiot! Did you at least call her?”

“No, I thought she would call me to tell her response.”

“You are such an idiot!” He took a file and scribbled something. “She would think you are not patient enough to listen to her response.”

“No, I did not mean I—” He watched Joseph a moment, not sure of what to say; and just shrugged.

Joseph kept the file inside the tray and placed it along with the other trays with various artefacts. “Yeah, I understand in what sense you did it, but she might get such a thought,” he said, rubbing his hands together.

“So should I just go and meet her at the school?”

“It is better to call her and ask if she is free if so take leave and spend some time with her.”

“Yeah, I will do that.” Vihaan placed the chain carefully in the golden box and stuffed it in his pocket. He rushed towards Rathnasamy’s tent to use the company’s landline phone. Fortunately, his manager was not in his tent, the only way to escape the unending questions he should have answered.

He knew her number at the back of his head and started swirling it one by one. After a couple of rings, the phone was answered.

“Hi, I would like to talk to you if you are free.”

“Who is this?” the woman on the other end inquired.

“This is Vihaan. I am so sorry that I had to leave soon. But that does not mean I was not patient enough to hear to your response. I was not strong enough to face you. I hope you understand me.”

“Sorry, I seriously don’t have the foggiest idea of who you are.”

The words choked his throat, and he steadied himself before replying, “Aarushi, it is me, Vihaan! We met yesterday at the station... I know you are angry... but do not treat me like a stranger.”

After a couple of minutes, Vihaan walked to his friend with a long face.

“What happened, da?”

“She has disconnected her landline, Joss.”

“What? For such a small thing?”

“Idiot! She has disconnected her number five months ago...” He exhaled, thinking of his stupidity to leave the place without even talking properly with her.

“Things will get clear if you meet her up.”

“Yes, you are right... we will go to Varaagur.”

“Not ‘we’ you!”

“Is there anything in my life, which I have done without you?” Vihaan chuckled before leaving in search of Rathnasamy to ask for leave.

தமிழணங்கு விருது வழங்கும் விழா

நாள். 19.08.2025.

சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து போற்றக்கூடிய அளவில் தீந்தமிழில் வார, மாத, ஆண்டு என வகைவகையான இதழ்கள் வண்ணமுற வலம் வருவதைப் பார்க்கிறோம்.

ஆன்றோர் சான்றோர் அறிவியல் ஆய்வுடையோர், உள்ளக் கருத்துகளை அள்ளித் தந்திடும் பெட்டகங்களாகத் திகழ்வதை உணர்கிறோம். அந்த வகையில் கடந்த மூன்றாண்டு காலமாக உலகெங்கும் பரவி வாழும் பற்பல தமிழ்ப் பேரறிஞர்கள் ,மருத்துவர்கள், அறிவியல் அறிஞர்கள், தொழில் முனைவோர் முதலானோரை, தேனை நாடிச் செல்லும் தேனீயாய், வயது நிலை கருதாது தமிழன்னைபோல இளமைத் துடிப்புடன் அலைபேசி வழியாகவும் நேரிடையாகவும் தொடர்பு கொண்டு அவ்வப்போது கட்டுரைகளையும் படைப்புகளையும் பெற்று, 'தமிழணங்கு' மாத இதழ் அச்சு மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் தரமான இதழாகத் தாங்கி வரச்செய்யும் மதுரை சொல்லரசி, மகத்தான ஆற்றல்மிகு கலையரசி, எண்ணத்தில் சுமையேந்தி , எழுத்தில் வடிவமைத்து உள்ளத்தில் உறுதியுடன் இன்சுவைப் பேச்சாளர், அன்பின் திருவுருவாய் ஆணவம் அற்றவராம் முனைவர். திருமதி. இராஜேஸ்வரி அம்மையாரின் செயல்பாடுகள் வியக்கவைக்கும் ஆற்றல் பெற்றவை.

அன்னைத் தமிழரின் அரும் பெரும் படைப்புகள் பற்பல அறிஞர்களின் நுண்மாண் நுழைபுலன்களை எழுத்துருவில் வடித்துக் காட்டும் எழுத்தாளர்களுக்கு விருதளிக்கும் விதமாக 19 விருதாளர்களைத் தேர்ந்தெடுத்து விழா சிறக்கச் செய்த அம்மையாரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

கோட்டூர்புரம் அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் விழா சிறப்பான முறையில் அமைய ஏற்பாடு செய்திருந்தனர் முன்னாள் மேயரும் மனிதநேய ஐ.ஏ.எஸ் அகாடமியின் தலைவருமான திருமிகு. சைதை துரைசாமி அவர்கள் தலைமையேற்க இசைந்திருந்தார். திடீரென தவிர்க்க இயலாத நிலையில் வரவியலாது போகவே, ஆற்றல் மிகு பேச்சாளரும், சமூகத் தொண்டு அமைப்பாளருமான திருமிகு இரவி சொக்கலிங்கம் அவர்கள் தலைமையேற்க தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கப் பட்டது. தில்லித் தமிழ்ச் சங்கச் செயலர் திருமிகு முகுந்தன் அவர்கள் விழாவிற்கு வந்து சிறப்பித்தது பெரும் மகிழ்வூட்டியது.

அம்மையார் அனைவரையும் வரவேற்று விருதாளர்களை அறிமுகம் செய்துவைத்தவிதம் சிறப்பாக இருந்தது. விருதிற்கு நேரிடையாக வரவியலாத அயல்நாடுவாழ் விருதாளர்கள் காணொளி வழியாக விருதேற்பினையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொண்டனர்.

ஏற்றமும் எழிலும் மிக்க வகையில் விருதாளர்கள் ஏற்புரையுடன் நன்றியினையும் தெரிவித்தனர். அம்மையாரின் மகத்தான பணியினைப் பாராட்டினர். நேரில் வரவியலாத காரணத்தால் அவர்தம் பரிந்துரையின் பேரில் அவர்கள் சார்பாக சிலர் விருதேற்று மகிழ்ந்தனர். மழலைச் செல்வங்கள் இரட்டையரின் கனிவான பேச்சு, இசை கேட்டவர் நெஞ்சை கொள்ளை கொண்டன.

விழா என்றால் விருந்தோம்பல் இல்லாமல் இருக்குமா! தமிழரின் பண்பாட்டில் சிறப்பிடம் பெறுவது விருந்தோம்பல்தானே! சுவைமிக்க சிற்றுண்டி, தேநீர் விருந்தளிக்க கூடிக் களித்தவிதம் சிறப்பாக இருந்தது. முனைவர் திருமதி. இராஜேஸ்வரி அம்மையாரின் சீரிய முயற்சியால் நடைபெற்ற விழா அம்மையாரின் நன்றி கூறலோடு மாலை 6.30 மணியளவில் நாட்டுப் பண்ணுடன் இனிதே நிறைவுற்றது.

தமிழணங்கு பன்மொழி ஆய்விதழ்

தமிழணங்கு இலக்கிய விருதுகள் 2025

19–08–2025

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்

அவர்களுக்கு

தமிழணங்கு இயற்றமிழறிஞர் விருது

வழங்கிச் சிறப்பிக்கின்றோம்.

வழக்கறிஞர் இ. சதீஷ் ராஜ்குமார்	பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி	முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
இதழ் வெளியீட்டாளர்	சிறப்பாசிரியர்	நிறுவனர் & ஆசிரியர்

தமிழணங்கு பன்மொழி ஆய்விதழ்

தமிழணங்கு இலக்கிய விருதுகள் 2025

19–08–2025

திருமிகு ஐயை திவ்யகுமாரி கண்ணம்மா

அவர்களுக்கு

தமிழணங்கு இயல்தமிழ் விருது

வழங்கிச் சிறப்பிக்கின்றோம்.

வழக்கறிஞர் இ. சதீஷ் ராஜ்குமார்	பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி	முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
இதழ் வெளியிட்டாளர்	சிறப்பாசிரியர்	நிறுவனர் & ஆசிரியர்

தமிழணங்கு பன்மொழி ஆய்விதழ்

தமிழணங்கு இலக்கிய விருதுகள் 2025

19–08–2025

முனைவர் ஜெயந்தி

அவர்களுக்கு

தமிழணங்கு இயல்தமிழ் விருது

வழங்கிச் சிறப்பிக்கின்றோம்.

வழக்கறிஞர் இ. சதீஷ் ராஜ்குமார்	பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி	முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
இதழ் வெளியிட்டாளர்	சிறப்பாசிரியர்	நிறுவனர் & ஆசிரியர்

தமிழணங்கு பன்மொழி ஆய்விதழ்

தமிழணங்கு இலக்கிய விருதுகள் 2025

19–08–2025

திருமிகு கனிமொழி

அவர்களுக்கு

தமிழணங்கு இயல்தமிழ் விருது

வழங்கிச் சிறப்பிக்கின்றோம்.

வழக்கறிஞர் இ. சதீஷ் ராஜ்குமார்	பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி	முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
இதழ் வெளியிட்டாளர்	சிறப்பாசிரியர்	நிறுவனர் & ஆசிரியர்

தமிழணங்கு பன்மொழி ஆய்விதழ்

தமிழணங்கு இலக்கிய விருதுகள் 2025

19–08–2025

முனைவர் மெய். சித்ரா

அவர்களுக்கு

தமிழணங்கு இயல்தமிழ் விருது

வழங்கிச் சிறப்பிக்கின்றோம்.

வழக்கறிஞர் இ. சதீஷ் ராஜ்குமார்
இதழ் வெளியிட்டாளர்

பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி
சிறப்பாசிரியர்

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
நிறுவனர் & ஆசிரியர்

தமிழணங்கு பன்மொழி ஆய்விதழ்

தமிழணங்கு இலக்கிய விருதுகள் 2025

19–08–2025

திருமிகு **மேனகா நரேஷ்**

அவர்களுக்கு

தமிழணங்கு இயல்தமிழ் விருது

வழங்கிச் சிறப்பிக்கின்றோம்.

வழக்கறிஞர் இ. சதீஷ் ராஜ்குமார்	பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி	முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
இதழ் வெளியீட்டாளர்	சிறப்பாசிரியர்	நிறுவனர் & ஆசிரியர்

தமிழணங்கு பன்மொழி ஆய்விதழ்

தமிழணங்கு இலக்கிய விருதுகள் 2025

19–08–2025

திருமிகு சம்சுல் ஹுதா பானு

அவர்களுக்கு

தமிழணங்கு இயற்றமிழறிஞர் விருது

வழங்கிச் சிறப்பிக்கின்றோம்.

வழக்கறிஞர் இ. சதீஷ் ராஜ்குமார்	பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி	முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
இதழ் வெளியிட்டாளர்	சிறப்பாசிரியர்	நிறுவனர் & ஆசிரியர்

தமிழணங்கு பன்மொழி ஆய்விதழ்

தமிழணங்கு இலக்கிய விருதுகள் 2025

19–08–2025

முனைவர் தேமொழி

அவர்களுக்கு

தமிழணங்கு இயற்றமிழறிஞர் விருது

வழங்கிச் சிறப்பிக்கின்றோம்.

வழக்கறிஞர் இ. சதீஷ் ராஜ்குமார்
இதழ் வெளியீட்டாளர்

பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி
சிறப்பாசிரியர்

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
நிறுவனர் & ஆசிரியர்

தமிழணங்கு பன்மொழி ஆய்விதழ்

தமிழணங்கு இலக்கிய விருதுகள் 2025

19–08–2025

திருமிகு **வித்யா மனோகர்**

அவர்களுக்கு

தமிழணங்கு இயல்தமிழ் விருது

வழங்கிச் சிறப்பிக்கின்றோம்.

வழக்கறிஞர் இ. சதீஷ் ராஜ்குமார்	பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி	முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
இதழ் வெளியிட்டாளர்	சிறப்பாசிரியர்	நிறுவனர் & ஆசிரியர்

தமிழணங்கு விருது விழாவில் சிறப்பு விருந்தினர் டி.எல்லி தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர்
இரா. முருகந்தனுக்கு விழாத் தலைவர் பொறிஞர் சர்வீஸ் ட்டு சொசைட்டி
நிறுவனர் இரவி சொக்கலிங்கம் சிறப்புச் செய்தல்

தமிழணங்கு இழாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரிக்கு டி.எல்லித் தமிழ்ச்சங்கத்தின் பொதுச் செயலாளர்
பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்தல்